வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

வார மலர்

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 30.04.2023 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 142 | பக்கங்கள் : 20










07 மியன்மரால் இந்தியாவுக்கு பிரச்னை வருமா? எல்லையில் புதிய அச்சுறுத்தல்!



08 சஜித்தை கைவிட்டு ஜனாதிபதியின் பயணத்தில் ஐக்கிய மக்கள் சக்தியினர்?



09 மறக்கமுடியாத போராட்டத்தில் ‘9 – மறைக்கப்பட்ட கதை’



10 மதமாற்றம் இரு பக்க காரணிகளையும் விளங்கி கொள்ளல்


# அமைச்சு பதவிகளை ஏற்குமாறு எதிர்க்கட்சிகளை அழைக்கவில்லை

## ஜனாதிபதியின் ஆலோசகர் பகிரங்க அறிவிப்பு

கொழும்பு, ஏப்ரல் 30

**அமைச்சு பதவிகளை ஏற்குமாறு எதிர்க்கட்சிகளுக்கு நாம் அழைப்பு விடுக்கவில்லை. மாறாக ஏனைய வழிகளில் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்புகளை வழங்குமாறே கோருகின்றோம் என்று ஜனாதிபதியின் ஆலோசகரும் அவரின் பணியகத்தின் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும்,“எதிர்க்கட்சிகள் இந்த சந்தர்ப்பத்தில் அரசியல் நோக்கத்துக்காக மாத்திரம் செயல்படுவதா அல்லது நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு உதவுவதா என்று சிந்திக்க வேண்டும்.

இதற்கான பகிரங்க அழைப்பு ஜனாதிபதி ரணில்

19

# விபத்தில் காயமடைந்த இளைஞர் உயிரிழந்தார்!



வடமராட்சி, ஏப். 30

ஹைஏஸும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் படுகாயமடைந்த இளைஞர் நேற்று உயிரிழந்தார்.

வடமராட்சி - புலோலியை சேர்ந்த சுந்தரமூர்த்தி சத்தியன் (வயது 27) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

ஏ-9 நெடுஞ்சாலை, ஆனையிறவில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தில் இளைஞர் படுகாயமடைந்திருந்தார்.

கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

இந்த நிலையில், சிகிச்சை பலனின்றி இளைஞர் நேற்று சனிக்கிழமை காலை உயிரிழந்தார். (ஐ-02)

# ஈஸ்டர் தாக்குதலை நடத்த முன்னர் அல்-கெய்தா குழு இலங்கை வந்தது!



விரிவான செய்தி 03ஆம் பக்கத்தில்

# 52 அரச நிறுவனங்களுக்கு தகுதி ரீதியில் தலைவர்கள்!

## நிபந்தனையில் கவனம் செலுத்த சம்பிக்க ரணவக்க ஆலோசனை!

கொழும்பு, ஏப். 30

சர்வதேச நாணய நிதியத்தின் வரி கொள்கை மறுசீரமைப்பு நிபந்தனையை விரைவாக செயல்படுத்திய அரசாங்கம் நிர்வாக கட்டமைப்பில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள் தொடர்பான நிபந்தனைகள் தொடர்பில் கவனம் செலுத்தவில்லை. 52 அரச நிறுவனங்களின் தலைவர், பணிப்பாளர்கள் அரசியல் தலையீடு இல்லாமல் தகுதி, துறைசார் திறமையுடன் நியமிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனை இதுவரை செயல்படுத்தப்படவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

43ஆவது படையணியின் பணிமனையில் நேற்று

19

# மின்சாரம் தாக்கி இளைஞர் மரணம்!

வவுனியா, ஏப். 30

ஆலய திருவிழாவில் பங்கேற்ற இளைஞர் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.

வவுனியா - எல்லப்பர் - மருதங்குளம் பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் நா. கபிலன் (வயது -29) என்பவரே

19



# எலிக் காய்ச்சல் பரவும் அபாயம்!

கொழும்பு, ஏப். 30

அதிக மழையுடனான வானிலையால் எலிக் காய்ச்சல் பரவும் அபாயம் அதிகம் காணப்படுவதாக அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞான ஆய்வுப் பிரிவு எச்சரித்துள்ளது.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் நாடுமுழுவதும் 2500 பேர் எலிக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர். காலி, மாத்தறை மாவட்டங்களில் மாத்திரம் 19 பேர் எலிக்காய்ச்சலால் உயிரிழந்தனர். அத்துடன், 229 பேர் எலிக் காய்ச்சலுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மகிந்தவை பிரதமராக்க காய் நகர்த்துகிறது சீனா?

கொழும்பு, ஏப். 30

மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் பிரதமராக நியமிக்கும் விதமான காய் நகர்த்தலை சீனா செய்து வருகிறது என்று தென்னிலங்கை ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அண்மைக்காலம் வரை ஒதுங்கியிருந்த முன்னாள் ஜனாதிபதியும் பிரதமருமான

19

# சீரணி நாகபூசணி அம்மனுக்கு 1,008 பானைகளில் பொங்கல்!



யாழ்ப்பாணம், ஏப். 30

சண்டிலிப்பாய் சீரணி நாகபூசணி அம்மன் ஆலயத்தில் நேற்று 1008 பானைகளில் பொங்கல் நடைபெற்றது.

இந்த ஆலயத்தின் பெருந்திருவிழா கடந்த 19ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

19

# ஊரெழுவில் கோர விபத்து வயோதிப பெண் மரணம்!

## மருத்துவமனையில் சேர்க்கும்முன் அவரின் 6 பவுண் நகைகள் அபேஸ்!

யாழ்ப்பாணம், ஏப். 30

சைக்கிளில் சென்ற பெண்ணை பின்னால் வந்த பட்டா ரக வாகனம் மோதித் தள்ளியதில் வயோதிப பெண் ஒருவர் படுகாயமடைந்து மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட பின்னர் மரணமானார்.

விபத்தை ஏற்படுத்திய பட்டா வாகனத்தில் இருந்தவர்களே மூதாட்டியை மருத்துவமனையில் சேர்ப்பிப்பதாகக் கூறிவிட்டு அவரை மருத்துவமனையில் சேர்த்து விட்டு அங்கிருந்து தப்பித்துள்ளனர்.

இதனிடையே, தனது மனைவி அணிந்திருந்த சங்கிலி, காப்பு, மோதிரம், தோடு என 6 பவுண் நகைகள் அவர் மருத்துவமனையில் சேர்க்கப்படும் முன்னமே களவாடப்பட்டுள்ளன என்று இறந்த பெண்ணின் கணவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்

19

## இப்படியும் நடக்கிறது...!

நண்பர் ஒருவர் பிரான்ஸிலிருந்து தான் எழுதிய கடிதம் ஒன்றை வட்ஸ்அப்பில் அனுப்பியிருந்தார்.

அது ஒரு முறைப்பாட்டு கடிதம். அதனை ஏன் இந்த ஊர்க்குருவியிடம் அனுப்பினார் என்பது தெரியவில்லை. அதனால் அதனை கண்டு கொள்ளாமல் விட்டுவிட் டேன்.

சில நாட்களின் பின்னர் அந்தக் கடிதத்தை எழுதியவர் தொலைபேசியில் பேசினார். "அந்தக் கடிதம் குறித்து எழுதுவீர்கள் என்று இதுவரை தினமும் உங்கள் பத்திரிகையை பார்த்துக் கொண்டிருந்தேன். ஆனால், நீங்கள் அதனை கண்டு கொள்ளவில்லை அது தான் இப்போது பேசுவதற்காக எடுத்தேன்", என்றார்.

"அந்தக் கடிதத்தை நீங்கள் அனுப்ப வேண்டியவருக்கு அனுப்பிவிட்டீர்களா", என்று கேட்டேன்.

"அவருக்கு எழுதுவதிலும் பார்க்க அது உங்கள் பத்திரிகையில் வந்தால்தான் இனி இது போன்ற தவறுகளை யாரும் செய்யமாட்டார்கள்", என்றார் அவர்.

"இது ஒரு மத விவகாரம். இதனை பகிரங்க வெளியில் கதைப்பது சரியாக இருக்காது என்பதால்தான் அதனை தவிர்த்துவிட்டேன்", என்றேன். அவர் விடுவதாக இல்லை.

"சைவ சமயத்தவர்கள் நல்லை ஆதீனத்துக்கு உரிய கௌரவத்தைக் கொடுக்கவில்லை என்று ஒருநாள் எழுதியிருந்தீர்களே, அதுபோலத்தான் இதுவும். அது மாத்திரமல்ல, பிரான்ஸ் நாட்டில் வாழும் பல ஆயிரம் கத்தோலிக்க ஈழத்தமிழர்களுக்கு ஆன்மீகப் பணியாற்றுவதற்கு நியமிக்கப்படுகின்ற ஒரு பணியாளர் தவறு செய்தால் அதனை சுட்டிக்காட்ட வேண்டியதும் உங்களைப்போன்ற நேர்மையான பத்திரிகையாளர்களின் பணிதானே", என்றார் அவர்.

புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழ் கத்தோலிக்கர்களுக்கு பணியாற்றுவதற்காக புலம்பெயர் நாடுகள் எங்கும் அருட்பணியாற்றுவதற்காக ஒவ்வோர் அருட்பணியாளர்கள் இலங்கையிலிருந்து அனுப்பப்படுகின்றார்கள். பிரான்ஸ் நாட்டில் வாழும் கத்தோலிக்கர்கள் மத்தியில் அருட்பணியாற்றுவதற்காக யாழ்ப்பாண கத்தோலிக்க திருச்சபையிலிருந்து ஒரு பணியாளர் அனுப்பப்பட்டு அவர் அங்குள்ள தமிழ் கத்தோலிக்கர்களுக்காக பணியாற்றி வருகின்றார்.

பிரான்ஸில் நடைபெற்ற திருமண வைபவம் ஒன்று அங்குள்ள தமிழ் அருட்பணியாளரால் அங்குள்ள கத்தோலிக்க ஆலயத்தில் நடத்தி வைக்கப்படவிருந்தது.

திருமண வைபவம் என்பது ஒவ்வொருவர் வாழ்விலும் மறக்கமுடியாத நிகழ்வு. அதனை எவ்வளவு சிறப்பாக நடத்தி முடிக்கவேண்டுமோ அவ்வளவு சிறப்பாக நடத்துவதற்கே ஒவ்வொரு பெற்றோரும் விரும்புவார்கள்.

அதுவும் ஈழத்தமிழ் பெற்றோரைப் பொறுத்தவரை தமிழில் தேவாலயத்தில் பூசை வைப்பதைத் தவறாது செய்து வருகின்றனர். அதனால்தான் இப்போதும் புலம்பெயர் தமிழர்களின் அடுத்த சந்ததியும் தமிழை வாழ வைத்துக் கொண்டிருக்கின்றது.

பிரான்ஸில் அருட்பணியாற்றிவரும் அருட்பணியாளர் அந்தத் திருமண வைபவத்துக்கு வருவதாக ஒப்புக்கொண்டு ஏற்பாடுகள் நடந்து முடிந்துவிட்டிருந்தன. ஒரு கத்தோலிக்க தம்பதியரை திருமண வாழ்வுக்கு தயார்படுத்துகின்ற அருட்பணியையும் அவரே செய்தும் இருந்தார்.

திருமணத்துக்கு முதல் நாளன்று தொலைபேசியில் தொடர்புகொண்ட அந்த அருட்பணியாளர், தனக்கு கொரோனா தொற்று ஏற்பட்டு விட்டதாகவும், அதனால் தன்னால் வர முடியவில்லை என்றும் பிரான்ஸில் வாழும் பாண்டிச்சேரி தமிழர்களுக்கு அருட்பணியாற்றும் ஓர் அருட்பணியாளரை ஏற்பாடு செய்வதாகவும் கூறியிருந்தார்.

பெற்றோரும் வேறு வழியின்றி, திருப்திப்பட்டுக்கொண்டனர். திருமணம் நடந்து முடிந்த மறுநாள்தான் அது தெரியவந்தது.

அன்றைய தினம் நடைபெற்ற மற்றுமோர் இலங்கைத் தமிழரின் முதல்நன்மை திருப்பலியில் அந்த அருட்பணியாளர் கலந்து கொண்டிருந்தமை. இந்தத் திருப்பலியை நடத்துவதற்கென்றே அவர்களின் உறவினர்களான வேறு இரண்டு அருட்பணியாளர்கள் இலங்கையிலிருந்து தனிப்பட்ட வகையில் பிரான்ஸ் வந்திருந்தனர். தனது நண்பர்களுடன் பொழுதைக் கழிப்பதற்காக - இவரும் அந்த வைபவத்துக்கு சென்று மகிழ்வதற்காகவே இந்தத் திருமணத்தை அவர் தவிர்த்திருந்தமை பின்னர் தெரிய வந்திருக்கின்றது.

இந்தக் கடிதத்தை எழுதியவர் வேறு யாரும் அல்லர், சம்பவத்தை கேள்விப்பட்டதால் ஆத்திரமடைந்த ஒரு கத்தோலிக்கர் தான்.

கத்தோலிக்கர்கள் தம் வாழ்க்கையில் கடைப்பிடிக்கவென்று இயேசு பத்துக் கட்டளைகளை உருவாக்கினார். அதில் பொய்ச்சாட்சி சொல்லாதே என்பதும் ஒரு கட்டளை. அந்த அருட்பணியாளருக்கு இயேசு பொய் சொல்லாதே என்று கட்டளை இடவில்லை என்பதால்தான் கொரோனா தொற்று என்று பொய் சொன்னாரோ தெரியவில்லை.

ஒரு காலத்தில் வண. பிதா என்றுதான் இவர்கள் அழைக்கப்பட்டனர். பிதா- தந்தையே பொய் செல்ல தொடங்கினால் அந்த சமூகம் முழுவதுமே பொய் சொல்லத் தொடங்கி விடும்.!

- ஊர்க்குருவி

# அரசுக்கு எதிராக நாளை போராட்டம் இலங்கை ஆசிரியர் சங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஏப். 30

அரசாங்கத்தின் அடக்குமுறைகளுக்கு எதிராக நாளை திங்கட்கிழமை மாபெரும் போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "மே தினக்கூட்டத்தின் பேரணியானது மதியம் ஒருமணியளவில் கோட்டை புகையிரத நிலையம் அருகில் இருந்து ஆரம்பமாகவுள்ளது. மே தினக் கூட்டத்தில் மக்கள் முகம் கொடுத்துள்ள பிரச்சனைகள் மற்றும் மக்களின் கோரிக்கைகள் முன்வைக்கப்படவுள்ளன.

ரணில் தலைமையிலான அரசாங்கம் மக்களின் ஆணை இல்லாமலே செயல்படுகிறது. ரணில், ராஜபக்ஷ அரசாங்கம் சர் வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுடன் செயல்படுகிறது.

அவ்வாறு செயல்பட்டால் அவை மக்களுக்கு எதிரான நிலைப்பாட்டையே தோற்றுவிக்கும்.

நாட்டில் அரசாங்கத்தின் முறையற்ற செயல்பாடுகளை வெளியில் கொண்டு வருவதில் தொழில்சங்கங்கள் முன் நின்று செயல்படுவதனாலேயே பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு அரசு முயற்சிக்கின்றது." - என்றார்.

(ஐ)

# பொலிஸாரை அச்சுறுத்த முயன்றோர் தப்பியோட்டம்!

யாழ்ப்பாணம், ஏப். 30

தம்மை மறித்த பொலிஸாரை கிறீஸ் கத்தியை காட்டி அச்சுறுத்த முயன்ற இருவர் மோட்டார் சைக்கிளையும் கைவிட்டு தப்பி ஓடியுள்ளனர் என்று அறிய வருகின்றது.

தேசிய அடையாள அட்டையையும் அங்கேயே விட்டுச் சென்றிருந்தனர். விநோதன், ரஞ்சித் என்பவர்களே பொலிஸாருக்கு அஞ்சி அங்கிருந்து ஓடினர் என்று தெரிய வருகின்றது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை உரும்பிராய் சந்திப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. வீதியில் நின்ற போக்குவரத்து பொலிஸார் அவர்களை மறித்து சோதனையிட முயன்றபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிய வருகின்றது.

கைவிடப்பட்ட மோட்டார் சைக்கிள், தேசிய அடையாள அட்டைகளை நீதிமன்றில் பாரப்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

(ஐ)

# ஏப்ரல் மாத பணவீக்கம் சடுதியாக கடும் வீழ்ச்சி!

கொழும்பு, ஏப். 30

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் மதிப்பீட்டின் பிரகாரம் கடந்த மார்ச் மாதம் 50.3 சதவீதமாகப் பதிவாகியிருந்த பணவீக்கம் கடந்த ஏப்ரல் மாதம் 35.3 சதவீதமாக சடுதியாக வீழ்ச்சியடைந்துள்ளது.

இதற்கு உணவு மற்றும் உணவு அல்லாத பொருட்களின் விலைகளில் எதிர்பார்க்கப்பட்டதை விடவும் மிக உயர்வான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டமையே பிரதான காரணம் என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இதன்படி, கடந்த மார்ச்சில் 47.6 சதவீதமாகப் பதிவான உணவுப் பணவீக்கம் ஏப்ரலில் 30.6 சதவீதமாகவும், மார்ச் மாதம் 51.7 சதவீதமாக பதிவான உணவு அல்லாத பணவீக்கம் ஏப்ரல் மாதம் 37.6 சதவீதமாகவும் வீழ்ச்சியடைந்துள்ளது.

மேலும், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெணின் மாதாந்த மாற்றம் கடந்த ஏப்ரல் மாதம் (-1.39) சதவீதமாகப் பதிவானதுடன், இது கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெணில் இதுவரையிலும் பதிவான அதிகூடிய மாதாந்த வீழ்ச்சியாகும். இதற்கு உணவல்லாப்பொருட்களின் விலைகளில் (-1.37) சதவீதமாக அவதானிக்கப்பட்ட விலைவீழ்ச்சி காரணமாக அமைந்துள்ளது.

இதேவேளை, பொருளாதாரத்தின் அடிப்படைப் பணவீக்கத்தைப் பிரதிபலிக்கின்ற மையப்பணவீக்கம் கடந்த மார்ச்சில் 39.1 சதவீதத்திலிருந்து ஏப்ரல் மாதம் 27.8 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

இந்நிலையில், அண்மைக்காலங்களில் பின்பற்றப்பட்டுவரும் இறுக்கமான நாணய மற்றும் இறைக்கொள்கையின் விளைவாக வீழ்ச்சியடைந்துள்ள பணவீக்கமானது இவ்வாண்டு முழுவதும் தொடருமெனவும், இவ்வாண்டின் பிற்பகுதியில் பணவீக்கமானது ஒற்றை இலக்கப்பெறுமதிக்குக் கொண்டுவரப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுவதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

(ஐ)

# மே நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஏப். 30

வட மாகாண தனியார் வர்த்தக ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் மே தினமான நாளை திங்கட்கிழமை மோட்டார் வாகன ஊர்வலமொன்று நடைபெறவுள்ளது.

காலை 8.30 மணியளவில் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திலிருந்து மோட்டார் வாகன ஊர்வலம் ஆரம்பித்து யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் நிறைவுபெறவுள்ளது.

உழைப்பாளர் தினமான நாளை அனைத்து வர்த்தக நிலையங்களையும் மூடி ஊர்வலத்துக்கு ஒத்துழைப்பு தருமாறு வட மாகாண தனியார் வர்த்தக ஊழியர் சங்கம் கேட்டுள்ளது. (ஐ-03)

• • •

கிளிநொச்சி, ஏப். 30

"அனைத்து ஒடுக்குமுறைகளையும் எதிர்ப்போம், மக்களின் உரிமைகளை மீட்டெடுப்போம்", எனும் தொனிப்பொருளில் சமத்துவக் கட்சியின் மே தின நிகழ்வு கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பொது மக்கள், தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள், உள்ளிட்ட அனைவரையும் கலந்துகொள்ளுமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

• • •

நிந்தவூர், ஏப். 30

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் 30ஆவது ஆண்டு மே தினக் கூட்டமும், வருடாந்த பொதுக் கூட்டமும் முதல் தடவையாக வடக்கு மாகாணத்தில் நடைபெறவுள்ளது.

கல்முனையில் தலைமைச் செயலகத்தைக் கொண்டு இயங்கிவரும் அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் மே தினக் கூட்டம் நாளை திங்கட்கிழமை வவுனியா நகர மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தலைவர் எஸ்.லோகநாதன் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்த மே தினக் கூட்டத்திலும், வருடாந்தப் பொதுக் கூட்டத்திலும் வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருச்செல்வம் தினேஷ்குமார் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார். அத்துடன் வவுனியா நகர சபைச் செயலாளர் திருமதி. வி.நிஸங்க கௌரவ அதிதியாகவும் கலந்து கொள்வார்.

(ஐ-06)

# ஈஸ்டர் தாக்குதலை நடத்த முன்னர் அல்-கெய்தா குழு இலங்கை வந்தது!

## பயங்கரவாத தடுப்பு பிரிவு

கொழும்பு, ஏப். 30

**உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலுக்கு ஒரு வருடத்துக்கு முன்னர் அல்-கெய்தா பயங்கரவாத குழுவின் சில சக்தி வாய்ந்த உறுப்பினர்கள் இலங்கை வந்து புத்தளம் வனாத்தவில்லு, லாக்டோ தோட்டத்தில் ஈஸ்டர் தாக்குதல்களை திட்டமிட்டிருந்தனர் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.**

அல்-கெய்தா பயங்கரவாத குழு மற்றும் வெளிநாட்டு பயங்கரவாதிகளுடன் தொடர்பு வைத்திருந்ததாகக் கூறப்படும் ஈஸ்டர் பயங்கரவாத தாக்குதலின் முக்கிய சந்தேகநபர்களிடம் மீண்டும் விசாரணை நடத்தியதில் இந்த உண்மைகள் வெளியாகியுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களின் பிரதான சந்தேகநபரான மொஹமட் அப்துல்லா ஹக்கை மீண்டும் விசாரணைக்காக பயங்கரவாத புலனாய்வு திணைக்களத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட பின்னர் ஏப்ரல் 21ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணையில் இது தெரியவந்துள்ளதாகக் கூறப்பட்டது.

அவுஸ்திரேலிய அரசாங்கம் வழங்கிய அறிக்கைகளின் அடிப் படையில் ஏப்ரல் 21 ஆம் திகதி கொழும்பு மேலதிக நீதவான் பசன் அமரசிங்கவினால் மேலதிக விசாரணைகளுக்காக அவர் மீண்டும் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவுக்கு அழைத்து வர அனுமதிக்கப்பட்டார்.

விசாரணையில், அல்-கெய்தா பயங்கரவாதக் குழுவைச் சேர்ந்த 5 பேர் கடந்த 2018 ஆம் ஆண்டு நாட்டுக்கு வந்து, பல பகுதிகளில் ஆய்வு செய்து, தாக்குதல்களுக்கான திட்டங்களைத் தயாரித்தது தெரியவந்துள்ளது.

வெளிநாட்டு பயங்கரவாதிகளுடன் தொடர்பு கொள்ள அப்துல்லா பயன்படுத்திய கைபேசி ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களின் பிரதான சந்தேக நபரான மொஹமட் பௌசானுடையது என பயங்கரவாத தடுப்பு பொலிஸார் நேற்று முன்தினம் மனு தாக்கல் செய்துள்ளனர்.

சந்தேகநபரை விசாரிக்க நீதிமன்ற அனுமதியை பயங்கரவாத தடுப்பு பொலிஸ் புலனாய்வாளர்கள் கோரியுள்ளனர்.

அவுஸ்திரேலியாவில் கைது செய்யப்பட்ட அல்கெய்தா அமைப்பின் உறுப்பினர் ருமான் தாலிப் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் சந்தேகநபர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பயங்கரவாத தடுப்பு பொலிஸார் நீதிமன்றத்திற்கு அறிவித்தது.

தாலிப் பேருவளையில் வசிப்பவர். புத்தளம் வனாத்தவில்லுவவில் புத்தர் சிலைகளை சேதப்படுத்தியமை தொடர்பான வழக்கு மற்றும் லக்டோ வத்தை ஆயுதக் கிடங்கு தொடர்பான வழக்கின் பிரதான சந்தேக நபரான மொஹமட் பௌசன். ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள 24 சந்தேக நபர்களில் அவரும் அடங்குவார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அமரகீர்த்தி அத்துகோரள கொலை; மரபணு பரிசோதனைக்கு உத்தரவு

கொழும்பு, ஏப். 30

பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரளவின் உடலில் அந்நியர்களின் மரபணு மாதிரிகள் இருக்கின்றமை யால் விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ள சந்தேக நபர்கள் உட்பட அனைத்து சந்தேக நபர் களின் மரபணு மாதிரிகளையும் பெற்றுக்கொள்ளுமாறு அத்தனகல்ல நீதிவான் மஞ்சுள கருணாரத்ன நேற்று முன்தினம் குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு உத்தரவிட்டுள்ளார்.

பொலநறுவை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள மற்றும் அவரின் பாதுகாப்பு உத்தியோகத்தரான பொலிஸ் சார்ஜன்ட் ஜெயந்த குணவர்த்தன ஆகியோர் கடந்த மே மாதம் 9 ஆம் திகதி நிட்டம்புவை நகரில் வைத்து கொல்லப்பட்டனர்.

காலிமுகத்திடலில் அமைதியான முறையில் போராட்டம் நடத்தியவர்கள்மீது பொதுஜன பெரமுனவினர் தாக்குதல் நடத்தினர். இது திட்டமிட்டு செய்யப்பட்ட தாக்குதல் என்று தகவல் பரவியதை அடுத்து மக்கள் பெரமுனவினர் மீது தாக்குதல் நடத்தினர்.

அலரி மாளிகைக் கூட்டத்துக்கு வந்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த அமரகீர்த்தி தென்னக்கோனும் கோபமடைந்த பொதுமக்களின் கையில் சிக்கி, தாக்கப்பட்டு உயிரிழந்தார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு 40 சந்தேக நபர்களைக் கைது செய்தனர்.

நோய்வாய்ப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவர் சிறைச்சாலையில் உயிரிழந்தார். கொலைச் சம்பவம் தொடர்பில் 30 சந்தேகநபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் ஆறு சந்தேக நபர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# பாலியல் ரீதியாக தன்னை 6 பெண்கள் துன்புறுத்தினராம்!

## பிக்கு ஒருவர் பொலிஸில் முறைப்பாடு

கொழும்பு, ஏப். 30

6 பெண்கள் தன்னை பாலியல் ரீதியாக துன்புறுத்தினர் என்று பிக்கு ஒருவர் அளித்த முறைப்பாட்டை அடுத்து 5 பெண்களை பொலிஸார் கைது செய்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.

குருநாகல் மொன்னே குளம் - வீரதன பிரேதசத்தின் விகாரையை சேர்ந்த 48 வயதான பிக்கு ஒருவரே இந்த முறைப்பாட்டை செய்துள்ளார். இதன் அடிப்படையில் கைதான பெண்கள் நிக்கவெரட்டிய நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு, ஒரு பெண் மே 4 வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார். மற்ற நான்கு பெண்களும் பிணையில் விடுவிக்கப்பட்டனர். கைது செய்யப்பட்ட பெண்கள் 32, 68, 44, 46 மற்றும் 38 வயதுடையவர்களாவர்.

இந்த விகாரையை சேர்ந்த ஒரே ஒரு பிக்குவுக்கு கிராம மக்கள் சிலருடன் சில காலமாக தகராறு இருந்ததாக பொலிஸார் கூறுகின்றனர். சுமார் இரண்டு வருடங்களாக இரு தரப்பிலும் தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. ஒவ்வொரு முறைப்பாடுகளாக விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கிராம மக்கள் நன்கொடை சேகரித்தே இந்த விகாரையை கட்டினார்கள். கிராமத்தில் விகாரை இல்லாததால், இந்த விகாரை 2018இல் கிராம மக்களின் நன்கொடையில் கட்டப்பட்டது. இது ஒரு காலத்தில் தென் மாகாணத்தில் உள்ள ஒரு விகாரையில் வாழ்ந்த ஒரு பிக்குவுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. அப்போது அவர் கல்பிட்டியில் உள்ள ஒரு விகாரையில் இருந்தார்.

இந்த பிக்கு நீண்ட காலமாக இந்த விகாரையில் தங்கவில்லை என்றும் அவரின் நெருங்கிய நண்பர் அல்லது சீடர் ஒருவர் இந்த விகாரையில் வசித்து வருகிறார் என்றும் பொலிஸார் கூறுகின்றனர். இந்த விகாரையில் ஒன்பது பிக்குகள் அவ்வப்போது வசித்து வருகின்றனர்.

தற்போது கிராம மக்கள் இரு குழுக்களாக பிரிந்து விகாரைக்கு ஆதரவாக 10 முதல் 15 குடும்பங்கள் உள்ளதாகவும், எஞ்சிய குடும்பங்கள் விகாரைக்கு எதிராக இருப்பதாகவும் பொலிஸார் கூறுகின்றனர். விகாரையில் சமய வழிபாடுகள் முறையாக நடைபெறவில்லை என கிராம மக்கள் சாடுகின்றனர்.

விகாரையின் பெயர் பலகை மற்றும் மின் மோட்டர் ஆகியவை திருடப்பட்டன என்று அண்மையில் பொலிஸ் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது.

சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்பு, கிராம மக்கள் ஒரு குழு விகாரையை ஆக்கிரமித்து. அங்குள்ள பிக்கு வெளியேறும் வரை விகாரையை விட்டு வெளியேற மாட்டோம் என்று கூறினர். பொலிஸார் தலையிட்டு கிராம மக்களை விகாரையில் இருந்து அப்புறப்படுத்தினர். இப்பிரச்னை குறித்து மாவட்ட செயலாளரிடம் தெரிவிக்கவும் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

ஏப்ரல் 25ஆம் திகதி, கிராமத்தைச் சேர்ந்த பெண்கள் குழு ஒன்று விகாரைக்கு சென்று பிக்குவை விகாரையை விட்டு வெளியேறுமாறு வற்புறுத்தி துன்புறுத்தியதாக பொலிஸார் தெரிவித்தனர். தன்னை துன்புறுத்திய ஆறு பெண்களின் பெயர்களை பிக்கு கூறியுள்ளார். மேலும் ஒரு பெண் கைது செய்யப்பட உள்ளார். (ஐ)

# வேட்புமனு தாக்கல் செய்த அரச ஊழியர்கள் விரைவில் பணிக்கு!

## பிரதமர் தினேஷ் குணவர்த்தன

கொழும்பு, ஏப். 30

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு வேட்புமனு தாக்கல் செய்த அரச உத்தியோகத்தர்கள் தேர்தல் சட்டத்தை மீறாமல் தமது பணிகளைத் தொடர அரசாங்கம் வழி செய்யும் என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான வர்த்தமானி அடுத்த வாரம் வெளியிடப்படும் என்றும் அவர் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இதன்படி, அரச ஊழியர்கள் தாங்கள் வாக்களிக்கும் தொகுதிக்கு அருகாமையில் உள்ள அரச நிறுவனங்களில் பணியாற்ற முடியும்.

தொலைதூர பிரதேசங்களிலிருந்து அரச நிறுவனங்களுக்கு வருபவர்களுக்கு மீண்டும் அதே இடங்களில் கடமைகளைச் செய்வதற்கு வாய்ப்பு வழங்கப்படும் என பிரதமர் மேலும் தெரிவித்தார்.

"இது தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவுடன் விவாதித்தேன். தேர்தல் ஆணைக்குழு தேர்தலை ரத்து செய்யாமல் தேர்தலை தள்ளி வைத்துள்ளது. தேர்தல் ஒத்திவைக்கப்பட்டாலும் ரத்து செய்யப்படாத நிலையில் தேர்தல் சட்டத்தை மீறாத வகையில் செயல்படுவது அவசியம்", என்றார். (ஐ)

# அதிக விலைக்கு முட்டை விற்றோருக்கு 41 இலட்சம் ரூபாய் அபராதம் விதிப்பு!

கொழும்பு, ஏப். 30

அதிக விலைக்கு முட்டைகளை விற்பனை செய்த 29 வர்த்தக நிலையங்களுக்கு 41 இலட்சம் ரூபாய் அபராதமாக வசூலிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. வத்தளை, அத்தனகல்ல, நீர்கொழும்பு, மினுவங்கொடை, கம்பஹா மற்றும் மஹர நீதிமன்றங்களால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அதிக விலைக்கு முட்டைகளை விற்பனை செய்த இரண்டு வர்த்தக நிலையங்களுக்கு எதிராக இரண்டு இலட்சம் ரூபாய் அபராதம் விதித்து வலஸ்முல்லை நீதிமன்றம் உத்திரவிட்டுள்ளதாக நுகர்வோர் அதிகார



சபை தெரிவித்துள்ளது.

மற்றுமொரு வர்த்தக நிலையத்துக்கு மாத்தறை நீதிமன்றத்தால் ஒரு இலட்சம் ரூபாய் அபராதம் விதித்துள்ளதுடன், ஹற்றன் நீதிவான் நீதிமன்றத்தால் ஆறு பேருக்கு ஒரு இலட்சம் ரூபாய் வீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை அண்மையில் முட்டைக்கான கட்டுப்பாட்டு விலையை நிர்ணயித்து விசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டது. அதன்படி வெள்ளை நிற முட்டைகள் 44 ரூபாய்க்கும், சிவப்பு நிற முட்டைகள் 46 ரூபாய்க்கும் விற்பனை செய்ய முடியும்.

இருப்பினும், கட்டுப்பாட்டு விலைக்கு அப்பால் அதிக விலைக்கு முட்டைகளை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை தெரிவித்துள்ளது. (ஐ)

### யாழ்., மட்டு., திருமலை மாவட்டங்கள் உட்பட

# 55 சுகாதார அதிகாரி பிரிவுகள் டெங்கு அபாய வலயங்களாகின!

கொழும்பு, ஏப். 30

**யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மாவட்டங்கள் உட்பட 15 மாவட்டங்களில் 55 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகள் டெங்கு நோய் பரவல் அபாய வலயங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.**

இதில், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், குருணாகல், கேகாலை, இரத்தினபுரி கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, மாத்தளை, அம்பாந்தோட்டை, காலி, மாத்தறை மாவட்டங்களின் 55 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகள் டெங்கு அபாய பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, மேல்மாகாணத்தின் சகல பிரதேசங்களையும் உட்படுத்தி கடந்த 26ஆம் திகதி விசேட டெங்கு ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (ஐ)

# உயர் கல்வி அமைச்சராக எஸ். பி. திஸநாயக்கா?

கொழும்பு, ஏப். 30

அமைச்சரவை மாற்றத்தின்போது எஸ். பி. திஸநாயக்க உயர் கல்வியமைச்சராக நியமிக்கப்படுவார் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

எஸ். பி. திஸநாயக்க முன்னரும் கல்வி அமைச்சராக பதவி வகித்துள்ளதால் அவர் இந்த பதவிக்கு பொருத்தமானவர் என்ற கருத்து நிலவுவதாகக் கூறப்படுகின்றது.



மே மாதத்தில் அமைச்சரவை மாற்றம் இடம்பெறலாம் என ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஐ)

# காய்ச்சலால் பீடிக்கப்பட்டால் மருத்துவரை உடன் நாடுங்கள்!

### தேசிய டெங்கு நோய் கட்டுப்பாட்டு பிரிவு

கொழும்பு, ஏப். 30

எவரேனும் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு இருந்தால் உடனடியாக மருத்துவரை நாடுமாறும் தேசிய டெங்கு நோய் கட்டுப்பாட்டு பிரிவு பொதுமக்களிடம் கேட்டுள்ளது.

இது தொடர்பில், நாட்டில் தற்போது நிலவும் மழையுடன் கூடிய காலநிலையால் டெங்கு நோய்த் தாக்கம் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனிடையே, டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது என்றும் அந்தப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில் 29 ஆயிரம் வரையிலானவர்கள் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். 15 மரணங்கள் பதிவாகியுள்ளன என்று தெரிவித்த தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர்,

"மேல் மாகாணத்திலேயே அதிகளவிலான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். மேல் மாகாணத்தில் 14 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். இது டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்களில் 49 சதவீதமாகும். இதில், கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இது தவிர, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு பகுதிகளில் அதிக டெங்கு நோயாளர்கள் பதிவாகி வருகின்றனர்" - என்று கூறினார்.

அத்துடன், எவரேனும் ஒருவர் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு இருந்தால் உடனடியாக மருத்துவரை நாடுமாறு அவர் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டார். தற்போது நிலவும் மழை காலநிலையை கருத்தில் கொண்டு தங்கள் குடியிருப்பு பகுதிகள், பாடசாலைகள், வேலைத்தளங்கள் மற்றும் தொழில்சாலைகளில் டெங்கு நுளம்பு பெருகாதவாறு சுத்தம் செய்யுமாறும் பணியிடங்கள் மற்றும் தொழில்சாலைகளை துப்புரவு செய்யுமாறும் அவர் கூறியிருந்தார். (ஐ)

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை எதிர்த்து ஊடகவியலாளர்கள் நேற்று போராட்டம்!

கிளிநொச்சி, ஏப். 30

அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்துக்கு எதிராக கிளிநொச்சியில் நேற்று ஊடகவியலாளர்கள் சிவில் அமைப்புக்கள் இணைந்து போராட்டம் நடத்தினர்.

கிளிநொச்சி ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் வடக்கு மற்றும் தெற்கு ஊடக அமைப்புகள், சிவில் அமைப்புக்களின் பங்குபற்றுதலுடன் நேற்று கிளிநொச்சி மத்திய பேருந்து நிலைய வளாகத்தில் இந்த எதிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.




இந்த போராட்டத்தின்போது, "ஊடகங்களை அடக்கவே புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்", "பாராளுமன்ற உறுப்பினர்களே ஜனநாயத்திற்கு எதிராக சட்டத்தை ஆதரிக்காதீர்கள்", "ஜனநாயகத்தை பாதுகாக்கவே சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும் - ஒடுக்குவதற்கு அல்ல", "புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் கருத்து சுதந்திரத்துக்கு சாவுமணி", "மக்களாட்சியின் மாண்புக்கு மதிப்பளி, ஜனநாயகத்தை பலப்படுத்து" என்று எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்தனர். (ஐ)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நேற்று போராட்டம்!



முல்லைத்தீவு, ஏப். 30

காணாமல் போனோர் பணிமனையின் செயல்பாடுகளுக்கு எதிராக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் நேற்று முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போர் முடிவடைந்த பின்னர் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தமக்கான நீதி வேண்டி போராடி வருகின்றனர். இந்த நிலையில், கடந்த 2017 மார்ச் 8ஆம் திகதி முதல் முல்லைத்தீவில் தொடர்ச்சியான போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், காணாமல் போனோர் பணிமனையினர் ஊடாக அரசாங்கம் தம்மை அச்சுறுத்தி விவரங்களை பதிகிறது என்றும் சர்வதேச நீதி விசாரணை கோரிக்கையை முடக்கும் விதமான செயல்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் குற்றஞ்சாட்டியே நேற்று இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, காணாமல் போனோர் பணிமனையின் செயல்பாடுகள் வேண்டாம், சர்வதேச விசாரணையே வேண்டும் என்று கோரியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ஐ)

# கல்வியியல் கல்லூரிகளுக்கு மேயில் புதிய மாணவர்கள் இணைக்கப்படுவர்!

### கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த

கொழும்பு, ஏப். 30

மே மாத இறுதிக்குள் கல்வியியல் கல்லூரிகளுக்கு புதிய மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகளை நிறைவு செய்ய தீர்மானித்துள்ளோம். அத்துடன், மாணவர்களுக்காக கல்வியமைச்சு வழங்கும் 5,000 ரூபாய் கொடுப்பனவு மற்றும் தொழில்களைப் பெற்றுக் கொண்ட பின்னர் மீளச் செலுத்தும் அடிப்படையில் வங்கிகள் மூலம் வழங்கப்படும் 15,000 ரூபாய் கடனையும் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

கல்வியியல் கல்லூரிகளுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று முன்தினம் சபையில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், கல்வியியல் கல்லூரிகளுக்கு புதிய மாணவர்களை இணைத்துக் கொள்வதற்காக புதிய மாணவர்களுக்கு கடந்த ஜனவரி மாதத்தில் நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டன.

கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் இசற் புள்ளிக்கு அமைய - விடய தானங்களுக்கு ஏற்ப திறமை அடிப்படையில் விண்ணப்பங்கள் பெறப்பட்டு அவர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டுள்ளது.



என்றாலும் சிலர் மேன்முறையீடு செய்துள் ளனர். அதனால்தான் சற்று தாமதம் ஏற்படுகிறது. எனினும், எதிர்வரும் மே மாத இறுதிக்குள் கல்வி யியல் கல்லூரிகளுக்கு மாணவர்களை இணைக்கும் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்படும்.

அது மட்டுமன்றி அவர்களுக்கு கல்வி அமைச்சால் தற்போது மாதாந்தம் 5ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. அதற்கு மேலதிகமாக அவர்களின் உணவு தேவைக்காக வங்கிகள் ஊடாக 15,000 ரூபாய் வரை கடன் வழங்கப்படுகிறது. அவர்கள் கல்வியை முடித்து தொழிலுக்குச் செல்லும் போது அதனை மீளச் செலுத்தும் அடிப்படையிலேயே அது வழங்கப்படுகிறது.

மேலும், ஆசிரியர் கல்விச் சேவையில் 60 வீதமான வெற்றிடங்கள் நிலவுகின்றன. இது கடந்த மூன்று வருடங்களாக நிலவும் பிரச்னையாகும். எனினும், கடந்த வாரத்தில் அதற்காக நியமிக்கப்பட்ட உப குழுவின் அனுமதி கிடைத்துள்ளது. மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சை நடத்தப்பட்டுள்ளது. அதற்கான பெறுபேறுகளும் வெளியிடப்படவுள்ளன - என்றும் அவர் கூறினார். (ஐ)

# நீர்கொழும்பில் தமிழர் வெட்டிப் படுகொலை!

கொழும்பு, ஏப். 30

நீர்கொழும்பில் தமிழ் குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் நீர்கொழும்பை சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான சுப்பிரமணியம் சபாரத்தினம் (வயது 51) என்பவரே படுகொலையானார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் படுகொலை செய்யப்பட்டவரின் வீட்டுக்குள் வாள்களுடன் புகுந்த இனந்தெரியாத நபர்கள் அவரை வெட்டிக் கொன்றுவிட்டு தப்பிச் சென்றனர் என்று விசாரணையில் அறிய வந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் நீர்கொழும்பு பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu
30.04.2023 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், சித்திரை 17

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# தமிழ் 'லொபி'யின் தோல்வி?

அண்மைக்காலமாக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அவ்வப்போது சர்வதேச நாணய நிதியம் தொடர்பில் பேசி வருகின்றனர். அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி) பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் ஒற்றையாட்சியை நீக்குவது தொடர்பில் பலமுறை ஐ. எம். எவ்விடம் முறையிட்டும் பயனில்லை என்கின்றார். தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஐ. எம். எவ். இனப்படுகொலைக்கு துணைபோவதாகக் கூறுகின்றார். இதன்மூலம், தாங்கள் தமிழ் மக்களுக்கு நன்மை செய்து கொண்டிருப்பதாகவே இவர்கள் எண்ணிக் கொள்கின்றனர்.

ஆனால், விடயம் தெரிந்த பாராளுமன்ற உறுப்பினர் ஐ. எம். எவ். தொடர்பில் அலட்டிக் கொள்ளவில்லை. இதேபோன்று, புலம்பெயர் அமைப்புகள் சிலவும் ஐ. எம். எவ்வுக்கு அழுத்தம் கொடுக்க முடியுமென்று நம்பிக் கொண்டிருப்பதாகத் தெரிகின்றது. இது தொடர்பில் 'ஈழநாடு' முன்னரும் குறிப்பிட்டிருக்கின்றது. அதாவது, ஐ. எம். எவ்விடம் இனப்பிரச்னைக்கான அழுத்தங்களை எதிர்பார்ப்பது அதன் கொள்கை நிலைப்பாடுகள் தொடர்பான அறியாமையாகும். ஐ. எம். எவ். தொடர்பில் உரத்துப்பேசிவரும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கொஞ்சமாக விடயங்களை படிக்க வேண்டும் அல்லது அது தொடர்பில் அறிவுள்ளவர்களிடம் விடயங்களை கேட்டுத் தெரிந்துகொண்டு பேச வேண்டும்.

ஐ. எம். எவ்விடம் பல தடவைகள் முறையிட்டோம் பலனில்லையென்று ஒப்பாரி வைக்கும் போது - அதேபோன்று ஐ. எம். எவ். கண்டுகொள்ளவில்லை என்று ஒப்பாரி வைக்கின்றோம் என்றால் - ஒரு விடயம் தொடர்பில் நாம் சிந்திக்க வேண்டும். அதாவது, யுத்தம் நிறைவுற்று 14 வருடங்களுக்கு பின்னரும்கூட இப்போதும் மற்றவர்களிடம் முறையிட்டுக் கொண்டுதான் இருக்கின்றோம் என்றால், எங்களுக்குள் - நாங்கள் கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வி என்ன?

கடந்த 14 வருடங்களாக நாங்கள் உலகில் மேற்கொண்ட அரசியல் 'லொபி'களுக்கு என்ன நடந்தது? எங்களுடைய லொபிகளை மேற்குலகம் கண்டுகொள்ளவில்லையா - ஏன் அவர்கள் கண்டுகொள்ளவில்லை? - அல்லது எங்களுக்கு லொபியை சரியாக முன்னெடுக்கத் தெரியவில்லையா? இந்தக் கேள்விகளுக்கு முதலில் நாம் பதிலைக் காண முயற்சிக்க வேண்டும்.

நாங்கள் மீண்டும் மீண்டும் மற்றவர்கள்மீது குற்றச்சாட்டுகளை முன்வைத்துக் கொண்டிருக்கின்றோமே தவிர, அதற்கப்பால் எங்களால் நகர முடியவில்லை. குற்றச்சாட்டுகள் எங்களை மேலும் தனிமைப்படுத்திக் கொண்டிருக்கின்றது. ஏனெனில், எங்களைத் தவிர மற்றவர்கள் அனைவரையுமே குற்றவாளிகளாக பார்ப்பதும் - அவர்களை அவமானப்படுத்தும் வகையில் பேசுவதன் மூலம் தமிழ் மக்கள் எந்தவொரு நன்மையையும் பெற முடியாது. மாறாக மேலும் உலகத்திடமிருந்து தமிழர்களை தனிமைப்படுத்தவே இவ்வாறான பேச்சுகளும் செயலும் பயன்படும்.

மற்றவர்களை குற்றம்சாட்டும்போது - எங்களால் ஏன் முடியவில்லை - ஏன் நாங்கள் தொடர்ந்தும் பின்னடைவுகளை சந்தித்துக் கொண்டிருக்கின்றோம்? இந்தக் கேள்விகளுக்கான விடையை நாம் தேட வேண்டும். ஒருவேளை அரசியல்வாதிகளுக்கு இதற்கான ஆற்றலில்லை என்றால் புத்திஜீவிகள் என்போரும் சிவில் சமூக பிரதிநிதிகள் என்போரும் இது தொடர்பில் சிந்திக்க வேண்டும்.

# விற்றமின் 'டி' குறைபாட்டால் 25 வீதமான மக்கள் பாதிப்பு!

*கொழும்பு, ஏப். 30*

*நாட்டின் மக்கள் தொகையில் 25 வீதமானோர் விற்றமின் "டி" குறைபாட்டுக்கு உள்ளாகியுள்ளனர் என்று தெரிய வந்துள்ளது.*

*சிறுவர்கள், வயது முதிர்ந்தவர்கள், கர்ப்பவதித் தாய்மாரை உள்ளடக்கி நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இந்த விடயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பொரளை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் ஊட்டச்சத்து தொடர்பான பிரிவின் விசேட மருத்துவ நிபுணர் ரேணுகா ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.*

*விற்றமின் டி குறைபாட்டைக் குறைப்பதற்கு முடியுமான அளவு சூரிய ஒளி உடலில் படும்படி செயற்படுவது அவசியம் என அவர் வலியுறுத்தினார்.*

*சூரிய ஒளியின் மூலமே மனித உடலுக்கு அவசியமான விற்றமின் டி ஊட்டச்சத்து அதிக அளவில் கிடைப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.*

*காலை 10 மணி முதல் மாலை 3 மணி வரையிலான காலப்பகுதியில் சூரிய ஒளியில் இருந்து அதிக அளவில் விற்றமின் டி ஊட்டச்சத்தை பெற்றுக்கொள்ள முடியும். சாதாரணமாக நாளொன்றுக்கு 15 நிமிடங்களேனும் சூரிய ஒளி உடலுக்குக் கிடைப்பது அவசியம் - என்றும் அவர் தெரிவித்தார்.*

*(ஐ)*

# குறைந்த வருமானம் பெறுவோருக்கு சீன நிதியுதவியில் வீடமைப்பு திட்டம்

*கொழும்பு, ஏப். 30*

*சீனாவின் நிதியுதவியின் கீழ் கொழும்பில் குறைந்த வருமானம் பெறுவோருக்காக புதிய வீடமைப்பு திட்டங்களை நிர்மாணிக்க நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.*

*450 மில்லியன் டொலர் நிதியுதவியை சீனா இதற்காக வழங்கவுள்ளது. கொழும்பின் 5 இடங்களில் இந்த வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் சத்யானந்த தெரிவித்துள்ளார். இந்த திட்டத்தின் கீழ் 1995 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன. எதிர்வரும் இரண்டு வருடங்களுக்குள் இந்த வீடமைப்பு திட்டம் நிறைவு செய்யப்படவுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.*

*(அ)*

# சட்டவிரோத மீன்பிடி முல்லையில் 22 பேர் கைது!

*முல்லைத்தீவு, ஏப். 30*

*முல்லைத்தீவு - நாயாறு கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 22 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.*

*கிழக்கு கடற்பரப்பில் நேற்று முன்தினம் இரவு முன்னெடுக்கப்பட்ட ரோந்து நடவடிக்கையின் போது, சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று கடற்படை தெரிவித்துள்ளது.*

*சந்தேகநபர்களிடமிருந்து 8 டிங்கி படகுகளும் சுழியோடி உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன், நீர்கொழும்பு, முல்லைத்தீவு, கிண்ணியா, சீன துறைமுகத்தை சேர்ந்த 29 தொடக்கம் 56 வயதுக்கு உட்பட்டவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*சந்தேகநபர்கள் முல்லைத்தீவு மற்றும் திருகோணமலை உதவி கடற்றொழில் பணிப்பாளர் அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.(ஐ)*

# 96 ஆயிரம் சுற்றுலாவிகள் இம்மாதம் வருகை!

*கொழும்பு, ஏப். 30*

*சுற்றுலா பயணிகளின் வருகையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமையை அவதானிக்க முடிந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.*

*ஏப்ரல் மாதத்தில் இது வரையான காலப்பகுதியில் 96 ஆயிரம் சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக அதன் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ குறிப்பிட்டார்.*

*கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 61 ஆயிரம் வரையிலான சுற்றுலா பயணிகள் மாத்திரமே நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக அவர் கூறினார்.*

*இந்த மாதத்தின் நிறைவில் ஒரு இலட்சத்து 3 ஆயிரம் வரையிலான சுற்றுலாப் பயணிகளின் வருகை பதிவாகும் என எதிர்பார்க்கப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.*

*மேலும், இந்த ஆண்டின் முதல் 4 மாதங்களில் 4 இலட்சத்து 40 ஆயிரம் வரையிலான சுற்றுலா பயணிகளின் வருகை பதிவாகும் என எதிர்பார்க்கப்படுவதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் குறிப்பிட்டார். (ஐ)*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



பகிர்வு -76

# ஈடுசெய்ய முடியாத இழப்பொன்று...!

**கணபதி சர்வானந்தா**

ஈழத்து இலக்கியத்துறையை அலங்கரித்தவரும், தனது இறுதி மூச்சுவரை இயங்கிக்கொண்டே இருந்தவருமான ஈழத்து மூத்த படைப்பாளி குப்பிழான் ஐ.சண்முகன் அவர்கள் இழப்பின் துயரத்தை இதில் பகிர்வது பொருத்தம் என எண்ணுகிறேன்.

அவர் மறைவதற்கு முதல் நாள் அவரைச் சோலைக் குயில் அவைக்காற்றுக் களத்தினர் அழைத்துக் கௌரவப் படுத்தியிருக்கின்றனர். தனது எழுத்துக்கான விருதைத் தானே சென்று பெற்றுக் கொண்ட அவர் பாக்கியவான். விருதோடு விடைபெற்றுக் கொண்டார்.

ஈழத்துச் சமூகத்தின் முது பெரும் எழுத்தாளர் எனப் போற்றப்படுபவர் குப்பிழான் ஐ.சண்முகன். அவரின் முழுப் பெயர் குப்பிழான் ஐயாத்துரை சண்முகலிங்கம். அவர் உடலால் எம்மை விட்டுப் பிரிந்தாலும் ஈழத்து இலக்கிய உலகில் என்றும் சாகாவரம் பெற்றவர் என்பதைக் கீழ் காணும் அவர் பற்றிய எழுத்துகள் எமக்கு எடுத்துரைக்கின்றன. அவற்றை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்.

அவுஸ்திரேலியா , கானா பிரபாவின் முகநூல் பதிவு...

சுன்னாகப் பகுதியில் உள்ள குப்பிழான் என்ற ஊரில் ஓகஸ்ட் 1, 1946 ஆம் ஆண்டு பிறந்த அவர் தன் கல்வியை குப்பிழான் விக்னேஸ்வரா வித்தியாசாலை, புன்னாலைக் கட்டுவன் அமெ.மி.ஆங்கிலப்பாடசாலை, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆகியவற்றில் கற்று இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பட்டதாரிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். உயர்தர வகுப்புகளில் பொருளியல், தமிழ் ஆகிய பாடங்களிலும், இடை நிலை வகுப்புகளில் சமூகக் கல்வி, சமய நெறி ஆகிய பாடங்களிலும் சேவையாற்றியவர்.

கலாபூஷணம் விருது, ஆளுநர் விருது, பேராதனைப் பல்கலைக் கழகத்தின் சங்கச் சான்றோன் விருது உள்ளிட்ட விருது அங்கீகாரங்களைக் கொண்டவர். இதுவரை ஐந்து சிறுகதைத் தொகுதிகளையும், பிரபஞ்ச சுருதி என்ற கவிதைத் தொகுதியையும், அறிமுகங்கள், விமர்சனங்கள், குறிப்புகள் என்ற பத்தி எழுத்து நூலையும் வெளியிட்டுள்ளார். (ஜீவநதி பெப்ரவரி 2019)

இவரது படைப்பான "சாதாரணங்களும் அசாதாரணங்களும்" சிறுகதைத் தொகுப்பில் இவர் குறித்து எழுத்தாளர் சிலர் எழுதிய குறிப்புகள்."குப்பிழான் ஐ.சண்முகனின் எழுத்தின் வீச்சின் பரிமாணத்தைக் காட்டும் கோடுகளாக..."

எழுத்தாளர் குந்தவை குறிப்பிடுகையில்....
இளைஞர்களின் மன அவசங்கள், அவர்களால் வெளிப்படுத்தி உணர்த்திக் காட்ட முடியாத சோகங்கள், எதிர்பார்ப்புகள் இவற்றில் அவர்களிடையே எழும் நடைமுறைக்கு ஒத்துப்போகாத பிடிப்பற்ற தன்மை, இவற்றை அழகுணர்ச்சியுடன் சித்தரிக்கும்.

கலைஞர். எழுத்தாளர் அ.யேசுராசாவின் பதிவில்...
இவரது பாத்திரங்கள் எழுத்தாளனின் எவ்வித தலையீடுமின்றி தங்களைத் தாங்களே இயக்க வைக்கின்றன. கலையுலகின் நவீன திரைப்படங்களின் தாக்கத்தை சண்முகனின் பிற்பட்ட காலக் கதைகளில் காணலாம். "பளிச்", பளிச்சென சண்முகன் கதையை கடத்திச் செல்லும் பாணி அலாதியானது.

ஈழத்து இலக்கிய உலகில் சிறுகதை, கவிதை, பத்தி எழுத்துகள் என்று பன்முகப்பட்ட தளத்தில் தன் எழுத்துகளைத் தொடர்ந்து வந்தவர். அமரர் குப்பிழான் ஐ.சண்முகன் அவர்களின் ஆன்மா சாந்தியடைய வேண்டுகிறேன்.
– கானா பிரபா

நண்பர் அருண்மொழிவர்மன் அவர் தம் முகநூலில் எழுத்தாளர் குப்பிழான் சண்முகன் அவர்கள் பற்றி எழுதுகையில் "அவரது கோடுகளும் கோலங்களும் எனக்கு மிகவும் பிடித்த சிறுகதைத் தொகுப்புகளில் ஒன்று." எனக் குறிப்பிட்டு அந்நூல் பற்றி முன்னர் அவர் எழுதிய கட்டுரையொன்றிலிருந்து சிலவற்றைப் பகிர்ந்து கொள்கின்றேன்.

தொண்ணூறுகளுக்கு முன்னர் வெளியான ஈழத்துச் சிறுகதைத் தொகுப்புகள் குறித்து எழுதுவது என்று யோசித்தவுடன் தனித்துத் தெரியும் மற்றும் ஒருவர் குப்பிழான் ஐ. சண்முகன் அவர்கள். எழுபதுகளில் ஈழத்தில் படைப்பிலக்கியம் தொடர்பாகத் தொடர்ச்சியாக இடம்பெற்ற வாதங்கள், உரையாடல்கள் ஆகியவற்றின் தொடர்ச்சியாக படைப்பிலக்கியங்கள் வடிவத்திலும், உள்ளடக்கத்திலும் பல்வேறு மாற்றங்களைச் சந்தித்தன. அந்த நேரத்தில் இருந்த, அவர்கள் சார்ந்திருந்த இலக்கிய அணிகள், போக்குகள் என்பவற்றைப் புறந்தள்ளி ஒரு வாசகனாகத் தற்போது பார்க்கின்றபோது, மொழிக்கும் வடிவத்திற்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்து, அழகியலை முன்னிலைப் படுத்திய படைப்பாளிகளில் ஒருவராக குப்பிழான் ஐ. சண்முகன் இருக்கின்றார்.

அவரின் முதலாவது சிறுகதைத் தொகுப்பான கோடுகளும் கோலங்களும், அலையின் இரண்டாவது வெளியீடாக 1976ம் ஆண்டு மார்கழியில் வெளியாகியிருக்கின்றது. இத்தொகுப்பில் 1969 முதல் 1974 வரை வெவ்வேறு இதழ்களில் வெளியான பதினொரு சிறுகதைகள் இடம்பெறுகின்றன. இந்த நூலை இப்போது பார்த்தாலும் உடனே கவர்வது அதன் அழகிய அட்டைப்பட வடிவமைப்பும் நேர்த்தியான வார்ப்புருவும். அட்டைப்படத்தினை வடிவமைத்தவர் ஓவியர் ரமணி. அச்சுக்கலையும் தொழினுட்பமும் வளர்ந்திருக்கும் இன்றைய நாட்களில் கூட புத்தகங்கள் ஏனோதானோ என்ற வடிவமைப்புடன் வெளிவருவதைப் பார்க்கின்றபோது நாற்பது வருடங்களுக்கும் முன்னைய இந்தப் புத்தக உருவாக்கம் நிச்சயம் குறிப்பிட்டுச் சொல்லவேண்டியதாகின்றது.

.... மலிந்திருந்த சற்றே வறண்ட, நேரடியாக பிரசாரத் தொனி வீசுகின்ற படைப்பிலக்கியங்களில் இருந்து தனி மனித உணர்வுகளையும், உறவுச் சிக்கல்களையும், அக உலகையும் பேசுவதிலும், அதற்கான கவித்துமான மொழி நடையைக் கையாண்டு அழகியல் ரீதியான ஒரு இலக்கிய செல்நெறியை உருவாக்கிய முன்னோடிகளில் ஒருவராகவும், குப்பிழான் ஐ. சண்முகனின் படைப்புகள் மிக முக்கியமானவை என்பதை உறுதியுடன் கூற முடிகின்றது. ●

# இந்தவார ராசிபலன் 30.04.2023 - 06.05.2023



நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : தசமி

ஏப்ரல் 30 ஞாயிற்றுக்கிழமை
சோபகிருது வருடம் - சித்திரை 17




பயணங்களில் புதிய அனுபவம் கிடைக்கும். சொத்துகளில் வருமானம் வரத் தொடங்கும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். உத்தியோகஸ்தர்கள் பிறருக்கு உதவி களைச் செய்வார்கள். வியாபாரிகளுக்கு லாபம் கிடைக்கும். விவசாயிகள் புதிய கால்நடைகளை வாங்குவார்கள். அரசியல்வாதிகள் வெற்றி வாகை சூடுவார் கள். கலைத்துறையினருக்கு வருவாய் உயரும். பெண்கள் உறவினர்களிடம் அன்பைப் பொழிவார்கள்.




கனிவான பேச்சுகளால் பிறரின் நம்பிக்கையைப் பெறுவீர்கள். போட்டிகளில் வெற்றி கிடைக்கும். தவறுகளைத் திருத்திக் கொள்வீர்கள். உத்தியோகஸ்தர்களுக்கு பொருளாதார இன்னல்கள் குறையும். வியாபாரிகள் புதிய முயற்சியில் ஈடுபடுவார்கள். விவசாயிகள் விவசாயத்தைப் பெருக்குவார்கள். அரசி யல்வாதிகளின் மனதில் மாற்றம் உருவாகும். கலைத்துறையினருக்கு வரவு சீராகவே இருக்கும். பெண்களின் உடல், மன வளம் மேம்படும். மாணவர்கள் காரியங்களைத் தாமதமாகச் செய்து முடிப்பார்கள்.




தொழிலை விரிவுபடுத்துவீர்கள். உடனிருப்போர் ஆதரவாக இருப்பார்கள். தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். வாக்கு சாதுர்யத்தால் ஆதாயம் அடைவீர்கள். உத்தியோகஸ்தர்கள் புகழ் உயரக் காண்பார்கள். வியாபாரிகள் லாபம் அடைவார்கள். அரசியல்வாதிகள் மேலிடத்திடம் அனுசரித்து இருப்பார்கள். கலைத்துறையினருக்கு புதிய ஒப்பந்தங் கள் கிடைக்கும். பெண்கள் ஆன்மிகத்தில் ஈடுபடுவார்கள். மாணவர்கள் புதிய பாடப்பிரிவில் சேருவார்கள்.




மகிழ்ச்சியான சிந்தனைகள் உண்டாகும். வசிக்கும் வீட்டை புதுப்பிப்பார்கள். சுப விஷயங்களில் முன்னேற்றம் ஏற்படும். உத்தியோகஸ்தர்களுக்கு சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். வியாபாரிகளுக்கு புதிய அனுப வம் கிடைக்கும். விவசாயிகள் கால்நடைகளுக்கு சிறிது செலவழிக்க நேரிடும். அரசியல்வாதிகள் நினைத்த காரியங்கள் நிறைவேறும். கலைத் துறையினர் பக்குவமாக நடந்துகொள்வார்கள். பெண்களுக்கு புதுவித




காரியங்களில் வெற்றி கிடைக்கும். புதிய பொருள்களை வாங்குவீர்கள். புதிய வாய்ப்புகள் கிடைக்கும். உடன்பிறந்தோர் பேச்சுக்கு மதிப்பு அளிப்பார்கள். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளிடம் நன்மதிப்பைப் பெறுவார்கள். அரசியல்வாதிகள் கட்சிப் பணிகளை மகிழ்ச்சியுடன் ஆற்று வார்கள். பெண்கள் உறவினர்களை அன்பாக நடத்துவார்கள். மாணவர்கள் கல்வியில் சாதனைகளைச் செய்வார்கள்.




பண வரவு சிறப்பாகவே இருக்கும். குடும்பத்தில் குதூகலம் நிறையும். சுறுசுறுப்புடன் செயல்படுவீர்கள். வயிற்று உபாதைகள் ஏற்பட்டு தீரும். உத்தியோகஸ்தர்களுக்கு ஊதிய உயர்வு கிடைக்கும். வியாபாரிகளுக்கு கொடுக்கல் – வாங்கலில் திருப்பம் ஏற்படும். விவசாயிகள் புதிய குத்தகைகளைப் பெறுவார்கள். அரசியல்வாதிகளுக்குப் பல பிரச்னைகள் தீரும். கலைத்துறையினர் புதிய யுக்திகளைக் கையாளுவார்கள். பெண்கள் கணவரின் அன்பையும் பாராட்டையும் பெறுவார்கள். மாணவர்கள் தங்கள் பாடங்களைக் கவனத்துடன் படிப்பார்கள்.




வருமானத்தில் ஏற்றத் தாழ்வுகள் நீங்கும். பயணம் புதிய நம்பிக்கையைக் கொடுக்கும். சொத்துகளில் நன்மைகள் உண்டாகும். சுபச் செய்திகள் கிடைக்கும். உத்தியோகஸ்தர்களை மேலதிகாரிகள் புரிந்துகொள்வார்கள். வியாபாரிகள் புதிய சந்தைகளை நாடுவீர்கள். விவசாயிகள் விவசாயத்தை அபிவிருத்தி செய்வீர்கள். அரசியல்வாதிகள் பிறரின் கருத்துகளுக்கு மதிப்பளிப்பார்கள்.கலைத்துறையினருக்கு பயணங்களால் மகிழ்ச்சி ஏற்படும்.




பெற்றோரின் அறிவுரைகளைக் கேட்பீர்கள். தாய்வழி உறவினர் களால் உதவிகள் கிடைக்கும். ஆடம்பரப் பொருள்களை வாங்கு வீர்கள். சமுதாயத்தில் உயர்ந்தோரின் நட்பும் உதவியும் கிடைக் கும். உத்தியோகஸ்தர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும். வியாபாரிகளுக்கு தேவையான உதவிகள் கிடைக்கும். விவசாயிகளுக்கு குழப்பம் ஏற்பட்டு நீங்கும்.அரசியல்வாதிகள் தடைபட்ட பணிகளைச் செய்து முடிப்பார்கள்..




முன் னெச்சரிக்கை உணர்வுடன் செயல்படுவீர்கள். எதிர்மறை எண்ணம் வராமல் கவனமாக இருக்கவும். சொத்து பிரச்னைகள் விலகிவிடும். வியாபாரிகளுக்கு பிறர் உதவிகள் கிடைக்கும். விவசாயிகள் கொள்முதலில் புதிய லாபத்தை எட்டுவார்கள். அரசியல்வாதிகள் தொண்டர்களின் கருத்து வேறுபாடுகளைத் தீர்த்து வைப்பார்கள்.கலைத்துறையினருக்குப் புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.




எதிர்காலச் சிந்தனைகள் அதிகரிக்கும். எதிர்ப்புகளை அறிந்து கொள்வீர்கள். வாகனங்களைப் பழுது பார்க்க நேரிடும்.உத்தியோகஸ்தர்களுக்கு சாதகமான சூழல் நிலவும்.வியாபாரிகள் புதிய நட்பால் உயர்வடைவார்கள். விவசாயிகள் கடுமையாக உழைப்பார்கள். அரசியல்வாதிகளின் தனிப்பட்ட வாழ்க்கையில் மாற்றம் உண்டாகும். பெண்கள் பெற்றோரின் ஆதரவால் திருப்தி அடைவார்கள். மாணவர்கள் முன்னேற்றம் காண்பர்.




அரசு விஷயங்களில் நன்மைகள் அதிகரிக்கும். சமூகப் பணியில் இருப்போர் விவேகத்துடன் நடந்துகொள்வீர்கள். சுப காரிய விஷயங்கள் சாதகமாகும். உத்தியோகஸ்தர்களின் வேலைத்திறமையை பாராட்டுவார்கள். வியாபாரிகளின் அந்தஸ்து உயரும். விவசாயிகள் பழைய குத்தகைப் பாக்கிகளைத் திருப்பிச் செலுத்துவார்கள். அரசியல்வாதிகள் கட்சி முன்னேற்றத்துக்காக உழைத்து நற்பெயரை எடுப்பார்கள்.கலைத்துறையினரின் கடந்த கால கசப்புகள் மறையும். பெண்கள் ஆன்மிகத்தில் ஈடுபடுவார்கள்.




சாந்தமாகப் பணிபுரிவீர்கள். பொருளாதார நிலை சிறப்பாகத் தொடரும். புனித திருத்தலங்களுக்கு குடும்பத்துடன் செல்வீர்கள். பெரியோர்களின் ஆசி கிடைக்கும். உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கும். வியாபாரிகளுக்கு கூட்டாளிகளை நன்கு அறியும் சந்தர்ப்பம் ஏற்படும். விவசாயிகள் நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குவார்கள். அரசியல்வாதிகள் தொண்டர்களிடம் விவாதங்களைச் செய்வார்கள். கலைத்துறையினரின் திறமைகள் வெளிப்படும். பெண்கள் கணவர் குடும்பத்தாரின் ஆதரவைப் பெறுவார்கள். மாணவர்கள் விவேகத்துடன் இருப்பார்கள்.

# மியன்மரால் இந்தியாவுக்கு பிரச்னை வருமா? எல்லையில் புதிய அச்சுறுத்தல்!

நிதின் சிறிவாஸ்தவ்







2005ஆம் ஆண்டு அப்போதைய இந்திய கடற்படை தளபதி அட்மிரல் அருண் பிரகாஷ், அந்தமான் நிக்கோபார் தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தார்.

அங்கு செய்தியாளர்களிடம் பேசிய அவர், "கோகோ தீவுகளில் சீனாவின் இருப்பு இல்லை என்று மியான்மர் அரசு கூறுகிறது. இதை நாங்கள் நம்புகிறோம்," என்று கூறியிருந்தார்.

அவரது அதிகாரபூர்வ பயணத்திற்கு சில மாதங்களுக்கு முன்பு, மியான்மர் கடற்படை தளபதி சோ தெய்ன் டெல்லிக்கு வந்து அட்மிரல் பிரகாஷுடன் நீண்ட நேரம் பேச்சு நடத்தினார்.

1948இல் மியான்மர் சுதந்திரம் பெறும் வரை ஜப்பானிய ராணுவம் இரண்டாம் உலகப் போரின் போது கோகோ தீவை தன் கடற்படை தளமாக பயன்படுத்தியது. மியான்மாரின் ஒரு பகுதியாக மாறிய பிறகு 20ஆம் நூற்றாண்டின் இறுதி வரை இங்கு ஒரு ரேடார் நிலையம் இருந்தது.

இந்தியாவின் அந்தமான்-நிகோபாரிலிருந்து வடக்கே 55 கிலோ மீட்டர் தொலைவில் "கிரேட் கோகோ தீவு" அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

### இந்தியாவின் புதிய கவலை

பிரிட்டனின் புகழ்பெற்ற கொள்கை அமைப்பான சாட்டம் ஹவுஸின் புதிய அறிக்கைக்குப் பிறகு கோகோ தீவு மீண்டும் ஒரு சர்வதேச பிரச்சனையாக ஆகக் கூடிய விளிம்பில் உள்ளது.

"சமீபத்திய மற்றும் நம்பகமான செயற்கைக்கோள் படங்கள் தீவில் அதிகரித்த செயல்பாடுகளை சுட்டிக்காட்டுகின்றன, இது இந்தியாவிற்கு நல்ல செய்தி அல்ல." என்று அதன் ஆய்வு தெரிவிக்கிறது.

மியான்மர் உளவுத்துறை இந்த தீவில் இருந்து கடல்சார் கண்காணிப்பை விரைவில் தொடங்கலாம் என்றும் படங்கள் சுட்டிக்காட்டுகின்றன. மியான்மரின் வலுவான அண்டை நாடான சீனா இந்தத் தீவில் தனக்கான செயல் உத்தி-பொருளாதார நம்பிக்கையை பார்க்கிறது என்றும் சில நிபுணர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

செயற்கைக்கோள் படப்பிடிப்பில் உலகிலேயே முதலிடம் வகிக்கும் "மேக்சர் டெக்னாலஜிஸ்", பல மாத ஆராய்ச்சிக்குப் பிறகு, இந்தப் படங்களை வெளியிட்டுள்ளது. இதில் வங்காள விரிகுடாவின் நடுவில் அமைந்துள்ள கோகோ தீவில் கட்டுமானப் பணிகள் நடந்து கொண்டிருப்பதை தெளிவாகப்பார்க்க முடிகிறது.

"விமானங்களை பாதுகாப்பாக நிறுத்தும் இரண்டு ஹேங்கர்கள், குடியிருப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே உள்ள 1,300 மீட்டர் நீள ஓடுபாதை 2,300 மீட்டர் நீளத்திற்கு நீட்டிக்கப்பட்டுள்ளது," என்று டேமியன் சைமன் மற்றும் ஜான் பொல்லாக் நடத்திய இந்த ஆய்வு தெரிவிக்கிறது.

"போர் விமானங்கள் மற்றும் பெரிய சரக்கு ராணுவ விமானங்கள் தரையிறங்குவதற்கும் புறப்படுவதற்கும் 1,800 மீட்டர் முதல் 2,400 மீட்டர் வரை நீளமான ஓடுபாதை தேவைப்படுகிறது," என்று "ஜேன்ஸ் டிபென்ஸ் வீக்லி" என்ற புகழ்பெற்ற பாதுகாப்பு இதழ் தெரிவிக்கிறது.

இதற்குப் பதிலளித்த இந்திய வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பக்ஷி, "நாட்டின் பாதுகாப்பு தொடர்பான எல்லா நடவடிக்கைகளையும் இந்தியா தொடர்ந்து கண்காணித்து வருகிறது" என்று கூறினார்.

மறுபுறம், இதுபோன்ற குற்றச்சாட்டுகள் அனைத்தும் ஆதாரமற்றவை என்று மியான்மர் ராணுவ அரசின் செய்தித் தொடர்பாளர் மேஜர் ஜெனரல் சாவ் மின் துன் கூறினார்.

"மியான்மர் எந்த வெளிநாட்டு அரசையும் தனது மண்ணில் ராணுவ தளம் கட்ட அனுமதிக்காது. அந்தத் தீவில் மியான்மர் பாதுகாப்புப் படைகள் மட்டுமே உள்ளன என்றும் அவை தங்கள் நாட்டைப் பாதுகாக்கின்றன என்றும் இந்திய அரசுக்குத்தெரியும்," என்று அவர் குறிப்பிட்டார்.


### அதிகரித்து வரும் சீன செல்வாக்கு

மியான்மரில் ராணுவம் நடத்திய ஆட்சிக்கவிழ்ப்பு புரட்சிக்கு பிறகு அந்த நாட்டில் வெளிநாடுகளின் தலையீடு அதிகரித்து வருவதாக செய்திகள் வெளியாகி வருகின்றன. இது மியான்மரில் சீனாவின் செல்வாக்கு அதிகரித்து வருவதை சுட்டிக்காட்டுகிறது.

பல தசாப்தங்களாக, சீனா தனது இறக்குமதி-ஏற்றுமதி மற்றும் ஆற்றல் தேவைகளை கடல் வர்த்தகத்தின் மூலம் பூர்த்தி செய்ய "மலாக்கா ஜலசந்தி" மீது கண் வைத்துள்ளது.

சுமார் 800 கிலோ மீட்டர் நீளமுள்ள இந்த கடல் பாதை இந்தோனீசியா, மலேசியா மற்றும் சிங்கப்பூர் இடையே வருகி றது. இதன் மூலம் சீன கப்பல்கள் இந்திய பெருங் கடல் மற்றும் வங்காள விரிகுடா வழியாக மேற்கு உலகத்தை சென்றடைகின் ன.

பொருளாதாரத் தடைகளாலும், உள்நாட்டு அரசியல் நெருக்கடிகளாலும் பாதிக்கப்பட்டுள்ள மியான்மர், சீனாவுக்குப் பொருத்தமான நட்பு நாடாக இருக்க முடியும். சீனா, மியான்மரின் மிகப் பெரிய பாதுகாப்பு விநியோகஸ்தர் மற்றும் இரண்டாவது பெரிய வெளிநாட்டு முதலீட்டாளர்.




"கடந்த சில தசாப்தங்களாக மேற்கத் திய நாடுகள் மியான்மருக்கு நெருக்குதல் அளித்து கடுமையாக நடந்துகொண்ட விதம் காரணமாக, மியான்மருக்கும் சீனாவுக்கும் இடையிலான நெருக்கம் அதிகரித்தது. மியான்மரின் தேசிய ராணுவம் சீனாவின் லட்சியத்தை நன்கு அறிந்திருக்க்கூடும். ஆயினும் சர்வதேச அரங்கில் அது தனிமைப்படுத்தப்பட்டால் வேறு என்ன மாற்று வழி இருக்க முடியும்," என்று செயல் உத்தி விவகார வல்லுனர் பேராசிரியர் பிரம்மா செல்லானி கருத்து தெரிவித்தார்.

தென்கிழக்கு ஆசியாவில் உள்ள பெரும்பாலான நாடுகள் அதாவது கம்போடியா, லாவோஸ், மியான்மர், தாய்லாந்து, வியட்நாம் ஆகிய நாடுகளில் சர்வாதிகார அரசுகள் ஆட்சியில் இருப்பது இந்தியாவைப் பொறுத்த வரையில் பெரும் கவலையாக உள்ளது.

இவற்றில், கம்போடியா போன்ற நாடுகள் பல்வேறு வகையான பொருளாதாரத் தடைகள் அல்லது சர்வதேச தனிமைப்படுத்தலால் பிரச்னைகளை எதிர்கொண்டு வருவதாக கூறிக்கொள்கின்றன.

உதாரணமாக 2021ஆம் ஆண்டில், ஆசியாவின் எதிர்காலம் குறித்த மாநாட்டில் உரையாற்றிய கம்போடிய பிரதமர் ஹுன் சென், "நான் சீனாவை நம்பவில்லை என்றால், நான் யாரை நம்புவது? நான் சீனாவிடம் எதுவும் கேட்கக் கூடாது என்றால், நான் யாரைக் கேட்பது?" என்கிறார்.

மியான்மரின் ராணுவ அரசிடமிருந்தும் இதே போன்ற அறிக்கைகள் வரக்கூடும் என்றும் அவை இந்தியாவுக்கு மோசமான செய்தியாக இருக்கலாம் என்றும் நிபுணர்கள் பயப்படுகிறார்கள்.

மியான்மர் தனது எல்லையை இந்தியாவுடன் பகிர்ந்து கொள்கிறது. மற்றொரு எல்லை தாய்லாந்துடன் உள்ளது. மியான்மரில் குடியேறியுள்ள சில இனக்குழுக்கள், இந்தியாவின் வடகிழக்கு பகுதிகளிலும் காணப்படுகின்றன.

'மேக்கிங் எனிமீஸ்: வார் அண்ட் ஸ்டேட் பில்டிங் இன் பர்மா' என்ற புத்தகத்தின் ஆசிரியர் மேரி கேலாஹன், வாஷிங்டன் பல்கலைக்கழகத்தில் உலகளாவிய வெளியுறவுக் கொள்கையை கற்பிக்கிறார். "மியான்மரின் ஒரே பிரச்னை ராணுவ ஆட்சிதான்" என்று அவர் கருதுகிறார்.

"ராணுவம் தேர்தல் நடத்தினாலும் வெளி நாடுகளின் ஒத்துழைப்பு தேவைப்படும். இதில் சீனா மற்றும் ரஷ்யாவிடம் இருந்து உதவி கிடைக்கக்கூடும். இந்த இரு நாடுகளும் ஆயுதம் வழங்குவது மட்டுமின்றி, ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்சிலிலும் உதவுகின்றன. இரண்டாவது குழு. இந்தியா. மற்றும் தாய்லாந்து ஆகும். இந்த இரு நாடுகளுக்கும் தங்களின் சொந்த விஷயங்கள் உள்ளன. மியான்மரில் ராணுவ செல்வாக்கையும் உளவுத்துறையையும் வலுப்படுத்த அவர்களுக்கும் இந்தியாவிற்கும் இடையே போட்டி ஏற்படுவது இயற்கையானது," என்று அவர் தெரிவித்தார்.

### சீனாவுக்கு தொடர்பா?

கோக்கோ தீவு தொடர்பாகவும் இதே கேள்விகள் எழுப்பப்படுகின்றன. அங்கு காணப்படும் செயல்பாடுகளின் பின்னணியில் சீனா உள்ளதா?

எதிர்காலத்தை மனதில் வைத்துக் கொண்டு தூரத்தில் இருந்து சீனா தனது "நண்பருக்கு" உதவக்கூடும் என்று கூறப்படுகிறது. இந்துமாக்கடலில் கால்பதிக்க கோகோ தீவுகள் அதற்கு உதவிகரமாக இருக்கும்.

வங்காள விரிகுடாவில் ராணுவ கண்காணிப்பை அதிகரிப்பது மியான்மருக்கு எளிதாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

"வெளியுறவுக் கொள்கையாக இருந் தாலும் அல்லது உள்நாட்டுக் கொள்கையாக இருந்தாலும், ஒவ்வொரு நாடும் அதன் சொந்த நலன்களுக்காக தொடர்ந்து உழைக்க வேண்டும். மியான்மரும் அதையேதான் செய்ய வேண்டும்," என்று மியான்மரின் யாங்கூன் பல்கலைக்கழகத் தின் சர்வதேச உறவுகளின் பேராசிரிய ரான சோன் வின் கூறுகிறார்.

"மியான்மரின் புவியியல் நிலை சுவாரஸ்யமானது. வடக்கு மற்றும் மேற்கில் சீனா, இந்தியா போன்ற பெரிய சக்திகள் உள்ள நிலையில், தெற்கு மற் றும் கிழக்கில் அது ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியத்தின் ஒரு பகுதியாக ஆகிறது.

மியான்மரின் சந்தைகள் மற்றும் பொருளாதாரத்தில் பங்கிற்காகவும் அண்டை நாடுகள் போட்டியிடுகின்றன என்பதில் சந்தேகமில்லை. எதிர்காலத்தில் எதுவும் மாறப்போவதில்லை," என்று அவர் குறிப்பிட்டார்.

ஈழநாடு



# சஜித்தை கைவிட்டு ஜனாதிபதியின் பயணத்தில் ஐக்கிய மக்கள் சக்தியினர் இணைவார்களா?



வீரகத்தி தனபாலசிங்கம்

சர்வதேச நாணய நிதியத்துடனான செயற்திட்டம் மீது கடந்த வாரம் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற மூன்று நாள் விவாதத்தின்போது ஒரு தடவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்வை பார்த்து "நீங்கள் சொல்வதைச் செய்யுங்கள்" என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச கூறினார். அதற்கு பதிலளித்த ஜனாதிபதி "நான் சொல்வதை செய்வேன். ஆனால் ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ளவர்கள் ஒரு பொதுப்பயணத்தில் என்னுடன் கூட வரத் தொடங்குவார்கள் என்பதை கூறி வைக்க விரும்புகிறேன்" என்று சொன்னார். அதை மறுத்த பிரேமதாச "ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள எவரும் உங்களுடன் கூட வரமாட்டார்கள்" என்று கூறினார்.

எதிர்க்கட்சி தலைவருக்கும் அவரின் முன்னாள் தலைவருக்கும் இடையிலான இந்த பரிமாற்றம் அண்மைக்காலமாக ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து பாராளுமன்ற உறுப்பினர்களை தன்பக்கம் இழுப்பதற்கு விக்கிரமசிங்க கடுமையாக முயற்சித்துக் கொண்டிருப்பதையும் அவர்கள் தன்னை கைவிட்டுச் செல்லாமல் இருப்பதை உறுதிசெய்வதற்கு பிரேமதாச தன்னால் இயன்றவரை பிரயத்தனங்களை செய்துகொண்டிருப்பதையும் தெளிவாக வெளிக்காட்டியது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடன் விக்கிரமசிங்க முன்னெடுத்து வருகின்ற நடவடிக்கைகளை ஹர்ஷா டி சில்வா, எரான் விக்கிரமரத்ன மற்றும் கபீர் காசிம் போன்ற ஐக்கிய மக்கள் சக்தியின் மூத்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அண்மைக்காலமாக ஆதரித்துப் பேசிவருகிறார்கள். இவர்களும் வேறு சிலரும் அரசாங்கத்துடன் இணையக்கூடும் என்றும் ஊகங்கள் வெளியாகின.

புத்தாண்டுக்கு பிறகு பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி தரப்பில் இருந்து சில உறுப்பினர்கள் அரசாங்கப் பக்கத்துக்கு மாறக்கூடிய சாத்தியம் இருப்பதாகவும் செய்திகள் வெளியாகின. அவ்வாறு மாறுவதற்கான யோசனை சிலருக்கு இருக்கிறது என்பதை ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார ஜெயமஹா வெளிப்படையாவே ஒத்துக்கொண்டார். ஆனால் இதுவரை அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை.

இன்றைய பாராளுமன்ற கட்சிகளில் மிகவும் பலவீனமானதாக இருப்பது ஐக்கிய தேசிய கட்சியேயாகும். காலனித்துவ ஆட்சியில் இருந்து இலங்கை சுதந்திரம் பெற்ற பிறகு பல தசாப்தங்களாக மாறிமாறி ஆட்சிசெய்து வந்த பழம்பெரும் கட்சிகளான ஐக்கிய தேசிய கட்சியும் சிறிலங்கா சுதந்திர கட்சியும் இன்று மக்கள் ஆதரவைப் பொறுத்தவரை பழைய ஆதிக்கநிலையில் இல்லை.

அதுவும் குறிப்பாக ஐக்கிய தேசிய கட்சி மீட்டெடுக்கமுடியாத அளவுக்கு மக்கள் செல்வாக்கை இழந்து நிற்கிறது. ஜனாதிபதி முன்னெடுக்கின்ற பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகள் அவரின் "மதிப்பை" ஒப்பீட்டளவில் அதிகரித்திருக்கின்ற போதிலும், அது அவரது கட்சிக்கு மக்கள் மத்தியில் ஆதரவு வளர்வதற்கு எந்தளவுக்கு உதவியிருக்கிறது என்பது கேள்விக்குரியது.

அதனால் அவரது பொருளாதார மறுசீரமைப்பை ஆதரிக்கின்ற ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களும் அரசாங்கத்தில் இணையாமல் வெளியில் இருந்து ஒத்துழைப்பை வழங்குவதற்கே பெரும்பாலும் விரும்பக்கூடும். பொருளாதார இடர்பாடுகளை ஒப்பீட்டளவில் தணித்துவரும் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை ஆதரிக்காவிட்டால் மக்கள் மத்தியில் தனிமைப்பட்டு விடுவோமோ என்ற அச்சம் ஒருபுறமும் தனது கட்சியை மீளக்கட்டியெழுப்ப இயலாமல் இருக்கும் விக்கிரமசிங்கவுடன் சென்றால் தங்களது அரசியல் எதிர்காலம் என்னவாகுமோ என்ற அக்கறை மறுபுறமும் அவர்களை குழப்புகிறது.

பிரேமதாச ஐக்கிய மக்கள் சக்தியை அமைத்தபோது ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து வெளியேறிய அரசியல்வாதிகள் தங்களது எதிர்கால அரசியல் வாய்ப்புக்களை மனதிற்கொண்டிருந்தார்களே தவிர பிரேமதாசா மீது பிரத்தியேகமான பிரியம் எதையும் கொண்டிருக்கவில்லை. விக்கிரமசிங்க தலைமையில் ஐக்கிய தேசிய கட்சியில் தொடர்ந்தும் இருந்தால் தங்களால் பாராளுமன்றத்துக்கு செல்லமுடியாது என்பதை அவர்கள் தெளிவாக அறிந்திருந்தார்கள்.

அதை 2020 ஆகஸ்ட் பொதுத் தேர்தல் முடிவுகள் பிரகாசமாக வெளிக்காட்டின. நாட்டின் அரசியல் கட்சிகளில் தனியொரு கட்சி என்ற வகையில் பெரிய வாக்கு வங்கியைக் கொண்டதாக ஒரு காலத்தில் விளங்கிய ஐக்கிய தேசிய கட்சி விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையின் கீழ்த்தானும் பாராளுமன்றத்தில் ஓர்ஆசனத்தைக்கூட பெறமுடியாமல் வரலாற்று தோல்வியை தழுவிக் கொண்டது.



அந்த கட்சிக்கு இருந்த வாக்கு வங்கி விகிதாசார பிரதிநிதித்துவ அடிப்படையில் பாராளுமன்றத்தில் எப்போதுமே கூடுதல் ஆசனங்களை கைப்பற்றக்கூடிய தனிக்கட்சியாக அதை வைத்திருக்கும் என்ற நம்பிக்கையில் தான் விக்கிரமசிங்கவின் மாமனார் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன அந்த தேர்தல் முறையை அறிமுகப்படுத்தியதாக கூறப்படுவதுண்டு.

ஐக்கிய தேசிய கட்சியின் முன்னைய தலைவர்களில் எவருமே விக்கிரமசிங்கவை போன்று மிகவும் நீண்டகாலம் தலைமைத்துவத்தை தம்வசம் வைத்திருந்ததில்லை. அவரைப் போன்று வேறு எந்த தலைவருமே தலைமைத்துவத்துக்கு எதிரான உட்கட்சி கிளர்ச்சிக்கு முகங்கொடுத்ததுமில்லை. அவரே பாராளுமன்றத்தில் நீண்டகாலம் எதிர்க்கட்சி தலைவராக பதவி வகித்தவர் மாத்திரமல்ல, பல தடவைகள் பிரதமராக இருந்த "பெருமைக்கும்" உரியவர்.

தனது சுமார் மூன்று தசாப்தகால தலைமைத்துவத்தின் கீழ் ஐக்கிய தேசிய கட்சியை விக்கிரமசிங்க கணக்கில் எடுக்கக்கூடிய வாக்கு வங்கி இல்லாத நிலைக்கு கொண்டுவந்து விட்டிருக்கிறார். அதன் வாக்கு வங்கியும் கட்சி கட்டமைப்புகளும் பிரேமதாசவின் ஐக்கிய மக்கள் சக்தியுடன் சென்றுவிட்டன.

கடந்த பாராளுமன்ற தேர்தலுக்கு பிறகு கட்சியை கலைத்துவிடுவது குறித்துக் கூட விக்கிரமசிங்க யோசித்ததாக முன்னாள் அமைச்சர் நவீன் திசாநாயக்க அண்மையில் கூறியிருந்தார்.

தற்போது அவருடன் கட்சியில் இருக்கும் அரசியல்வாதிகள் பெரும்பாலும் கோர்ப்பரேட் கம்பனிகளின் பிரதம நிறைவேற்று அதிகாரிகள் போன்று தோற்றமளிக்கிறார்களே தவிர, மக்கள் மத்தியில் சென்று கட்சியை மீளக் கட்டியெழுப்புவதற்கு உருப்படியான வெகுஜன அரசியல் பணிகளை முன்னெடுக்கக்கூடியவர்களாக இல்லை. அவர்களுக்கு ஜனாதிபதியின் ஆலோசகர்கள் பதவி வழங்கப்பட்டிருக்கிறது.

சிறிகோத்தாவில் சில கூட்டங்களுக்கு தலைமைதாங்கி உரையாற்றுவதை தவிர விக்கிரமசிங்க தனது கட்சியை மீளக் கட்டியெழுப்புதற்கு உருப்படியான நடவடிக்கைகளை எடுப்பதாக தெரியவில்லை. அந்த உரைகளில் கூட சில தடவைகள் அவர் தான் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டது கட்சி அரசியல் செய்வதற்கல்ல, பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்கவே என்று கூறியதைக் காணக்கூடியதாக இருந்தது.

> **சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்பாடு மீதான வாக்கெடுப்பில் பௌசியை தவிர ஐக்கிய மக்கள் சக்தியின் வேறு எந்த பாராளுமன்ற உறுப்பினரும் ஆதரித்து வாக்களிக்கவில்லை.**

காலம் செய்த கோலம் எந்த ராஜபக்சாக்களின் ஆட்சிக்காலத்தில் விக்கிரமசிங்கவின் அரசியல் மோசமாக வீழ்ச்சி கண்டதோ அதே ராஜபக்சாக்களே தங்களது கட்சியின் பாராளுமன்ற பலத்தைப் பயன்படுத்தி அவரை கடந்த வருடம் ஜனாதிபதியாக பதவியில் அமர்த்தினார்கள்.

இப்போது அவர் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது குறித்து பேசுகிறார். ஐக்கிய தேசிய கட்சிக்கென்று குறிப்பிடத்தக்க ஒரு வாக்கு வங்கியை மீளவும் கட்டியெழுப்பாத வரையில் ஜனாதிபதி தேர்தலில் அவரை ஆதரிப்பதற்கு வேறு கட்சிகள் முன்வருவது சாத்தியமில்லை. பொருளாதார மீட்சிக்கு அவர் முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்காக கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் நாட்டு மக்கள் அணிதிரண்டு அமோகமாக வாக்களித்து அவரை ஜனாதிபதியாக்கிவிடப் போவதில்லை. அத்தகையதொரு அரசியல் கலாசாரம் எங்கும் குறிப்பாக எமது பிராந்தியத்தில் இல்லை.

சிறிலங்கா பொதுஜன பெரமுனையைச் சேர்ந்த சில அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஜனாதிபதி தேர்தலில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதற்கு விருப்பத்தை வெளிக்காட்டுகிறார்கள். ராஜபக்சாக்களுடன் தொடர்ந்தும் இருப்பதற்கு விரும்பாத பொதுஜன பெரமுன அரசியல்வாதிகள் தேர்தல் நெருங்கும்போது ஜனாதிபதியின் பக்கத்துக்கு வந்துவிடக்கூடிய சாத்தியம் இருப்பதாகவும் நம்பப்படுகிறது.

அவ்வாறு வேறு கட்சிகளில் இருந்து தன்னுடன் வரக்கூடியவர்களை வைத்துக்கொண்டு தனது ஆதரவை கட்டியெழுப்பும் தந்திரோபாயமாக விக்கிரமசிங்க பேச்சுவார்த்தைகளை நடத்துகிறார் என்று தெரிகிறது. அந்த முயற்சிகளைப் பொறுத்தவரை, அவர் தன்னைக் கைவிட்டு பிரேமதாசவுடன் சென்றவர்களுக்கு வலை வீசுவதற்கே முன்னுரிமை கொடுக்கிறார். பாராளுமன்றத்தில் கடந்த வாரம் பிரமேதாசவிடமே நேரடியாக அவர் கூறிய வார்த்தைகள் அதை தெளிவாக வெளிப்படுத்தின.

அதேவேளை மூன்று நாள் விவாதத்தின் இறுதியில் கடந்த வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வாக்கெடுப்பில் முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம். பௌசியைத் தவிர ஐக்கிய மக்கள் சக்தியின் வேறு எந்த உறுப்பினரும் சர்வதேச நாணய நிதியத்துடனான செயற்திட்டத்தை ஆதரிக்கவில்லை. இது அவர்களை தன்பக்கம் இழுக்கும் முயற்சியில் ஜனாதிபதிக்கு இருக்கின்ற சிக்கலை உணர்த்துகிறது.

# மறக்கமுடியாத போராட்டத்தில் '9 - மறைக்கப்பட்ட கதை'

**பனங்காட்டான்**

கடந்த வருடத்தின் மூன்று தொடர்ச்சியான 9ம் திகதிகள் அரசியலில் எந்தளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தவை என்பது இலகுவாக மறந்துவிடக்கூடிய தன்று.

கடந்த மே மாதம் 9ம் திகதி மகிந்த ராஜபக்ச தமது பிரதமர் பதவியை துறந்தார். நிதி அமைச்சராகவிருந்த பசில் ராஜபக்ச ஜூன் 9ம் திகதி பதவி துறந்தார். இறுதியாக ஜூலை 9ம் திகதி கோதபாய ராஜபக்ச தமது பதவியைத் துறப்பதற்கான முன்னோடி நடவடிக்கையாக நாட்டை விட்டு தப்பியோடினார்.

அதிகார வம்ச பலத்தோடு ஆட்சியிலிருந்த மூன்று சகோதரர்களுக்கு இப்படியொரு முடிவு வருமென எவரும் எண்ணியிருக்கவில்லை. இந்த எதிர்பாராத நிகழ்வுகளை மையப்படுத்தி ராஜபக்சக்களின் ஆட்சியில் பதவி சுகபோகங்களை அனுபவித்த விமல் வீரவன்ச வெளியிட்ட ஒரு புத்தகம் கடந்த சில நாட்களாக அரசியல் அரங்கத்தில் விவாதிக்கப்படுகிறது.

இந்த சிங்கள புத்தகத்தின் பெயர்



'நமய - செங்கவுனு கதாவ' (ஒன்பது - மறைக்கப்பட்ட கதை). இப்புத்தகம் வெளியான சில மணித்தியாலங்களிலேயே இதில் குறிப்பிடப்பட்ட தெரிந்ததும் தெரியாததுமான விடயங்கள் - உண்மையோ பொய்யோ என அறிய முன்னரே உயர் மட்டங்களில் சந்தேகத்தையும் சந்தோசத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

அன்றைய ஜனாதிபதி கோதபயவையும் அவருக்கு நம்பிக்கையான பாதுகாப்பு அதிகாரிகளையும் கொலை செய்ய திட்டமிடப்பட்டிருந்தது எனவும், கோதபாய பதவி விலகும்போது ரணிலும் பதவி நீக்கப்பட வேண்டுமென அமெரிக்காவும் இந்தியாவும் விரும்பியிருந்தன எனவும், இது தொடர்பான நடவடிக்கைகளிலும் அரகலய போராட்டத்திலும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி பிரதான பங்கு வகித்தாரெனவும் இந்தப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதை - இன்றைய அரசியல் களத்தில் ஒரு வெடிகுண்டாகவே நோக்கலாம்.

கடந்த வருடம் மார்ச் மாதம் 31ஆம் திகதி மிரிகானாவிலுள்ள கோதபாயவின் இல்லத்தின் முன்னால் ஆரம்பித்த போராட்டத்தின் சில நாட்களில் விமல் வீரவன்சவை அமைச்சர் பதவியிலிருந்து தூக்கி வீச கோதபாய விரும்பியிருந்தார். ஆனால், அதனைத் தெரிந்து கொண்டு அதற்கு முன்னராக விமல் வீரவன்ச தமது பதவியை துறந்ததோடு பொதுஜன பெரமுனவின் கூட்டிலிருந்தும் விலகிக் கொண்டார். இதன் பின்னர் அரகலய போராட்டத்தில் இவர் மறைகரமாக இருந்ததும் பொதுவெளியில் அறியப்பட்டது.

கடந்த வருடம் செப்டம்பர் மாதத்தில் ராஜபக்சக்களுக்கு எதிரான சில உதிரிகளுடன் சேர்ந்து புதிய கூட்டணி ஒன்றை இவர் உருவாக்கினார். இவர் முற்றிலும் எதிர்பார்க்காத ஒன்று ரணில் விக்கிரமசிங்க பிரதமராகி ஜனாதிபதியானது. இவர் எழுதியுள்ள நூலின் உண்மைத்துவத்தை அறிய மேலே குறிப்பிடப் பட்ட பின்னணி அவசியமாகும்.

கடந்த வருட ஜூலை மாத முதல் வாரத்தில் கோதபாயவை ஜனாதிபதி மாளிகைக்குள் வைத்து கொலை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது அப்போதே வெளியான முக்கிய தகவல். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரட்ண, முப்படைகளின் பிரதம தளபதி சவேந்திர சில்வா உட்பட உயர் பாதுகாப்பு அதிகாரிகள் இதனைத் தெரிந்திருந்தும் நடவடிக்கை எடுக்காது கொலை முயற்சித் திட்டத்துக்கு சாதகமாக இருந்ததாகவும் அப்போதே தகவல்கள் வெளியாகியிருந்தன.

மகிந்தவை பதவி துறக்க வைத்தால்



தமக்கு எதிரான போராட்டம் கைவிடப்படலாமென குருட்டுத்தனமாக நம்பிய கோதபாய, மகிந்தவை நெருக்கியே பதவி துறக்க வைத்தாரென்பது மகிந்தவின் புதல்வர்கள் ஊடாக வெளியான மற்றொரு தகவல். இதன் தொடர்ச்சியாக மே மாதம் 12ம் திகதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக கோதபாயவினால் நியமிக்கப்பட்டார்.

விமல் வீரவன்சவினால் வெளியிடப்பட்ட புத்தகம், மே மாதம் ஒன்பதாம் திகதி கோதபாய மீது கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகக் கூறுகிறது. அத்துடன், இந்தியாவில் நடைபெற்ற பிராந்திய நட்பு நாடுகளுக்கிடையிலான பாதுகாப்பு மாநாட்டில் சவேந்திர சில்வா பங்குபற்றியமை சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவும் விமல் வீரவன்ச சுட்டியுள்ளார். இது, கோதபாய பதவி நீக்கத்தில் இந்தியாவின் பங்களிப்பு சவேந்திர சில்வா ஊடாக இருந்தது என்பதை பூடகமாக தெரிவிப்பதாக அமைந்துள்ளது.

கோதபாயவுடன் ரணிலையும் பதவி



நீக்க வேண்டுமென அமெரிக்காவும் இந்தியாவும் தெரிவித்ததாகக் கூறும் விமல் வீரவன்ச, இவ்விடயத்தில் சவேந்திர சில்வாவின் வகிபாகம் என்னவாக இருந்ததென்பதை ஊகித்துக் கொள்ளலாம் என்ற சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையில் வாசகர் கருத்தோட்டத்துக்கு விட்டுள்ளது, அதேசமயம், அமெரிக்காவுக்கான தூதுவர் ஜூலி குறிப்பிட்ட



காலகட்டத்தில் நடந்து கொண்ட விதமும் மேற்கொண்ட சில நடவடிக்கைகளும் இப்புத்தகத்தில் பதியப்பட்டுள்ளன.

சபாநாயகர் மகிந்த யாப்ப அபேவர்த்தனவை அமெரிக்க தூதர் நேரில் சந்தித்து கோதபாய பதவி விலகப் போவதை முற்கூட்டியே தெரிவித்து, சபாநாயகரை ஜனாதிபதியாக பதவியேற்குமாறு கேட்டுக் கொண்டாராயினும் அரசியல் அமைப்பின் பிரகாரம் அது சாத்தியப்படாது என சபாநாயகர் பதிலளித்ததாகவும் இப்புத்தகம் தெரிவிக்கிறது.

ரணசிங்க பிரேமதாச ஜனாதிபதியாக இருந்த பொழுது மரணித்ததால் அரசியலமைப்பின்படி அன்றைய பிரதமர் டிங்கிரி பண்டா விஜேதுங்க ஜனாதிபதியாக பதவியேற்றதை சபாநாயகர் அமெரிக்க தூதுவருக்கு தெரிவித்ததைத் தொடர்ந்து அந்த முயற்சி கைவிடப்பட்டதென்றும் இந்நூல் தெரிவிக்கிறது.

இந்நூலில் தெரிவிக்கப்பட்டுள்ள சில விடயங்கள் உடனடியாக மறுதலிக்கப்பட்டுள்ளன. கோதபாய வையும் படைத்துறை அதிகாரிகளையும் கொலை செய்ய நடவடிக்கை எடுத்தது பற்றிய தகவலை பாதுகாப்பு அமைச்சு நிராகரித்துள்ளது. அமெரிக்க தூதுவர் ஜூலியும் இப்புத்தகத்தில் தம்மைப் பற்றி குறிப்பிட்ட கருத்துகளை கற்பனைக் கதையென்று குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க தூதுவரின் செயற்பாடுகள் பற்றி பல விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. கோதபாயவோடு ரணிலையும் பதவி நீக்குவது, சபாநாயகரை சந்தித்து ஜனாதிபதியாகப் பதவியேற்குமாறு வேண்டியது என்பவற்றில் எதனை அவர் மறுக்கிறார்? ஒட்டுமொத்தமாக எல்லாவற்றையுமே மறுக்கிறாரா?

கோதபாய ஜனாதிபதியாக இருந்த போது அநேகமாக தினசரி அமெரிக்க தூதுவர் அவருடன் தொடர்பில் இருந்ததாகவும், பல சந்தர்ப்பங்களில் அவர்மீது சில விடயங்களை திணித்து நிர்ப்பந்தித்ததாகவும், சில சமயங்களில் கோதபாய உளச்சித்திரவதைக்கு உள்ளானதாகவும் கூட அவரது பதவியின் இறுதிக் காலங்களில் செய்திகள் வெளிவந்தன. அது மட்டுமன்றி அரகலய போராட்டக்காரருக்கும் தூதுவர் ஜூலிக்கும் நெருங்கிய தொடர்பு இருந்ததாகவும் சொல்லப்பட்டு வந்தது. ஆனால் இவை எதுவுமே அதிகாரபூர்வமாக எப்போதும் வெளியிடப்படாதவை.

விமல் வீரவன்சவின் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அத்தனை கதாபாத்திரங்களும் இன்றும் உயிருடன் இருப்பவர்கள். நிகழ்கால அரசியலில் பழமும் தின்று கொட்டை போட்டவர்கள். இவர்களுள் பலர் மீண்டும் ஆட்சி அதிகாரத்துக்கு வர துடித்துக் கொண்டிருப்பவர்கள். இந்த வகையில் இந்தப் புத்தகம் பற்றிய தரவுகளுக்கு அவர்கள் வாய் திறந்தால் சில உண்மைகள் அம்பலமாகலாம்.

ஆகக்குறைந்தது சபாநாயகர் மகிந்த யாப்ப அபயவர்த்தன இது பற்றிய அறிக்கையொன்றை வெளியிட வேண்டிய கடப்பாடுடையவர். இவர் வெளியிடும் தகவலின் ஊடாகவே விமல் வீரவன்ச, அமெரிக்க தூதுவர் ஜூலி உட்பட சம்பந்தப்பட்டவர்கள் யார், எந்த இடத்தில் நிற்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ள முடியும்.

ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தளவில் சில விடயங்கள் அவருக்கு நன்கு தெரிந்தவையாக இருக்கும். சில சமயம் இந்த விடயங்கள் அவருக்கு சாதகமானவையாக அமையக்கூடும். போர்க்கால ராணுவ தளபதியாகவிருந்த சரத் பொன்சேகா இப்புத்தகம் பற்றி கருத்துக் கூறுகையில் ரணிலின் அரசியலுக்கு பலமூட்டுவதாகவும் சாதகமாகவும் விமல் வீரவன்ச இப்புத்தகத்தை எழுதியுள்ளதாகவும், ரணிலின் அமைச்சரவையில் சேர்ந்து கொள்ளும் நோக்கம் அவருக்கு இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளதையும் கவனிக்க வேண்டும்.


ஒரு வகையில் பார்க்கின் இலங்கை அரசியலில் ஆட்சிக் கவிழ்ப்பை ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்ட சதி முயற்சிகள் போன்று இந்தப் புத்தகத்தை நோக்கின் அதில் தவறிருக்க முடியாது.


இப்புத்தகம் தொடர்பாக அனைவருமே மௌனம் சாதிப்பவர்களாக இருப்பின் பொதுமக்கள் இருட்டினுள் கறுப்புப் பூனையை தேடிய கதையாகவே எல்லாம் முடிந்துவிடும்.

**கடந்த வருட மே, ஜூன், ஜூலை ஒன்பதாம் திகதிகளின் போராட்டங்கள் கற்றுத்தந்த அரசியல் பாடங்கள் வித்தியாசமானவை. இலங்கை அரசியல் வரலாற்றில் முன்னைய காலங்களில் இடம்பெற்ற சதிப்புரட்சிகளின் தொடர்ச்சியாக இதனைப் பார்க்கலாம். இதற்கு 'போதை' ஊசி ஏற்றுவதைப் போன்று வெளிவந்துள்ளது விமல் வீரவன்சவின் '9 - மறைக்கப்பட்ட கதை' புத்தகம்.**

# மதமாற்றம்

## இரு பக்க காரணிகளையும் விளங்கிக்கொள்ளல்





கந்தையா அருந்தவபாலன்

மதம் மாறுதல் அல்லது மாற்றப்படுதல் என்பது உலகில் புதிய விடயமோ அன்றி புதுமையானதொருவிடயமோ இல்லை. தனியொருவன் மதம் மாறுவதற்கப்பால் மக்கள் கூட்டாக மதம் மாறுவதில் பல்வேறுகாரணிகள் செல்வாக்குச் செலுத்தி வந்துள்ளதை நாடுகளின் வரலாறுகளிலிருந்து நாம் அறிந்து கொள்ளமுடியும். மன்னராட்சிக் காலத்தில் மன்னனின் மதம் எதுவோ அதுவே குடிமக்களின் மதமாகவும் இருந்தது. மன்னன் புதிய மதமொன்றைத் தழுவும்போது மக்களும் அம்மதத்தைப் பின்பற்ற வேண்டிய நிலைமைகள் உருவாகியது. இலங்கையில் தீச என்ற தேவநம்பியதீசன் புத்தமதத்தைத் தழுவியதால் மக்களும் அதனைப் பின்பற்றினர் என்பது வரலாறு. அதேபோல சமணம், பௌத்தம் என்பவற்றின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் மன்னர்களில் தங்கியிருந்தது என்பது தமிழக வரலாறு. இதற்கு மாறாக குடியேற்ற ஆட்சியாளர்கள் தாம் கைப்பற்றிய நாடுகளில் மக்களை மதம் மாற்றுவதற்கு பல்வேறு உத்திகளைக் கையாண்டனர். அதிகாரப் பிரயோகத்துக்கு அப்பால் ஒருபுறத்தில் கல்வி, அரசவேலை போன்ற சலுகைகள் மூலமும் மறுபுறத்தில் பின்தங்கிய மக்களில் தாமும் ஒருவராக மதபோதகர்கள் வாழ்ந்து வழிகாட்டியதன் மூலமும் தமது மதத்தைப் பரப்பினார்கள். கோட்டை அரசன் தர்மபால, டொன் யுவான் தர்மபால ஆகவும் அரசி, டோனா கதரினாவாகவும் மாறியதிலிருந்து இலங்கையில் கிறிஸ்தவம் வேரூன்றத் தொடங்கியது. இலங்கையின் கரையோரங்களில் வாழ்ந்த பின்தங்கிய மக்களில் கணிசமானோர் கத்தோலிக்கத்தைத் தழுவிய அதே வேளை மேட்டுக்குடிகளில் கணிசமானோர் கல்வி, அரசவேலை,அதிகாரம் போன்ற சலுகைகளுக்காக புரட்டஸ்தாந்த பிரிவுக் கிறிஸ்தவர்களாக மாறினர்.

இன்று பௌத்தமதக் காவலராகத் தம்மைக்க காட்டிக் கொள்ளும் இன்றைய அரசியல் தலைவர்களின் முன்னோர்கள் கிறிஸ்தவத்திற்கு மாறி வசதி வாய்ப்புகளைப் பெற்றவர்கள்தான். சொலமன் வெஸ்ற்றிட்ஜ்வே டயஸ் (SWRD) பண்டாரநாயக்க, டொன் அல்வின் (DA)ராஜபக்ஷ, யூனியஸ் றிச்சாட் (JR)ஜெயவர்த்தனா, சிறில் எஸ்மன்ட் ரணில் விக்கிரமசிங்க போன்ற பெயர்களே அதைக்கூறும். எனவே மதம் மாறுவதில் வெறுமனே நம்பிக்கைகள் என்பதற்கப்பால் அரசியல், பொருளாதார, சமூகக் காரணிகளே அதிகளவு செல்வாக்குச் செலுத்தி வந்துள்ளன என்பதே வரலாறு. இவ்வடிப்படையிலேயே தற்போது சைவர்கள் கிறிஸ்தவத்துக்கு மாறுதல் அல்லது மாற்றப்படுதல் என்ற விடயத்தையும் நாம் நோக்க வேண்டும்.

மதமாற்றுவதன் மூலம் சைவத்துக்குச் சவாலாகவும் சைவர்களிடையே அச்சத்தையும் தோற்றுவிக்கும் செயல்களில் நாளுக்குநாள் புதிது புதிதாக முளைக்கும் நவீன கிறிஸ்தவ சபைகளே காணப்படுகின்றன. அதே வேளை குறிப்பிட்ட இடங்களில் நிகழ்ந்த விரும்பத்தகாத சில சம்பவங்களைத்தவிர மரபுரீதியான கத்தோலிக்க, புரட்டஸ்தாந்த சபைகள் இவ்வாறு ஈடுபடுவது அரிதாகும். எனினும் இவர்கள் புதிய கிறிஸ்தவ சபைகளின் அத்துமீறல்கள்,அதனால் ஏற்படக்கூடிய சமூகப் பிளவு தொடர்பாக மௌனம் காப்பது சைவர்களிடத்து மனக்குறையைத் தோற்றுவித்துள்ளது என்பதையும் மறுக்க முடியாது.

பிரச்சினையொன்றுடன் தொடர்புபடும் தரப்புகள் ஒவ்வொன்றும் தமது பக்க நியாயங்களைத்தூக்கிப்பிடிப்பதுதான் வழமை. மறுபக்கத்து நியாயங்களை ஏற்றுக் கொள்ளவோ தீர்வு காணவோ விரும்புவதில்லை. இது மதமாற்றத்துக்கு எதிராக குரலெழுப்பும் சிவசேனை, நாகசேனை போன்ற தீவிர அமைப்புக்ளுக்கும் மதத் தலைவர்களுக்கும் மட்டுமல்ல மதமாற்றச் செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபடும் கிறிஸ்தவ சபைகளுக்கும் பொருந்தும். குறிப்பாக மதமாற்றத்துக்கு எதிராகக் குரல் எழுப்புவோர் எதிர்த்தரப்பைக் குற்றஞ் சாட்டுவதில் மட்டும் கவனம் செலுத்துகிறார்களேயன்றி தமது பக்கப் பலவீனங்களை  உணரவோ களையவோ முயல்வதாகத் தெரியவில்லை. எல்லா மனித நடத்தைகளுக்கும் இருப்பது போலவே மதமாற்றத்திலும் இழுவைக் காரணிகளும் (Pulling Factors)தள்ளுங்காரணிகளும் (Pushing Factors) செல்வாக்குச் செலுத்துகின்றன. தம்மதத்தைக் காக்கவும் மதமாற்றத்தைத் தடுக்கவும் உண்மையாக விரும்புவோர் முதலில் தமது பக்கத்திலுள்ள தள்ளுங்காரணிகளுக்கு தீர்வு காணவேண்டும். இவை மதமாற்றத்தைத் தடுப்பதற்கு மட்டுமல்ல அருகிப்போகும் மத ஈடுபாட்டை அதிகரிப்பதற்கும் அவசியமாகும். ஏனெனில் பெரும்பாலான கோயில்களில் உபயகாரரைத்தவிர வழிபடுவோர் குறைவு. இயந்திரங்களே வாத்திய ஒலிகளை இசைக்கின்றன. சாமி தூக்குவதற்கு ஆட்களை வலிந்து அழைக்கும் நிலைமை.

சமய அறிவு, ஆன்மீக சிந்தனைகள் என்பவற்றை வளர்ப்பதில் கோயில்கள் மற்றும் சைவ நிறுவனங்கள் எந்தளவுக்கு இன்று முயலுகின்றன. ஊர்க்கோயில் ஒவ்வொன்றும் தனது ஊட்டப் பிரதேசத்திலுள்ள மக்களுக்கு சமய அறிவையும் ஈடுபாட்டையும் வளர்ப்பதற்கான ஏதாவது செயற்றிட்டங்களைக் கொண்டுள்ளனவா? குறைந்தது திருவிழாக் காலங்களில் வருவோர்க் காதல் சமய அறிவையும் ஆன்மீக சிந்தனைகளையும் வழங்கும் நிலையில் எத்தனை  குருக்கள் அல்லது தர்மகர்த்தா சபையினர் உள்ளனர்? 'திராவிட கானம் இசைக்க' வழங்கும் சிறிய பொழுது தவிர புரியாத மந்திரங்களும் கிரியைகளும் அறிவு மிகுந்த இன்றைய சமூகத்தில் சமய அறிவையும் ஈடுபாட்டையும் வளர்க்க எவ்வளவு தூரம்போதுமானவை?சமயச் சொற்பொழிவுக்கும் தேவாரம் பாடுவதற்கும்  விலைசெலுத்தும் ஒருநிலைக்கு சைவம் மாறியது வளர்ச்சியா? தளர்ச்சியா? உண்மையில் இன்று சைவ சமய அறிவை வளர்ப்பதற்கான ஒரே மூலமாக பள்ளிகளில் கற்பிக்கப்படும் சைவநெறிப் பாடமே உள்ளது. அதுவும் பரீட்சையை நோக்காகக் கொண்டிருப்பதுடன் பெரும்பாலும் நேர அட்டவணையை நிரப்புவதற்கு ஒதுக்கீடு செய்யப்படும் ஆசிரியர்களாலேயே கற்பிக்கப்படுகிறது. சமயபாடம் கற்பிக்கும் எத்தனை ஆசிரியர்கள் பாடப் புத்தகத்துக்கு அப்பால் சென்று கற்பிக்கிறார்கள்? பாடப்புத்தகத்திலுள்ள தேவாரங்களைப் பண்ணோடு இசைத்து விளக்கமும் வழங்குகிறார்கள்?தேவாரப் பாடல்களும் வசன வாசிப்புகளாக இருக்கும்போது இசைக்கும் வல்லமை எவ்வாறு உருவாகும். இதனால் சங்கீதம் கற்கும் மாணவர்களே தேவாரங்கள் பாடும் நிலை. ஆனால் கிறிஸ்தவப் பிள்ளைகள் அனைவராலும்  எப்படிச் சிறப்பாகப் பாடமுடிகிறது?

சமூக நிறுவனங்களில் ஒன்று என்ற வகையில் கோயில்கள் சமூகநலன்சார் விடயங்களில் எவ்வளவு தூரம் பங்கெடுக்கின்றன? எத்தனை கோயில்கள்

> **சிலைகள் வைப்பதாலோ, மதவெறுப்புணர்வை வளர்ப்பதாலோ சைவத்தை வளர்க்கவோ மதமாற்றத்தைத் தடுக்கவோ  முடியாது.**

சொந்த நிதியிலிருந்து அல்லது தனது தலைமையில் நிதிதிரட்டி சமூகத்தின் தேவைகளை குறிப்பாக நலிந்தோர்க்கான உதவிகளைச் செய்கின்றன. செல்வச்சந்நிதி அன்னதான ஆச்சிரமத்தால் செய்யமுடிந்த உதவிகளைக்கூட கோயில்களோ அன்றி மதமாற்றத்துக்கு எதிராகக் குரல்கொடுப்போரோ செய்ய முன்வருவதில்லையே. கொரோனா காலத்தில் கோயில்களில் திருவிழாக்கள் இடம்பெறவில்லை. திருவிழாவுக்குச் செலவழிக்கும் பல இலட்சங்களில் ஒரு சில இலட்சங்களைக் கூட அந்நேரத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுதற்கு பெரும்பாலான கோயில்களும் உபயகாரர்களும் விரும்பவில்லையே.கோயில் திருப்பணி என்பது கோபுரங்கள் கட்டுவது, வண்ணம் பூசுவது, வளங்களைப்பெருக்குவது என்பதற்கப்பால் நலிந்தோர் துயர் துடைப்பதுவும் ஒன்று என எண்ணவில்லையே. அடியவர்க்கு அமுதூட்டல் என்பது அன்னதானத்துக்கு அப்பால் பசித்தோர்க்கு உணவளிப்பதுவும் ஒன்று என்று வழங்கவில்லையே. சரி பிழை என்பதற்கப்பால் பசித்த வயிற்றுக்கு சோறுபோட்டு துன்பங்களில் துயர்போக்குபவன் பின்னால் படிப்பறிவு குறைந்தவர்கள் செல்வது ஒன்றும்ஆச்சரியமானதல்லவே. கோயில் கட்டிடங்களுக்கும் ஆடம்பர விழாக்களுக்கும் கிடைக்கும் நிதியை விடக்கூடுதலாகவா மதமாற்றச் சபைகளுக்கு வெளிநாட்டு நிதி வருகிறது? இங்கு நிதி பிரச்சினையன்று. சிந்தனையும் மனமும் மாறாதிருப்பதே பிரச்சினை.

இவற்றை விட இன்னொரு முக்கிய தள்ளுகாரணியாக இருப்பது இந்துக்குள் கரைந்துவிட்ட இன்றைய சைவத்தின் சமத்துவமின்மை. நவீன கிறிஸ்தவ சபைகளுக்கு மாறுவோரில் பெரும்பாலானவர்கள் சாதிரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் ஒதுக்கப்பட்டவர்களும் ஒடுக்கப்பட்டவர்களும் ஆவர். இவர்கள் சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதிவரை கோயில்கள், உணவகங்களில் தமது அடிப்படைச் சமத்துவ உரிமைக்காகப் போராடிவர்களின் வழித்தோன்றல்கள். போராட்டங்களாலும் சட்டங்களாலும் அங்கீகரிக்கப்பட்ட அவர்களது உரிமைகள் பெரும்பாலான கோயில்களில் இன்று பெயரளவில் மட்டுமே உள்ளன என்பது மறுக்க முடியாத உண்மை. சாமி காவுதல் போன்ற உள்ளகத் திருப்பணிகள்,அன்னதானம் போன்றவை இன்னும் அவர்களால் அணுகப்பட முடியாதவை. இவை தொடர்பாக அண்மையில் பிபிசி நிறுவனத்தால்  வெளியிடப்பட்ட காணொலி உண்மைக்குப் புறம்பானது என எவருங் கண்டிக்காமை இந்த உண்மையை அங்கீகரிப்பதாகத்தானே அமையும். சைவக் காப்பகங்களில் சேர்ப்பதற்கு சாதி பார்த்ததும்தேரிழுப்பதற்கு 'பைக்கோ' பயன்படுத்தியதும் பெருமைக்குரிய இச் சைவப் பூமியில் தானே. தனக்குஅங்கீகாரம் கிடைக்காத இடத்தை வெறுத்து அங்கீகாரம் கிடைக்கும் இடத்தை நாடுவதும் மனித இயல்புதானே.

மறுபுறத்தில் புதிய கிறிஸ்தவ சபைகளில் இணைவோர் உண்மையான இறை நம்பிக்கையின்அடிப்படையில்தான் இணைகிறார்களா என்பது கேள்விக்குறி. சைவத்தில் இல்லை எங்கள் மதத்தில் தான்உள்ளன என அவர்கள் நம்பவைக்கப்படுகிறார்கள். சைவத்தில் இல்லாத ஆன்மிகச் சிந்தனைகளுக்கும்  நெறிகளுக்கும் மேலாக வேறு மதங்களில் ஏதும் சொல்லப்படவில்லை என்பதை தனது மதத்தையும் ஏனைய மதங்களையும் நன்றாக விளங்கிக் கொண்டவர்களுக்குப் புரியும். இங்கு நடப்பது என்னவெனில் சைவத்தில் காணப்படும் பலவீனங்களை அச்சபைகள் திட்டமிட்டு பலமாக மாற்றிக் கொள்கின்றன என்பதாகும். அரசியலமைப்பினால் வழங்கப்பட்டுள்ள மத சுதந்திரத்தை இச்சபைகள் தவறாகப் பயன்படுத்துகின்றன. அச்சுதந்திரம் 'மதச் சுமூகவாழ்வு' நோக்கத்தின் அடிப் படையில் அதே அரசியலமைப்பால் மட்டுப்படுப் படுத்தப்பட்டுள்ளன என்பதையும் அச்சபைகள் கவனிக்க வேண்டும். ஒருவரின் பொருளாதார நிலையைப் பயன்படுத்தி அல்லது உதவிகள், பரிசில்கள் வழங்கி மதமாற்றஞ் செய்வதுவும் கட்டாய மதமாற்றமாகவே கொள்ளப்படும் என இந்திய உச்ச நீதிமன்றங்கள் வழங்கியுள்ள தீர்ப்புகளும் கவனிக்கப்படவேண்டும்.

இந்நிலைமைகளைப் கருத்திற் கொண்டு சிலைகள் வைப்பதாலோ, மதவெறுப்புணர்வை வளர்ப்பதாலோ சைவத்தை வளர்க்கவோ மதமாற்றத்தைத் தடுக்கவோ முடியாது.

# சட்ட மறுப்பு போராட்டம் வெடிக்குமா...?

ஏழு தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து தற்போதைய அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்துக்கு எதிராகவும் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் அடக்குமுறைகள் - பௌத்தமய மாக்கல் மற்றும் வடக்கு - கிழக் கில் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் ஒடுக்குமுறைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக அழைப்பு விடப்பட்ட கதவடைப்பு போராட்டம் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து, பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் அரசாங்கத்துக்கு ஓர் எச்சரிக்கையை விடுத்தார்.

அதாவது, “வடக்கு - கிழக்கில் மக்கள் அரசாங்கத் துக்கு செயல்பாடுகளுக்கு எதிராக தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்கள். இந்த எதிர்ப்பை அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும். இதில் உள்ள சாதக - பாதக நிலைமைகளை அரசாங்கம் புரிந்து அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். தவறுமிடத்தில் நாங்கள் சட்ட மறுப்பு போராட்டத்தை மேற்கொள்ள நேரிடும் என்று கூறியிருந்தார். அவரின் இந்த அழைப்பு தொடர்பில் பொது அமைப்புகள், கட்சி தங்கள் கருத்துகளை இங்கு பிரதிபலிக்கிறார்கள்...!



## பழையவழியே வரவேற்போம்!

**சீ. வீ. கே. சிவஞானம்**
அவைத்தலைவர்,
வடக்கு மாகாண சபை.

பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன், அண்மையில் இடம்பெற்ற கதவடைப்பு போராட்டம் தொடர்பில் - அதில் உள்ள முக்கிய பிரச்னைகளுக்கு செவிசாய்க்காது தொடர்ந்து செயல்படுமாக இருந்தால் - சட்டமறுப்பு போராட்டம் ஒன்று நடைபெறக்கூடிய வாய்ப்பிருப்பதாக கூறி இருக்கின்றார். அது ஒரு புதிய விடயம் இல்லை.

1961ஆம் ஆண்டு தமிழரசு கட்சி சட்ட மறுப்பு போராட்டத்தில் ஈடுபட்டு இருக்கின்றது. காலங்காலமாக இந்த போராட்டத்தில் நாங்கள் ஈடுபட்டு இருக்கின்றோம். அது ஒரு தாக்கம் உள்ள விடயமாக காணப்படுகிறது. இவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்த கூடிய போராட்டத்தை மேற்கொள்வதன் மூலமே அரசாங்கத்துக்கு அழுத்தத்தை ஏற்படுத்த முடியும். அது அவசியமான ஒன்றாகும் - வரவேற்கக் கூடிய விடயமாகும்.

## சட்ட மறுப்பு போராட்டம் என்றால் என்ன?

சட்ட மறுப்பு என்ற போராட்டம் என்பது அஹிம்சை வழியிலான அறப்போராட்ட வடிவமாகும். அரசு தனிநபர்களின் உள்ளுணர்வுக்கு அல்லது மனச்சாட்சிக்கு எதிராக சட்டம் இயற்றுவதை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று தனது “குடிசார் சட்டமறுப்பு“ என்ற நூலில் குறிப்பிடுகிறார் ஹென்றி டேவிட் தூரோ.

காந்தியின் போராட்ட வடிவங்களாக சத்தியாக்கிரகம், ஒத்துழையாமை மற்றும் குடியியல் சட்ட மறுப்பு என்பன இருந்தன. இந்த போராட்ட வடிவத்தை அமெரிக்காவில் கறுப்பினத்தவர்களின் விடுதலைக்கான போராட்டத்தில் மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர் கையாண்டார்.

**இலங்கையில் சட்டமறுப்பு போராட்டம்!**

தனிச் சிங்கள சட்டத்தை எதிர்த்து 1961இல் சத்தியாகிரக போராட்டங்கள் இடம்பெற்றன. இதன் தொடர்ச்சியாக, குடியியல் சட்டமறுப்புப் போராட்டத்தின் ஒரு படியாக அஞ்சலகக் கட்டளைச் சட்டத்தை மீற தமிழரசுக் கட்சி முடிவெடுத்தது. அச்சட்டமானது முத்திரைகள் வெளியிடும், அஞ்சல் சேவை நடத்துவதாக அமைந்தது. 1961 ஏப்ரல் 14 அன்று இலங்கை தமிழரசுக் கட்சி “தமிழரசு“ முத்திரைகளை வெளியிட்டது.

சா. ஜே. வே.செல்வநாயகம் தமிழரசு தபாலகத்தில் தபால் அதிபராக இருந்து முதலாவது 10 சத முத்திரையை விற்பனை செய்ய, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் எம். சிவசிதம்பரம் அதனை வாங்கிக்கொண்டார். இதன் தொடர்ச்சியாக குடியியல் சட்டமறுப்புப் போராட்டத்தின் ஓரங்கமாக தமிழரசு தபால் சேவை முன்னெடுக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தொடர்ச்சியான போராட்டங்கள் தேவை!

**ச. இளங்கோவன்**
தலைமை அறங்காவலர்,
தந்தை செல்வநாயகம் அறக்கட்டளை.



வடக்கு - கிழக்கு முழுவதிலும் அரசாங்கத்தின் ஒடுக்குமுறைகளுக்கு எதிராக கதவடைப்பு இடம் பெற்றது என்பதை அனைவரும் அறிவீர்கள். இதற்குப் பிறகும் அரசாங்கம் செவிசாய்க்காமல் இருக்குமானால், சட்ட மறுப்பு போராட்டம் ஒன்று நடத்த வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் பாராளுமன்றத்தில் தெரிவித்து இருக்கின்றார். இது மிகவும் முக்கியமான ஓர் அம்சம். ஏனென்றால், அரசாங்கம் நம்பிக்கைகளை கொடுத்து ஏமாற்றும் நடவடிக்கையை செய்கின்றது. இதனால் மக்கள் மத்தியில் ஓர் அவநம்பிக்கை தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இதனை ஒட்டி பொது அமைப்புகளும் அரசியல் கட்சிகளும் கட்டாயமாக தொடர்ச்சியாகப் போராட்டங்களை மேற்கொள்ள வேண்டிய தேவை உள்ளது.

அறிக்கையிடல்
REPORTING
என். குகராஜ்

## மக்களை தயார்ப்படுத்துவோம்!

**பா. கஜதீபன்**
முன்னாள் உறுப்பினர்,
வடக்கு மாகாண சபை.



எங்களால் அழைப்பு விடுக்கப்பட்ட கதவடைப்பு போராட்டத்துக்கு வடக்கு - கிழக்கு மக்கள் முழுமை யான ஆதரவை வழங்கியிருந்தார்கள். இப்படியாக எங்களுடைய மக்கள் தமது உணர்வுகளை மிகத் தெளிவாக வெளிப்படுத்திய பிறகும் நாங்கள் என்ன விதமான கோரிக்கைகளை முன்வைத்து இந்த செயல்பாட்டை மேற்கொண்டோமோ மக்கள் அவ்விதமான எதிர்பார்ப்புடன் இருக்கின்றார்கள். அந்த எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்பட முடியாத சந்தர்ப்பத்தில் - நிறைவேறாத சந்தர்ப்பத்தில், அவற்றை நிறைவேற்ற வேண்டிய அரசாங்கம் நிறைவேற்றாத சந்தர்ப்பத்தில், வடக்கு - கிழக்கில் இருக்கக்கூடிய அரச அலுவலகங்களின் செயல்பாட்டை எவ்வாறு இடைநிறுத்தி அந்தப் போராட்டத்தை முன்னெடுப்பது தொடர்பில், நாங்கள் எல்லோரும் ஒன்றுகூடி ஆராய்ந்து அதை சரியான வகையிலே செயல்படுத்த வேண்டியிருக்கின்றது.

இது வடக்கு - கிழக்கு மக்களுக்கு புதிய விடயம் அல்ல, இது முன்னதாக 1961ஆம் ஆண்டு காலப்பகுதியில் மிகப்பெரிய எழுச்சியோடு மக்கள் நடத்திக் காட்டிய போராட்டம்தான் அப்படியான ஒரு நிலைமை வடக்கு - கிழக்கில் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இப்போது அதிகமாகக் காணப்படுகின்றது.

மக்களின் உணர்வுகள் அவ்வாறுதான் காணப்படுகின்றன. அப்படியான ஒரு நிலைமை ஏற்படுவதற்கு முன்னதாகவே இப்படியான செயல்பாடுகளுக்கு அரசாங்கம் தீர்வு காணவேண்டும் என்பதுதான் நமது நிலைப்பாடு. ஆனால், தீர்வு காணுமா என எமக்கு சந்தேகம் இருக்கின்றது.

இவ்வாறான விடயங்களை மக்கள் மத்தியில் கொண்டு சென்று, மக்கள் மத்தியில் தெளிவுபடுத்தி - மக்களை தயார்படுத்தி இந்த செயல்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய பெரும் பொறுப்பும் கடமையும் எங்கள் அனைவருக்கும் உள்ளது.

## இனத்தின் இருப்பை அரசு உறுதிப்படுத்த வேண்டும்!

**இ. ஆனல்ட்,**
முன்னாள் முதல்வர்,
யாழ்ப்பாணம் மாநகரம்.



அண்மையில், இடம்பெற்ற வடக்கு - கிழக்கு தழு விய கதவடைப்பு போராட்டம் மீண்டும் ஒரு தடவை தமிழ்த் தேசத்திலே தமிழர்கள் எல்லோரும் ஒற்றுமையாக அரச இயந்திரத்தின் ஆட்சியையும் - அரசியல் பின்னணியையும் எதிர்த்து தங்களு டைய பூரணமான எதிர்ப்பை வெளிப்படுத்தி இருந்தார்கள்.

ஜனநாயக முறையிலே சாத்வீக முறையில் எங்களுடைய உரிமை போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். ஓர் இனமாக இருந்து எங்களுடைய போராட்ட வடிவம் மாற்றப்பட்டு, மீண்டும் அதே ஜனநாயக முறையில் எங்களுடைய உரிமைகளையும் வாழ்வுரிமையும் பெற வேண்டும் என்ற எண்ணத்திலே நாங்கள் போராட்டங்களை முன்னெடுக்கின்றோம்.

அரசாங்கம் இதற்கு செவிசாய்க்க வேண்டும். 70 ஆண்டுகளுக்கு மேலாக ஓர் இனமாக விடுதலை அடையவில்லை. ஆகவே, கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் எங்கள் மீது பயங்கரமான ஆபத்தை ஏற்படுத்துவதோடு எங்களுடைய வாழ்க்கையை கேள்விக்குறியாக்கும் முறையில் இந்த சட்டம் நிறைவேற்றப்படவுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கதவடைப்பு போராட்டத்தின் அர்த்தம் உணர்ந்து, இந்த அரசாங்கம் நீதியான முறையில் வாழ்கின்ற ஓர் இனத்தின் இருப்பை உறுதி செய்ய வேண்டும். பாதுகாப்பை ஏற்படுத்த வேண்டும். இவ்வாறான விடயங்களை உதாசீனம் செய்யுமாக இருந்தால், மீண்டும் ஜனநாயக ரீதியான ஒரு மாபெரும் போராட்டத்தை முன்னெடுத்து அரச இயந்திரத்தை முடக்குவதற்கான செயல்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். அதற்குரிய முழு ஆதரவையும் மக்கள் வழங்க வேண்டும்.



# கவர்ந்திழுக்கும் பாயல்

'ஆர். எக்ஸ். 100' படத்தை இயக்கியதின் மூலம் தெலுங்கு, ஹிந்தி ரசிகர்களிடையே பரிச்சயமானவர் இயக்குநர் அஜய் பூபதி. இவரின் இயக்கத்தில் அடுத்ததாக உருவாகியிருக்கும் திரைப்படம் 'செவ்வாய்கிழமை" இந்த திரைப்படத்தின் முதல் பார்வை தற்போது சமூகவலை தளங்களில் பிரபலமாகியுள்ளது.

ஆர். எக்ஸ். 100 படம் மூலம் புகழ்பெற்ற பாயல் ராஜ்புத்துடன் மீண்டும் இணைந்துள்ள அஜய் பூபதி, இப்போது தனது புதிய படத்தில் இருந்து 'ஷைலஜா' என அவரின் கதாபாத்திரத்தின் முதல் பார்வையை வெளியிட்டுள்ளார்.

கதாநாயகியின் தோரணையும் அவளது கண்களில் நிலவும் கசப்பான உணர்ச்சியும், விரலில் இருக்கும் பட்டாம் பூச்சியும் சமூகவலைதளங்களில் கவனம் பெற்று வருகிறது. இந்தப் படம் தமிழ், தெலுங்கு, கன்னடம் மற்றும் மலையாளம் ஆகிய மொழிகளில் வெளியாகிறது.

# தமிழே போதும்...!

விருது வழங்கும் விழாவில் கலந்துகொண்ட இசையமைப்பாளர் ஏ. ஆர். ரஹ்மான் தன் மனைவியை மேடையில் “ஹிந்தியில் பேச வேண்டாம், தமிழில் பேசுங்கள்” என்று கூறிய காணொலி பதிவு கவனம் பெற்று பிரபலமாகியுள்ளது.

அண்மையில் சென்னையில் நடந்த விருது வழங்கும் நிகழ்ச்சி ஒன்றில் இசையமைப்பாளர் ஏ. ஆர். ரஹ்மான் தனது மனைவியுடன் கலந்து கொண்டார். ஏ. ஆர். ரஹ்மான் மேடையில் இருந்தபோது நிகழ்ச்சித் தொகுப்பாளர்கள், அவரது மனைவி சாயிராவையும் மேடைக்கு வருமாறு அழைத்தனர். அவர் மேடைக்கு வந்து ரஹ்மான் அருகில் நின்றதும் அவரிடம் ஏ.ஆர்.ரஹ்மான், 'ஹிந்தியில் வேண்டாம், தமிழில் பேசவும்' என்று கூறுகிறார். உடனே கூட்டத்தில் இருந்தவர்கள் ஆர்ப்பரிக்க, சாயிரா புன்னகையுடன் 'கடவுளே' என்று சொல்லிவிட்டு பேச ஆரம்பிக்கிறார்.





# மனம் திறந்த பூஜா

நடிகை பூஜா ஹெக்டே தெலுங்கு, தமிழ், ஹிந்தி உள்ளிட்ட மொழிகளில் நடித்து வருகிறார். சமீபத்தில் இவர் சல்மான் கானுக்கு ஜோடியாக . கிஸி கி ஜான் கிஸி கி பாய் படத்தில் நடித்தார். இந்தப்படம் எதிர்பார்த்த வரவேற்பை பெறவில்லை. பூஜா ஹெக்டே கதை தேர்வு செய்யும் முடிவு குறித்து சிலர் விமர்சித்து வந்த நிலையில், சமீபத்தில் அவர் அளித்த பேட்டி ஒன்றில், ”நான் ஒன்றும் சினிமா குடும்ப பின்னனியில் இருந்து நடிக்க வரவில்லை. என்னை தேடி ஒரு நாளைக்கு 20 கதைகள் வருவதற்கு நான் சாதாரண குடும்பத்தில் இருந்து நடிக்க வந்துள்ளேன். என்னை தேடி வரும் கதையில் நான் நடித்து வருகிறேன் - என்று கூறியுள்ளார்.







**திரைப்படம் : பொன்னியின் செல்வன் -2**
**இயக்கம் : மணிரத்னம்**
**இசை : ஏ. ஆர். ரஹ்மான்**
**நடிப்பு : விக்ரம், ஐஸ்வர்யா ராய், த்ரிஷா, ஜெயம் ரவி, கார்த்தி**

ஆதித்த கரிகாலன், நந்தினி ஆகியோரின் இளமைக் கால சந்திப்பு, காதல் ஆகியவற்றுடன் படத்தின் எழுத்தோட்டம் நகர்கிறது. அதன்பின் முதல் பாகத்தில் என்ன சொல்லப்பட்டது என்பது கமல் ஹாசனின் பின்னணிக் குரலுடன் விளக்கவுரையாக அமைந்து நம்மை இரண்டாம் பாகத்துக்குள் இழுத்துச் செல்கிறது.

முதல் பாகத்தில் கடல் சீற்றத்தில் சிக்கி கலத்துடன் மூழ்கிய அருண்மொழிவர்மன், வந்தியத் தேவன் ஆகியோர் உயிருடன் திரும்பி வருகிறார்கள். ஆதித்த கரிகாலனைக் கொன்று பழிக்குப்பழி வாங்கத் துடிக்கும் நந்தினி, தமது சோழ சாம்ராச்சியத்தை காப்பாற்ற குந்தவை எடுக்கும் முயற்சிகள், சிற்றரசர்கள் செய்யும் சதியை அவர்களிருக்கும் கடம்பூருக்கே சென்று ஏளனம் செய்யும் ஆதித்த கரிகாலன், தனது முன்னாள் காதலனான சோழச் சக்கரவர்த்தியின் உயிரைக் காப்பாற்றும் மந்தாகினி என இந்த இரண்டாம் பாகம் பரபரப்பாகவும், விறுவிறுப்பாகவும் நகர்கிறது.

இரண்டாம் பாகத்தில் அனைத்து நடிகர்களுக்குமே முக்கியத்துவம் வாய்ந்த சில காட்சிகளை இயக்குநர் மணிரத்னம் அமைத்திருந்தாலும், நந்தினியும், ஆதித்த கரிகாலனும் மற்றவர்களைவிட தங்கள் தேர்ந்த நடிப்பால் நம்மை ஆட்கொள்கிறார்கள். 'நாக பாம்பு' என நந்தினி பற்றி ஆதித்த கரிகாலன் சொல்வது போலவே படம் முழுவதும் தனது பழிவாங்கும் வெறியை காட்சிக்குக் காட்சி வெளிப்படுத்தி இருக்கிறார் ஐஸ்வர்யா ராய். அப்படிப்பட்ட பழிவாங்கும் பெண்ணுக்குள் அவரின் தாயைப் பற்றித் தெரிந்ததும் அவருக்குள்ளும் பாசம் இருக்கிறது என்பதைக் கண்ணீர் மூலம் புரிய வைக்கிறார்.

ஆவேசம் நிறைந்த இளவரசர் ஆதித்த கரிகாலனாக படம் முழுவதும் ஆக்கிரமிப்பு செய்துள்ளார் விக்ரம். தன் முன்னாள் காதலி நந்தினியை அவர் சந்தித்துப் பேசும் அந்த கடம்பூர் மாளிகை காட்சி ஒன்று போதும் விக்ரமின் நடிப்பைப் பற்றிப் பாராட்டிப் பேச. நாவலைப் போலவே படத்திலும் அவரைக் கொன்றது யார் என்ற கேள்விக்கு விடை சொல்லாமல் விட்டுள்ளார் இயக்குநர் மணிரத்னம்.

விக்ரமும், ஐஸ்வர்யா ராயும் படம் முழுவதையும் ஆட்கொள்ள, கிடைக்கும் வாய்ப்புகளில் தனது முத்திரையை பதித்துள்ளார் வந்தியத் தேவன் கார்த்தி. உண்மையான நண்பன், வீரன் எப்படி இருப்பார் என்பது கார்த்தியின் நடிப்பில் வெளிப்படுவது சிறப்பு.

வந்தியத்தேவன், குந்தவை இருவரும் சந்திக்கும் அந்தக் காட்சியில் ஒளிப்பதிவும், பின்னணி இசையும், வசனமும் நம்மையும் அவர்களின் காதல் வலைக்குள் விழ வைத்துவிடுகிறது.

'பொன்னியின் செல்வன்' என்று படத்துக்கு தலைப்பை வைத்தாலும் அவருக்கான முக்கியத்துவம் இந்த பாகத்தில் இல்லையே என்பது குறை. இருப்பினும் பெருந்தன்மையான குணம் படைத்த அருண்மொழி வர்மனின் கதாபாத்திரத்தில் ஜெயம் ரவி நடிப்பில் இயல்பாக உள்ளது.

அழகிலும், அரசியலிலும் சிறந்து விளங்கும் இளவரசியாக த்ரிஷா. குந்தவை என்ற பேரழகி இப்படித்தான் இருந்திருப்பாரோ என தன் நடிப்பின் மூலம் காட்சிக்குக் காட்சி வியக்க வைக்கிறார்.

சுந்தர சோழர், பெரிய பழுவேட்டரையர், சிறிய பழுவேட்டரையர், மதுராந்தகத் தேவர், பார்த்திபேந்திர பல்லவன், பெரிய வேளார், ஆழ்வார்க்கடியான், ரவிதாசன், பூங்குழலி, வானதி, செம்பியன் மாதேவி ஆகியோரின் காட்சிகள் படத்தில் கொஞ்ச நேரமே வந்தாலும் அவர்களுக்குரிய முக்கியத்தவம் வழங்கப்பட்டுள்ளது.

ரவி வர்மன் ஒளிப்பதிவு முதல் பாகத்தைவிடவும் சிறப்பு. ஏ. ஆர். ரகுமான் பின்னணி இசையில் மிரட்டியிருக்கிறார். பாடல்களை மட்டும் கொஞ்சமே கொஞ்சம் இடம்பெறச் செய்தது பெரும் வருத்தம். உச்சக்காட்சியில் மட்டுமே போர்க்கள காட்சிகள் வருகின்றன. இடையில் அவ்வப்போது சில சண்டைகள் வந்து போகிறது.

முதல் பாகத்தையும், இந்த இரண்டாம் பாகத்தையும் பார்த்த பிறகு இளைய தலைமுறையின் 'பொன்னியின் செல்வன்' நாவல் புத்தகங்களை வாங்கிப் படிக்காமல் போனால் அதற்கு மணிரத்னம் மட்டுமே காரணமாக இருப்பார். அந்த அளவிற்கு ஐந்து மணி நேரத்துக்குள் 'பொன்னியின் செல்வன்' சரித்திரத்தை ரசிக்க வைத்துவிட்டார்.

ஆயிரம் ஆண்டு புகழ் வாய்ந்த இராஜராஜ சோழனின் சரித்திரத்தை எந்த மிகைப்படுத்தலும், செயற்கைத்தனங்களும் இல்லாமல் பதிவு செய்திருக்கிறார் மணிரத்னம்.

நாவலில் இல்லாத சில கதாபாத்திரங்கள் இந்த இரண்டாம் பாகத்தில் இடம் பெறாமல் போனதும் நாவல் ரசிகர்களுக்கு ஒரு வருத்தமாக இருந்திருக்கும். கல்கி எழுதிய நாவலில் இடம்பெறாத உச்சக் காட்சியை படத்துக்காக சேர்த்தது ஏன் என்று தெரியவில்லை...???

இனி, வரப்போகும் பல சரித்திரப் படங்களுக்கு பொன்னியின் செல்வன் தொடக்கமாக இருக்கும்.

# சூட்டோடு சூடாக...!



நீண்ட நாள்களுக்குப் பிறகு, 50ஆவது நாளைக் கடந்து திரையரங்கில் ஓடும் வெற்றிப் படமாகியிருக்கிறது சசி குமாரின் 'அயோத்தி.' படத்துக்கான வரவேற்பும் வசூலும் பெரிதாக இருக்க, இதே வேகத்தில் தன் அடுத்த படங்களையும் வெளியிடத் திட்டமிட்டுள்ளார் சசி குமார்.

வரிசையாக அவர் நடித்த மூன்று படங்கள் வெளியீட்டுக்கு தயாராக இருக்க, அதில் 'நந்தன்' படத்தின் வேலைகளை விரைவாக்கச் சொல்லியிருக்கிறாராம். இதனால், மே விடுமுறையின்போது நந்தன் வெளியாகலாம்.

# சிலம்பம் கற்கும் வீராங்கனை

குத்துச் சண்டை வீராங்கனையான ரித்திகா சிங், சுதா கொங்கரா இயக்கிய “இறுதிச் சுற்று“ படம் மூலம் நடிகையாக அறிமுகமானார்.



இப்போது “கிங் ஆப் கோதா“ படத்தில் துல்கர் சல்மானுடன் நடித்து வருகிறார். தற்போது தெலுங்கில் தயாராகும் ஒரு படத்தில் சிலம்பாட்ட வீராங்கனையாக நடிக்கிறார். இந்த படத்துக்காக ரித்திகா சிங் முறைப்படி சிலம்பம் கற்று வருகிறார்.



# ஆசியாவிலேயே முதல்வன்

ஆசிய அளவில் அதிக பிரபலமான அணி வரிசையில் ரொனால்டோவின் அல் நாசர் அணியை முந்தியுள் ளது டோனி தலைமையிலான சென்னை அணி.

ஆசிய அளவில் பல்வேறு போட்டிகளில் பங்கேற்கும் அணிகளில் எது 'முதன்மை" என இணையதளம் ஒன்று கணக்கெடுத்தது. கடந்த மாதத்தில் சமூக வலைதளங்களில் ஒருவருக்கு ஒருவர் பகிர்ந்து கொண்ட தகவல்களின் அடிப்படையில் இது முடிவு செய்யப்பட்டது. இதன்படி பிறீமியர் கிரிக்கெட் தொடரில் பங்கேற்கும் டோனி தலைமையி லான சென்னை அணி ஆசிய அளவில் முதலிடம் பிடித்தது.

கடந்த மாதம் சென்னை அணி குறித்து 51.2 கோடி முறை தகவல்கள் பரிமாறப்பட்டன. இந்த வரிசையில் போர்த்துக்கல் உதைபந்தாட்ட அணியின் தலைவர் கிறிஸ்ரியானோ ரொனால்டோ, விளையாடும் அல் நாசர் (சவுதி அரேபியா) உதைபந்தாட்ட அணிக்கு இரண்டாவது இடம் கிடைத்துள்ளது. இந்த அணி குறித்த செய்திகளை 50 கோடி முறை பகிர்ந்துள்ளனர்.

கோலியின் பெங்களூர் அணி மூன்றாவது இடம் பெற்றது. 34.5 கோடி முறை பெங்களூார் குறித்த செய்திகள் பரிமாறப்பட்டன. ரோஹித் சர்மாவின் மும்பை (27.4 கோடி) அணி நான்காவது இடம் பெற, சவுதி அரேபியாவின் அல் ஹிலால் (21.1 கோடி) உதைபந்து அணிக்கு 5ஆவது இடம் கிடைத்தது.

# நெருப்பின் மூலம்

இந்தியாவில் விளையாட வரும் வெளிநாட்டு கிரிக்கெட் வீரர்கள் பலரும் ஹஹஇந்தியாவில் இருக்கும்போது சொந்த மண்ணில் உள்ள உணர்வு ஏற்படுகிறது"" என்பார்கள். டு பிளசிஸூம் அதற்கு விதிவிலக்கல்ல.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் இருந்துவிட்டு இப்போது பெங்களூார் றோயல் சலஞ்சர்ஸ் அணியின் தலைவராக இருக்கும் டு பிளசிஸ் "பப் நெருப்பின் மூலம்" (குயக வூாசழரபா குசைந) என்ற பெயரில் சுயசரிதை எழுதியிருக்கிறார். தென்னாபிரிக்க அணியின் தலைவராக இருந்தாலும், சமீப ஆண்டுகளில் புறக்கணிக்கப்பட்டதால் ஓய்வை அறிவித்த அவர், ஐ. பி. எல் போட்டிகளில் உற்சாகமாக ஆடிவருகிறார். டோனி உள்ளிட்டவர்களுடன் தனக்கு நேர்ந்த அனுபவங்களை ஆங்காங்கே நூலில் தொட்டிருக்கிறார்.

ஹஹஆனால், இந்த நூல் முழுக்க முழுக்க கிரிக்கெட் பற்றியதாக இருக்காது. என் திறமை குறித்த சந்தேகத்துடனும் பாதுகாப்பற்ற உணர்வுடனும் வலம் வந்தவன் நான். வாழ்க்கைப் போராட்டங்கள், உறவுகள், தலைமைப்பண்பு என்று எல்லாவற்றைப் பற்றியுமான உரையாடலாக இதை எழுதியிருக்கிறேன். படிப்பவர்கள் எவரும் இதைத் தங்கள் வாழ்க்கையுடன் பொருத்திப் பார்த்துக்கொள்ள முடியும்"" என்கிறார் டு பிளசிஸ்.







# அணிக்கான வீரன்...!

சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 32 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந் தது.

வெற்றி பெற்ற ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்கு பலரும் சமூக வலைதளங்களில் வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்து வருகின்றனர். இந்தப் போட்டியில் சஞ்சு சாம்சன் 17 பந்துகளில் 17 ஓட்டங்களை அடித்திருந்தார். குறைவான ஓட்டங்கள்தான் என்றாலும் துடுப்பாட்டத்தைவிட அவரின் ஆளுமைத் திறனும் அணிக்காக முனைப்பு காட்டும் திறனும் பலராலும் பாராட்டப்பட்டு வருகிறது.

ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் பயிற்றுநரான இலங்கை முன்னாள் அணித் தலைவரான குமார் சங்ககராவும் அவரைப் பாராட்டியுள்ளார். இது அனைவர் கவனத்தையும் ஈர்த்துள்ளது. "சஞ்சு சாம்சனை பொறுத்தவரை எப்போதும் தன்னுடைய அணியை முன்னிலைப்படுத்திதான் ஆடுகிறார். ஓட்டங்கள் என்பது முக்கியம் அல்ல. அந்த ஓட்டங்களை அவர் எப்படி எடுக்கிறார் என்பதுதான் முக்கியம். அந்த விதத்தில் அணியில் உள்ள எல்லோருக்கும் ஓர் உதாரணமாக இருக்கிறார். அணியின் வெற்றிக்காக அவர் காட்டும் முனைப்பு பாராட்டுக்குரியது. அவர் விளையாட்டில் வகுத்து வைத்திருக்கும் சில திட்டங்கள் மற்ற வீரர்கள் பின்பற்ற ஒரு சிறந்த முன்னுதாரணமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்" - என்று கூறியுள்ளார்.

# வாய் திறக்காதது ஏன்...?

"எங்கள் போராட்டம் குறித்து ஏன் எந்த கிரிக்கெட் வீரரும் வாய் திறக்கவில்லை" என்று மல்யுத்த வீராங்கனை வினேஷ் போகத் காட்டமாக கேள்வி எழுப்பியுள்ளார்.

"இந்த ஒட்டுமொத்த தேசமும் கிரிக்கெட்டை வழிபடுகிறது. ஆனால், இந்த விவகாரம் குறித்து ஏன் எந்த கிரிக்கெட் வீரரும் இதுவரை வாய் திறக்கவில்லை. நீங்கள் இந்த விவகாரத்தில் எங்கள் தரப்புக்கு ஆதரவாக எதுவும் பேச வேண்டாம். குறைந்தபட்சம் நியாயம் யார் பக்கம் இருக்கிறதோ, அது குறித்து நடுநிலையிலாவது எதாவது பேசுங்கள். நீங்கள் பேசாமல் இருப்பதுதான் எனக்கு வலியைத் தருகிறது.

கிரிக்கெட், குத்துச் சண்டை, பட்மிண்ரன் என எந்த விளை யாட்டு வீரரும் இது குறித்து பேசவில்லை. நம் நாட்டில் பெரிய விளையாட்டு வீரர்கள் இல்லையா என்ன? கிரிக்கெட் வீரர்கள் இருக்கிறார்கள்... அமெரிக்காவில் "கறுப்பர்களின் உயிர் வாழ்வு..." பிரசாரத்துக்கு அவர்கள் ஆதரவு காட்டினார்கள். நாங்கள் அந்த அளவுக்கு கூட தகுதியானவர்கள் இல்லையா?" என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.



# ஜேர்மனியில் நடக்கும் கண்காட்சி: “அகமும் புறமும்”

**கவி அருணாசலம்**




ஜேர்மனி, ஸ்ருட்கார்ட் நகரத்தில் 8.10.2022முதல் 7.5.2023வரை ‘அகம் புறம்’ எனும் தலைப்பில் ஒரு கண்காட்சி நடந்து கொண்டிருக்கிறது. அதைப் பார்ப்பதற்கு ஆவல் இருந்தும் கொரோனா கெடுபிடிகளால் தள்ளிப் போட்டுக் கொண்டே வந்தேன். இன்னும் ஒரு மாதத்தில் கண்காட்சி முடிந்து விடும் என்பதால் இப்போது போயிருந்தேன்.

உலகளாவிய ரீதியில் தமிழர்கள் வாழும் நாடுகள், தமிழ் மொழியைப் பற்றிய ஒரு சில ஆவணங்கள் மட்டுமே அங்கே இருந்தன. மற்றும்படி தமிழக சினிமா, தமிழகக் கடைகளின் பெயர்ப் பலகைகள், தமிழக திமு, திமுக தலைவர்கள், தஞ்சைப் பெரிய கோவில் பற்றிய சிறு குறிப்பு என தமிழ்நாடு பற்றிய தகவல்களைத் தவிர வேறெதுவும் பெரிதாக உலகத் தமிழர்களைப் பற்றி அங்கே எனக்குக் கிடைக்கவில்லை. குறிப்பாக, ஈழத் தமிழர்கள் பற்றிய முக்கிய குறிப்புகள் அங்கே காட்டப்படவில்லை. எதற்கும் இருக்கட்டுமே என்று ஷோபா சக்தியின் இரு நூல்களை வைத்து அவரின் இடம் பெயர்வைப் பற்றிய ஒரு ஆவணப் படத்தையும், ஸ்ருட்கார்ட் நகரில் வாழும் ஒரு பெண் சொல்லும் அவரது இடம் பெயர்வைப் பற்றிய தகவல்களையும் ஒரு மூலையில் வைத்திருந்தார்கள். அந்த மூலையின் தரையில் “காதலிக்க நேரமில்லை” என்ற வாசகம் இருந்தது. அது தமிழ் எழுத்துக்களால் ஆன கோலம் என்று குறிப்பிட்டு இருந்தார்கள். ஆனால் அதை புலம் பெயர்ந்த இருவரின் கதைகளுக்கு நடுவே ஏன் வைத்தார்கள் என்று எனக்கு இன்னும் புரியவில்லை.

கண்காட்சியை சுற்றி வந்து வெளியேறும் வாசலில் ஒருங்கிணைப்பாளர்களின் பெயர்களும் விபரங்களும் புகைப்படங்களுடன் இருந்தன. தமிழ்நாட்டைச் சேர்ந்த திவ்யா கார்த்திக், தமிழ் நாட்டில் உள்ள சில விடயங்களை புகைப்படங்களாகவும், பொருட்களாகவும், சிலைகளாகவும் காட்ட முயற்சித்திருக்கி றார். இலங்கையைச் சேர்ந்த யோகா புத்ரா, இவர் விடுதலைப் புலிகளின் பெரும் எதிர்ப்பாளர் மற்றும் ஜேர்மன்-தமிழ் மொழிபெயர்ப்பாளர் என அறியப்பட்டவர்.

இலங்கைத் தமிழர்கள் பற்றிச் சொல்வதற்கும் காண்பிப்பதற்கும் பல விடயங்கள் இருந்தும் தனது புலி எதிர்ப்பு கொள்கையை மட்டும் கையில் பிடித்துக் கொண்டு எல்லாவற்றையும் இருட்டடிப்புச் செய்திருக்கிறார்.

“அகம் புறம்’ என்று கண்காட்சிக்கு தலைப்பிட்டிருந்தார்கள். என்னால் அந்த இரண்டையும் அங்கே காணமுடியவில்லை. கடாரம் வென்ற, கங்கை கொண்டவர்களை மறந்தாலும் எங்கள் கண்முன்னே களம் ஆடிய ஈழத் தமிழர்களைப் பற்றி ஏதாவது காண்பித்திருக்கலாமே! சரி யோகா புத்ராவை விடுங்கள். தமிழ்க் கல்விக் கழகங்கள் வைத்து நடாத்துபவர்கள், தமிழீழ அமைப்பைச் சார்ந்தவர்கள் தங்களுக்கே ஆண்டு விழாக்களை நடாத்தி குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டிக் கொண்டு இருக்காமல் கொஞ்சம் வெளியே வந்து வெளிநாட்டவர்களுக்கு பலவற்றை வெளிச்சத்துக்கு கொண்டு வரலாமே!





---



**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

**வியுக்தியார் பதில்கள்**
**ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com

# வியுக்தியார் பதில்கள்

**எஸ். செந்துாரன், அராலி வடக்கு, அராலி.**

**கேள்வி:** மொட்டுக் கட்சியின் தவிசாளராகச் செயற்பட்டு வந்த பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் நீக்கப்பட்டு அப்பதவிக்கு சிரேஷ்ட பேராசிரியர் உத்துராவல தம்மரத்ன தேரர் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகத் தற்போது டலஸ் அணி பக்கம் உள்ள பீரிஸ் எம்.பி. தெரிவித்துள்ளாரே. கட்சியிலிருந்து வெளியேறியவருக்கு பதிவியிலிருந்து வெளியேற மனமில்லை என்கிறாரா?.

**வியுக்தியார்:** அவர் ஒரு சட்டப் பேராசிரியர். மொட்டிலிருந்து வெளியேறிய பின்னரும் தான்தான் உண்மையான மொட்டுக்கட்சி என்று சொல்லிக் கொண்டு அவர்களுக்கு சவால் விடுத்திருந்தால் அவர் ஒரு அரசியல்வாதியாக இருந்திருப்பார். அப்படியில்லாமல், இன்னுமொரு பெயரில் தனிக் கட்சியாக செயல்படும் ஒருவர் ஏன் இப்படிச் செல்கிறார் என்பது தெரியவில்லை. சட்டம் மட்டும் தெரிந்தவர்கள் அரசியலுக்கு வந்தால் இப்படித்தான் நடந்துகொள்வார்கள் என்பது நமக்கு தெரிந்ததுதானே.

---

**தி. வினோத், இருபாலை, கோப்பாய்.**

**கேள்வி:** ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத்திட்டம் உரிய முறையில் அமுல்படுத்தப்பட்டால் உலகுக்கு கடன் வழங்கும் நாடாக இலங்கையை மாற்ற முடியும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்திருக்கிறாரே?

**வியுக்தியார்:** கனவு காண்பதற்கு அவருக்கு உரிமை இருக்கின்றது தானே. அதனை விமர்சிப்பது சரியானதாக இருக்காதல்லவா. சிலவேளை, நமது புலம்பெயர்ந்த தமிழர்கள் சிலர் கேட்பதுபோல அவர்களின் உரிமையைக் கொடுத்தால் அவர்கள் நாட்டின் கடன் முழுவதையும் தாங்கள் அடைத்துவிடுவதாக கூறியிருந்தார்களே. அதனை மனுசன் நம்பிவிட்டாரோ தெரியவில்லையே.

---

**க. ராம்குமார், ஸ்ரேசன் றோட், வவுனியா.**

**கேள்வி:** தமிழ்த் தேசிய கட்சிகளின் அழைப்பின் பேரில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கடந்த வாரம் முன்னெடுக்கப்பட்ட பொது முடக்கப் போராட்டத்தால் மக்களின் இயல்பு வாழ்வு முற்றாகப் பாதிக்கப்பட்டது. போராட்டம் மாபெரும்வெற்றி என்று ஏற்பாட்டாளர்கள் அறிக்கை வெளியிட்டிருந்தனர். போராட்டம் வெற்றி என்றால் அவர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுவிட்டனவா?

**வியுக்தியார்:** போராட்டத்திற்கு தமிழரசு தலைவர் மாவை சேனாதிராசா ஆரம்பம் முதல் ஆதரவாக இருந்தார். சிறிதரன் எம்.பியும் ஆதரவாக அறிக்கை வெளியிட்டார். போராட்டம் நடக்கும் வரை அதற்கு ஆதரவாக கருத்துச் சொல்லாமல் இருந்த சுமந்திரன் எம்.பி., போராட்டம் நடைபெற்ற அன்று பாராளுமன்றத்தில் அதற்கு ஆதரவாக பேசியதுடன், போராட்டத்தில் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்படாவிட்டால் அடுத்த கட்டமாக சட்டமறுப்பு போராட்டம் நடக்கும் என்று எச்சரிக்கை விடுத்திருந்தாரே. அதனைத்தான் தமது வெற்றி என்று ஏற்பாட்டாளர்கள் சொன்னார்களோ என்னவோ. அல்லது, அவர்களின் போராட்டத்திற்கு பயந்துதான் அரசாங்கம் புதிய பயங்கரவாத தடைச்சட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்று நினைத்தார்களோ தெரியவில்லையே.

---

**கே. ஜெயரூபன், செட்டிபாளையம், மட்டு.**

**கேள்வி:** தம்முடன் சேருமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சி தலைவர் சஜித்துக்கு நேரடியாக அழைப்பு விடுத்தார். இதற்கு, உங்களுடன் சேருவோம் என்று ஊகிக்காதீர்கள் கலந்துரையாடுவோம் - விவாதிப்போம். ஆனால், உங்களுடன் சேருவோம் என்று நினைக்காதீர்கள் என்று சஜித் கூறினாரே. அது என்ன அர்தத்தில் என்பது எனக்கு புரியவில்லை. உங்களுக்கு ஏதேனும் புரிந்ததா?

**வியுக்தியார்:** இதுவரை பேசினோம். விவாதித்தோம் உங்கள் டீல் எமக்கு சரிவரவில்லை அதனால் சேரவில்லை என்கிறாரோ தெரியவில்லை. சில வேளை தொடர்ந்து பேசுவோம். டீல் சரி வந்தால் பார்ப்போம் என்கிறாரோ. பாராளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதியை தெரிவுசெய்வதற்கான தேர்தலில்கடைசி நேரத்தில் பின்வாங்கியதுபோல என்னவும் நடக்கலாம். பொறுத்திருந்து பார்ப்போம்.

---

**என். ராஜேந்திரன் காந்திநகர், கிளிநொச்சி.**

**கேள்வி:** கச்சதீவு அந்தோனியார் ஆலயம் அமைந்துள்ள பகுதியில் அமைக்கப்பட்ட புத்தர் சிலை அகற்றப்பட்டு விட்டதாக கடற்படை உயர் அதிகாரிகள் ஆயர் இல்லத்துக்கு அறிவித்துள்ளனராமே? அதன்மூலம் நாங்கள் புத்தர் சிலையை அகற்றியுள்ளோம், அதே போல பண்ணையில் வைத்த நாகபூசணி சிலையை நீங்கள் அகற்றுங்கள் என்கின்றார்களோ?

**வியுக்தியார்:** தையிட்டியில் தமிழர் காணியில் கட்டப்பட்ட மாபெரும் விகாரைக்கு கலசம் வைக்கும் நிகழ்ச்சி பற்றிய செய்தி வெளியே வரும்போது அது பற்றி தமிழ் மக்கள் பேசுவதை தவிர்க்க இந்த சிலை அகற்றப்பட்ட செய்தி உதவலாம் என்று நினைத்தார்களோ தெரியவில்லை.

# ‘சின்னம்மாவின் ‘அவர்’

இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்

(கடந்த வாரத் தொடர்ச்சி)

சின்னம்மாவின் ‘அவர்’ வரமுதல் நாங்கள் அங்கு போகவேண்டும்’ கலாவின் குரல் உயர்ந்து ஒலித்தது.

‘சின்னம்மாவின் அவரா?’ சின்னம்மாவைப் பின்னேரங்களில் வந்து பார்க்கும் ‘ஒருத்தர்’ இருப்பதாக அவனுக்குத் தெரியாது.

‘சின்னம்மாவின் அவரா?’ அவன் வாயைப் பிழந்தான்.அவள் அவனை ஏற இறங்கப் பார்த்தாள். ‘என்ன நடு வழியில் வைத்து சின்னம்மாவின் ‘அவர்’ பற்றிக் கேட்கப்போகிறீர்களா’?

அவள் வேகமாக நடந்தாள். சிவாவுக்கு கலா சொன்ன விடயம் குழப்பமாகவருந்தது. இதுவரை சின்னம்மாவுக்கு ‘ஒருத்தர் இருப்பதைப் பற்றி அவன் மனைவி சொன்னதேயில்லை. அவன் தனக்குள் பல கேள்விகளைக் கேட்டுக்கொண்டு அவளைப் பின் தொடர்ந்தான்.

அவனின் மனதில் உதித்த கேள்விகளுக்கு மனைவியிடம் பதில் கிடைக்கவேண்டும் என்ற அவன் எதிர் பார்த்தான். ஆனால் கலா விரைவாக நடந்து கொண்டிருந்தாள்.

ஒரு சில நிமிடங்களில் கலா ஒரு வீட்டுக் கேட்டின் மணியை அழுத்தினாள். ஒரு நிமிடத்தில் கதவு திறந்தது. ஒரு அழகிய புன்முறுவலுடன் கலாவின் சின்னம்மா தேவராணி கதவைத் திறந்தாள்.கலாவின் முகச் சாயல் தெளிவாக அவளின் சின்னம்மாவில் பதிந்திருந்தது. நடுத்தரவயது என்று சொல்ல முடியாத உடற்கட்டு. அவளின் தோற்றம் ஒரு பெண்துறவியை ஞாபகப்படுத்தியது..

‘வாங்கோ தம்பி’ தேவராணி தனது மருமகனை வரவேற்றாள். அவளின் அழகிய முகம்போல் குரலும் கணிரென்று அழகாகவிருந்தது. ‘கொஞ்ச நேரம் பிந்தி வந்ததற்கு மன்னிக்கவும’ சிவா பணிவுடன் சொன்னான். சின்னம்மா அதற்குப் பதிலாக ஒன்றும் சொல்லவில்லை. அவர்கள் அவளைப் பின் தொடர்ந்தார்கள்.

பெரிய பழையவீடு. அடர்த்தியான வாழைத்தோட்டத்தின் நடுவில் அமைதியாகக் காட்சி தந்தது.

உள்நுழைந்ததும் கோயிலுக்கள் நுழைந்ததொரு பிரமை. மிகவும் அமைதியாகவும், அதிக சாமான்கள் இல்லாத முன்னறை.சுவரில் மாட்டியிருந்த ஒரு கல்யாணப்படம் அவனின் பார்வையைக் கவர்ந்தது.

அழகான இளம் தம்பதிகளாகத் தேவராணியும் அவளின் மறைந்த கணவன் மாதவனும் புன்னகையும் பூமாலைகளுடனும் படமாகப் பதிந்திருந்தார்கள். படத்திற்கு பூமாலை போடப்பட்டிருந்தது.

அவர்கள் பேசத் தொடங்க முதலே,தேவராணி அவர்களை அடுத்த நாள் மதிய சாப்பாட்டுக்கக் கட்டாயம் வரவேண்டும் என்றும் தற்போது,அவர்களுக்கு இரவுச் சாப்பாடு செய்யத் தனக்கு நேரமில்லை என்றும் சொன்னாள். அதாவது அவள் இப்போது இவர்களுடன் நேரம் செலவளிக்க முடியாது என்று சொல்கிறாள் என்று அவன் புரிந்துகொண்டான்.

அவள் குரலில் இவர்கள் குறிப்பிட்ட நேரத்திற்குத் தன்னிடம் வரவில்லை என்று கோபத்தின் பிரதிபலிப்பு ஒன்றும் கிடையாது. இவர்களுக்காகச் செய்து வைத்திருந்த பலகாரங்களைக்கொண்டு வந்தாள். அதைத் தொடர்ந்து தேனீர் வந்தது.

சிவா,கலா தம்பதிகளின் இருகுழந்தைகளும் சிவாவின் பெற்றோர்களுடன் கொழும்பில் இருப்பதாகத் தனது சின்னம்மாவுக்குச் சொன்னாள் கலா. அந்த விடயத்தை டெலிபோனில் சில தினங்களுக்கு முன் கலா தேவராணிக்கு டெலிபோனிற் சொன்னது சிவாவுக்குத் தெரியும்.அதுபற்றிக் கலா அவளது சின்னம்மாவுக்கு இன்றும் சொன்னபோது,

‘அதற்கென்ன அடுத்த தரம் பிள்ளைகளையும் கூட்டிவாருங்கள்’ தேவராணி எழுந்தாள். அதாவது தங்களைப் புறப்படச் சொல்கிறாள் என்று சிவா உணர்ந்துகொண்டான்.அவனுக்குத் தர்ம சங்கடமாகவிருந்தது. குறிப்பிட்ட நேரத்திற்கு வராததால் பிரித்தானியர் மாதிரி தேவராணியும் கோபப்படுகிறாளோ என்று அவனுக்குப் புரியவில்லை.

சின்னம்மா வெளிக் கதவு வரையும் வந்தாள். அவர்கள் வாழைத்தோட்டத்தைக் கடந்து வரும்போது பெருவாழை இலைகளால் மறைக்கப்பட்டிருந்த இடைவெளியினூடாகத் தூரத்தில் வீட்டின் வேலியருகே படர்ந்திருந்த வேப்ப மரமும் அதனடியிலிருந்த ஒரு பெரும் பாம்புப் புற்றும் பட்டென்று சிவாவின் கண்களில் பட்டு மறைந்தன.. இந்தப் பெண்மணி இந்தப் பெரிய பாம்புப் புற்று இருக்கும் வீட்டில் இருக்கிறாளே? அவன் தனக்குள் ஆச்சரியப்பட்டுக் கொண்டான்..

இவர்கள் வீட்டைக் கடந்ததும் சின்னம்மா கேட்டைப் பூட்டிவிட்டு வீட்டை நோக்கி நடப்பது கேட்டது. கேட்டது.

கலா சில அடிகள் நடந்துவிட்டுத் தன் நடையை



மேலே நகர்த்தாமல் அப்படியே நின்றாள். ‘சின்னம்மாவின் அவர் வரும் நேரம்’ கலா சிவாவின் காதுகளில் முணுமுணுத்தாள்.

‘வாட்’ அவன் வாயெடுக்கமுதல் அவனின் வாயைப் பொத்தினாள் கலா.

‘பேசாமலிருங்கள்’

துறவி மாதிரியிருக்கும் இந்தப் பெண்ணுக்கு ஒரு ‘அவரா?’அவன் தனது மனைவியை ஏற இறங்கப் பார்த்தான்.

‘இருந்தாலும் அது பெரியவிடயமில்லை. பத்தொன்பது வயதில் விதவையாகிய ஒரு தமிழ்ப்பெண் கடைசி காலத்தில் தனக்கு ஒரு துணையைத்தேடுவது நல்லதுதானே’

அவன் வாய்விட்டுச் சொல்லவில்லை ஆனால் ஒரு தாராளவாதியாக நினைத்துக்கொண்டான்.ஆனால் சின்னம்மாவின்,அமைதியும்,சாந்தமும்,கருணைபடிந்த குணமுள்ள துறவி மாதிரியான தோற்றமும் அவனைக் குழப்பியது.

அவன் மனதில் எத்தனையோ கேள்விகள் வரும் என்று கலாவுக்குத் தெரியும் என்ற அவனுக்கும் தெரியும். மனைவியைக் கேள்விக் குறியுடன் பார்த்தான்.

‘இலங்கையில் தொடர்ந்த இந்தப் போர் எத்தனை மனிதர்களை இபபடி ஆக்கியிருக்கிறது தெரியுமா?’ கலா அவனைக் கேட்டாள்..அவள் குரல் சோகமாக விரந்தது. கண்கள் கலங்கியிருந்தன.

‘அவளை உலகத்திற்குப் புரியாமலிருக்கலாம் ஆனால் என்னைப் பொறுத்தவரையில் எனது சின்னம்மா ஒரு புனிதமான பிறவி,பைத்தியமல்ல’ கலா தனக்குத்தானே மெல்லமாகப் பேசிக் கொண்டாள்.

‘ஒரு கணவன் இறந்தால் இன்னொரு துணை தேடுவதில் என்ன பிழை?’என்று கேட்க அவன் வாயெடுத்த போது அருகில் ஏதோ சர சரவென்று ஏதோ ஊர்வது போலிருந்தது.அவன் பயத்துடன் அங்கும் இங்கும் பார்த்தான்.

கலா அவனின் கைகளைப் பிடித்துக்கொண்டு சின்னம்மாவின் கேட் அருகில் நகர்ந்தாள். ஒரு பிரமாண்டமான நாகம் சின்னம்மா வீட்டுக்கு ஊர்ந்து போவது கேட்டின் அடியிலிருந்த சிறு இடைவெளியால் தெரிந்தது.

‘இதுதான் சின்னம்மாவின் அவர்’ கலா கணவனின் கண்களை நேரே பார்த்தபடி சொன்னாள். சிவா திகைப்பில் சிலையாக நின்றான்.

‘சின்னம்மாவின் கணவன் கொலை செய்யப்பட்டு இறந்தபின் சில நாட்கள் அவள் யாருடனும் பேசிக் கொள்ளவில்லை.அவருடைய எட்டாம் நாள் சடங்கு செய்த அன்று வேப்ப மரத்தடியில் ஒரு புற்று வந்திருந்தது. அதை எனது அம்மா கொத்தி அழித்து விட்டார். சில நாட்களுக்கப் பின் அதே புற்று வளர்ந்திருந்தது. அம்மா அங்கு சென்றபோது ஒரு பாம்பு படமெடுத்தபடி ஆடிக்கொண்டிருந்தது.

‘யாரையும் கூப்பிட்டு இந்தப் பாம்பை அடிக்க வேண்டும்’ என்ற அம்மா சொன்னா. அதுவரையும் யாருடனும் பேசாமலிருந்து சின்னம்மா ஓடி வந்தார். ‘வேண்டாம். அவரை அடிக்க வேண்டாம் என்றாள்’. அவளின் மனநிலை குழம்பிப் போயிருந்தபடியால் அவள் பாம்பு உருவில் கணவன் வந்திருப்பதாக நினைக்கிறாள் என்று எல்லோரும் நினைத்தார்கள்.

‘என்னையும் எங்கள் பிள்ளையையும் இனி அவர் பார்த்துக்கொள்வார்’ என்று சின்னம்மா கதறினாள்.

வயிற்றில் குழந்தையுடன் விதவையாக ஒரு பத்தொன்பது வயது இளம் பெண் நின்ற கதறும்போது அவளுக்கு எதிராக யாரும் எதுவும் சொல்லவிலலை’

சிவா தனது மனைவி அவளின் சின்னம்மாவைப் பற்றி இதுவரை அவனிடம் சொல்லாத விடயங்கள் இவை.

‘தமிழர்களுக்காகப் போராடுவதாகப் புறப்பட்ட தமிழ் இயக்கங்கள் எதிரியான சிங்கள இராணுவம் செய்த கொடுமையைவிடப் பயங்கரமாகவிருக்கிறதே?

அவன் பெருமூச்சுவிட்டான். யதார்த்ததிற்க அப்பால் வாழும் சின்னம்மாவின் சிதைந்த வாழ்க்கைக்கு காரணமானவர்களை அவன் மனம் சாபமிட்டது.

கலா,சின்னம்மா பற்றிய தனது விளக்கத்தால் குழம்பிப்போன அவனது கைகளை அன்புடன் கோர்த்துக் கொண்டாள்.’உங்களுக்கு அப்படியேதும் நடந்தால் நான் உடனே உயிரை விட்டிருப்போன் ஆனால் சின்னம்மா,அதன் பின் யாரையும் அந்தப் புற்று அருகில் போகவிடவில்லை. தினமும் பாம்புக்கு பால் வைப்பார். அடுத்த கணம் தனது கணவனுக்குப் பூஜை செய்வார்.’

மாலை இருள் பரவத் தொடங்கியது. கலா விம்முவது அவனுக்குப் புரிந்தது. சின்னம்மாவில் கலாவுக்கு ஏன் அத்தனை பாவம், பரிதாபம், மதிப்பு என்று அவனுக்கு இப்போது தெளிவாகப் புரியத் தொடங்கியது.

கலா மெல்லிய குரலில் சின்னம்மா பற்றிய கதையைத் தொடர்ந்தாள்.

‘ காலம் பறந்தது நாங்கள் அத்தனைபேரும் இந்த வீட்டை விட்டு ஒவ்வொருத்தராக வெளியேறி விட்டோம். சின்னம்மாவின் மகனையும் வெளிநாடு அனுப்பி விட்டாள். எனது வாழ்க்கையை அழித்தவர்களின் வாழ்க்கை நிர்மூலமாவதை நான் காண்பேன் என்று சாபம் போட்டாள்..

போர் முடிந்தது. போரைத் தொடங்கிக் கொலை வெறியாட்டம் போட்டவர்கள் ஒரு சூறாவழியில் தொலைந்த இலைகளாக மறைந்து விட்டார்கள்.’வானத்தில் இளம் நிலா எட்டிப்பார்த்தது. இந்த நிலவில் தனது குழந்தையுடன் கணவனுடன் சந்தோசமாக வாழ்க்கையைத் தொடராமல்போன சின்னம்மாவின் துயர் சிவாவின் மனதை நெருடியது. மனைவியை அணைத்துக் கொண்டான். யாழ்ப்பாணப் பட்டினம் கோயில் அணி ஓசைகளால் நிறையத் தொடங்கியது.

சின்னம்மா இப்போது இறந்து விட்ட கணவருக்குப் பூஜை செய்து கொண்டிருப்பாள் என்று நினைத்தபோது அவனால் தனது வாழ்க்கையைத் தமிழ்ப் பயங்கரவாதத்தால் இழந்த பவித்திரமான பெண்மைக்குக் கலங்கியது. கணவனின் மனதில் ஓடிக்கொண்டிருக்கும் சிந்தனையைப் புரிந்தவளான கலா அவளை அணைத்துக் கொண்டாள். கலா பெருமூச்சு விட்டாள்.

‘சின்னம்மா தனியாகப் பாம்புடன் வாழ்கிறார். இந்தப் பாம்புக்கு எத்தனை வயதோ தெரியாது. அல்லது ஒரு பாம்பு இறந்தால் இன்னொரு பாம்பு வருமோ தெரியாது..ஏதோ ஒரு நல்ல பாம்பு அடிக்கடி வரும். தன்னுடைய ‘அவர்’ பாம்பு உருவில் தன்னைப் பாதுகாப்பதாகச் சின்னம்மா நினைக்கிறாள். அந்தப் பாம்பு பின்னேரத்திற்தான் வரும்.அதற்காகச் சின்னம்மா யாரையும் பின்னேரங்களில் வீட்டுக்கு வர அனுமதிப்பதில்லை’.

மாதவனை அழித்தவர்கள் ஒட்டுமொத்தமாக அழிந்துவிட்டார்கள். மாதவன் பாம்பாகத் தன் அருமை மனைவியைப் பாதுகாக்கிறானா? சிவா தனது கேள்வியைத் தனக்குள் புதைத்துக் கொண்டான்.அவன் விஞ்ஞானம் படித்தவன்,ஆனாலும் சின்னம்மா போன்றோரின் மனித சிந்தனையின் நம்பிக்கைகளுக்குக் காரணம் அவனுக்குத் தெரியாது.

வானத்தில் இளம் நிலா எட்டிப்பார்த்தது. இந்த நிலவில் தனது குழந்தையுடன் கணவனுடன் சந்தோசமாக வாழ்க்கையைத் தொடராமல்போன சின்னம்மாவின் துயர் சிவாவின் மனதை நெருடியது. மனைவியை அணைத்துக் கொண்டான். யாழ்ப்பாணப் பட்டினம் கோயில் அணி ஓசைகளால் நிறையத் தொடங்கியது.

சின்னம்மா இப்போது இறந்து விட்ட கணவருக்குப் பூஜை செய்து கொண்டிருப்பாள் என்று நினைத்தபோது அவனால் தனது வாழ்க்கையைத் தமிழ்ப் பயங்கரவாதத்தால் இழந்த பவித்திரமான பெண்மைக்குக் கலங்கியது. கணவனின் மனதில் ஓடிக்கொண்டிருக்கும் சிந்தனையைப் புரிந்தவளானக் கலா அவளை அணைத்துக் கொண்டாள். கலா பெருமூச்சு விட்டாள்.

‘சின்னம்மா தனியாகப் பாம்புடன் வாழ்கிறார். இந்தப் பாம்புக்கு எத்தனை வயதோ தெரியாது. அல்லது ஒரு பாம்பு இறந்தால் இன்னொரு பாம்பு வருமோ தெரியாது..ஏதோ ஒரு நல்ல பாம்பு அடிக்கடி வரும். தன்னுடைய ‘அவர்’ பாம்பு உருவில் தன்னைப் பாதுகாப்பதாகச் சின்னம்மா நினைக்கிறாள். அந்தப் பாம்பு பின்னேரத்திற்தான் வரும்.அதற்காகச் சின்னம்மா யாரையும் பின்னேரங்களில் வீட்டுக்கு வர அனுமதிப்பதில்லை’.

மாதவனை அழித்தவர்கள் ஒட்டுமொத்தமாக அழிந்துவிட்டார்கள். மாதவன் பாம்பாகத் தன் அருமை மனைவியைப் பாதுகாக்கிறானா? சிவா தனது கேள்வியைத் தனக்குள் புதைத்துக் கொண்டான்.அவன் விஞ்ஞானம் படித்தவன்,ஆனாலும் சின்னம்மா போன்றோரின் மனித சிந்தனையின் நம்பிக்கைகளுக்குக் காரணம் அவனுக்குத் தெரியாது. (முற்றும்)

ஈழநாடு



# ஸ்கொட்லாந்தின் சுயாட்சிக்கான பேரவா நனவாகுமா? தனிநாடு கோரிக்கை 2014 வாக்கெடுப்பின் தோல்வி!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

அத்லாந்திக் சமுத்திரத்தின் உள்ளே தலையை நுளைத்து பிரித்தானியாவை உதைத்துக் கொண்டிருக்கும் அழகிய குடாநாடு தான் ஸ்கொட்லாந்து. அவர்களது வாழ்க்கை முறை பிரித்தானிய மக்களிடமிருந்து வித்தியாசமானது. ஸ்கொட் மக்கள் தனித்துவமானவர்கள் என்பதில் ஐயமில்லை.

நாம் ஏன் இன்னொரு நாட்டுக்குள் வாழவேண்டும்? நாம் பழையபடி ஸ்கொட்லாந்து தேச மக்களாக இருக்கலாமே என்ற பேரவா அந்த நிலப்பரப்பை சேர்ந்த மக்களுக்கு இன்னமும் உண்டு.

ஸ்கொட்லாந்து தேசம் ஏறக்குறைய 790 தீவுகளைத் தன்னகத்தே கொண்டிருக்கும் அழகானதாகும். பிரித்தானியாவின் இன்னொரு அங்கமான ஸ்கொட்லாந்திலிருந்து பயணித்தால் அழகிய நீண்ட மலைகளும் அருவிகளையும் அங்கே கண்குளிர காணலாம்.

**தனிநாடு கோரிக்கையின் பின்னணி**

17ம் நூற்றாண்டில் ஸ்கொட்லாந்து பெரும் பொருளாதார நெருக்கடியில் இருந்தது. இங்கிலாந்திடம் இருந்து நிதி உதவிகள் பெறுவதற்காக ஸ்கொட்லாந்து தனி நாடு என்கிற நிலையை விட்டுக்கொடுத்து இங்கிலாந்துடன் இணைய வேண்டி வந்ததென்கிற ஒரு பார்வையும் உண்டு.

அந்தக் காலத்திலேயே ஸ்கொட்லாந்து இணைக்கப்பட்டதை பலர் எதிர்த்து வந்துள்ளனர். ஸ்கொட்லாந்து தனி நாடாக வேண்டும் என்ற கோரிக்கை மேலெழுவதும் பின்னர் அமுங்கிப்போவதும் என்பதும் கடந்த முந்நூறு ஆண்டுகளில் பல தடவைகளில் நடந்துள்ளது.

ஸ்கொட்லாந்து இங்கிலாந்திற்கான பொருளாதார வலுவினையும் அரசியல் பலத்தையும் எப்போதும் கொடுத்திருந்திருக்கின்றது. அங்கு இருக்கும் எண்ணெய் வளம் மற்றும் அங்கு நிலைகொண்டிருக்கும் அணுவுந்தி நீர்மூழ்கிக் கப்பற்படையும் இதற்கான முக்கிய காரணங்களாகும்.

**இங்கிலாந்தின் பொருளாதார வலு**

1690 களில் ஸ்காட்லாந்து தன்னை தலைசிறந்த வணிக நாடாக்கும் பொருட்டு பனாமா காலனியாக்கம் (டேரியன் திட்டம்) என்ற திட்டத்தினை செயல்படுத்தியதை உலகறியும்.




வரலாற்று ரீதியாக 1603 ஆம் ஆண்டில் இரு நாடுகளும் ஒரே ராணியின் கீழ் (Union of Crowns) இணைக்கப்பட்டதிலிருந்தே அரசியல் ரீதியாக இரு நாடுகளையும் இணைப்பதற்கான முயற்சிகள் 1606,1667 மற்றும் 1689 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டன.

ஆயினும் இங்கிலாந்தும் ஸ்காட்லாந்தும் 1707 வரை தனித்தனி நாடுகளாகவே இருந்தன. 1707 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட இணைப்பு ஒப்பந்தத்தின் வழியாக இரு நாடுகளும் ஐக்கிய இராஜ்ஜியம் என்ற ஒன்றாக இணைந்தன. இது மே 1, 1707இல் நடைமுறைக்கு வந்த தினமாகும்.

இதன்பின்னர் இங்கிலாந்தும் ஸ்கொட்லாந்தும் வேறு வேறு நாடுகளாக இருந்து 1707ஆம் ஆண்டின் பின்னர் தான் ஸ்கொட்லாந்தின் நாடாளுமன்றம் இங்கி லாந்தின் நாடாளுமன்றத்துடன் ஒன்று சேர்க்கப்பட்டது. அப்போது இங்கிலாந்தின் நாடாளுமன்றத்தில் ஸ்கொட்லாந்துக்கான 71 ஆசனங்கள் ஒதுக்கப்பட்டன.

**ஸ்காட்லாந்தை பிரான்சு கைப்பற்றிவிடும் ?**

ஸ்காட்லாந்துடனான இணைப்பிற்கு இங்கிலாந்து முயன்றதற்கு முக்கிய காரணம் ஸ்காட்லாந்தும் பிரான் சும் இணைந்துவிடும் அல்லது ஸ்காட்லாந்தை பிரான்சு கைப்பற்றிவிடும் என்பதே. அவ்வாறு கைப்பற்றினால் அது இங்கிலாந்திற்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக அமையும் என இங்கிலாந்து எண்ணியது. அதனால்




ஸ்காட்லாந்திற்கு பொருளாதார உதவி செய்ய மறுத்து இணைப்பிற்கு மறைமுக அழுத்தம் அளித்தது.

ஸ்கொட்லாந்து தனக்கேயுரிய நாணயப் பெறுமதி, திருச்சபை, சட்டங்களும் நீதித்துறையும், உள்ளூராட்சி மன்ற முறைமைகள், கல்விக் கட்டமைப்புகள் போன்றவற்றைத் தொடர்ந்து பேணி வந்தது. இதனால், ஸ்கொட்டிஸ் என்னும் ஸ்கொட்லாந்தைச் சேர்ந்தவர் என்கின்ற சுய அடையாளம் இக்காலந்தோறும் பேணப்பட்டு வந்தது எனலாம்.

18ஆம் நூற்றாண்டிற்குப் பின்னான காலகட்டத்தில் பிரித்தானியாவுடன் இணைந்திருந்தது ஸ்கொட்லாந்திற்கு சாதகமாகத்தான் இருந்தது.

உலகத்தையே ஆண்டது பிரித்தானியா. பிரித்தானிய காலனித்துவ நாடுகளிலெல்லாம் அரச நிர்வாகிகளாகவும், அங்குள்ள தொழில் துறைகளை நடத்துபவர்களாகவும் ஸ்கொட்லாந்தியர்களே இருந்தனர்.

ஆங்கிலேயர் உலகை ஆண்டனர், ஸ்கொட்லாந்தியர்கள் அதனை நடத்தினர் என்றும் சொல்லுவர். உலகிலேயே இரண்டாவது கைத்தொழில் மயப்படுத்தப்பட்ட நாடாக ஸ்கொட்லாந்து அன்று திகழ்ந்தது.

**ஸ்கொட்லாந்தின் பொருளாதார வீழ்ச்சி:**

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர், காலனித்துவ நாடுகள் ஒவ்வொன்றாக சுதந்திரம் பெற்றன. அமெரிக்கா மற்றும் ஜப்பான் பாரிய பொருளாதார சக்திகளாக உயர்ந்தன. இச்சூழலில் ஸ்கொட்லாந்தின் பொருளாதாரம் வீழ்ச்சி காணத் தொடங்கியது.

1970களில் வடகடலில் எண்ணெய் முதன் முதலாகக் கண்டுபிடிக்கப்பட்டபோது, இது ஸ்கொட்லாந்தின் எண்ணெய் என்றே அங்குள்ள அரசியல் கட்சிகள், ஸ்கொட்லாந்துத் தேசியக் கட்சி, அதனைப் பற்றிப் பெருமையாகப் பேசின.

ஜேம்ஸ் கலகன், தொழிற்கட்சியின் அரசில் பிரதம மந்திரியாகவிருந்த காலத்தில், 1979ஆம் ஆண்டு ஸ்கொட் மக்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களடங்கிய சட்டவாக்க சபையினை அளிப்பதற்கான வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இவ்வாக்கெடுப்பில் 52.9 விதமானோர் அதிகாரப்பகிர்வுக்கு ஆதரவாக வாக்களித்திருந்தும் 40 வீதமான மக்கள் மட்டுமே வாக்கெடுப்பில் கலந்துகொண்டார்கள் என்பதனால் சட்டப்படி அது செயலற்றதாகியது.

**மார்கரெட் தச்சரின் இரும்பு ஆட்சியில்**

மார்கரெட் தச்சரின் கன்சர்வேடிவ் கட்சியின் ஆட்சியே ஸ்கொட்லாந்தின் தேசிய உணர்வுகளை முதன் முதலாகக் கிளாந்து விட்டது எனலாம். ஸ்கொட்லாந்து கைத்தொழில் மயப்பட்ட நாடாகையால், தொழிலாளர்களின் நலன் பேணும் பண்பாடு கொண்டிருந்தது. ஆனால், இரும்புப் பெண் மார்கரெட் தச்சரோ தொழிற் சங்கங்களை உடைத்து, தொழிலாளர்களுக்கு அதுவரை கிடைத்து வந்த சமூகப் பாதுகாப்பு நலன் புரித் திட்டங்களையெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக இல்லாதொழிக்க ஆரம்பித்தார். அக்காலத்தில் கல்விக் கும் சுகாதாரத்துக்கும் ஒதுக்கப்பட்ட நிதிகள் அரைவாசியாகக் குறைந்தன. இவருடைய ஆட்சிக்கு எதிரான குரல்கள் ஸ்கொட்லாந்தில் ஒலிக்க ஆரம்பித் தன. குறிப்பாக, தொழிலாளர்களுக்கான வீடமைப்புத் திட்டங்கள் அமைக்கப்படுவதிலேயே பெரும் முரண்பாடுகள் எழலாயின.




**ஸ்கொட்டிஷ் தேசியக் கட்சி**

1934ல் ஆரம்பிக்கப்பட்ட ஸ்கொட்டிஷ் தேசியக் கட்சி, தனி நாடு கோரிக்கையை முன்னிறுத்தியே அரசி யல் செய்து வருகிறது.

ஐக்கிய ராஜ்ஜியத்துக்குள்தான் ஸ்கொட்லாந்து இருந்தாலும் 1999ஆம் ஆண்டு ஸ்கொட்லாந்துக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டதிலிருந்து, அது நிறைய சுயாட்சி அதிகாரங்களைக் பெற்றுள்ளது. தற்போது ஸ்கொட்லாந்துக்கென தனி நாடாளுமன்றம் உள்ளது. சில பொதுவான விஷயங்கள் தவிர மற்ற தங்களுக்கான சட்டங்களை அவர்களே இயற்றிக்கொள்கின்றனர்.

**1997ஆம் ஆண்டு வாக்கெடுப்பு :**

1997ஆம் ஆண்டு நடத்தப்பட்ட வாக்கெடுப்பைத் தொடர்ந்து ஸ்காட்லாந்தின் மீண்டும் நாடாளுமன்றம் அமைக்கப்பட்டது. இந்நிலையில் 2011ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் தனி நாடு கோரிக்கையை வலியுறுத்திய ஸ்காட்லாந்து தேசியக் கட்சி ஆட்சியைப் பிடித்தது. இதையடுத்து பிரிட்டனிலிருந்து முற்றிலும் சுதந்திரம் பெற்ற தனி நாடாக வேண்டுமா என்பதற்கான வாக்கெடுப்பு நடத்த முடிவு செய்யப்பட்டது.

**ஸ்கொட்லாந்தின் சுயாட்சிக்கான பேரவா?**

ஸ்கொட்லாந்தின் சுயாட்சிக்கான பேரவா அரசியல் இயக்கங்களுக்கு வித்திட்டது இன்று நேற்றல்ல. ஆரம்பத்தில் அதிகாரத்தை பரவலாக்கிக்கொள்ளும் கோரிக்கைகளும் கருத்துக் கணிப்புக்கள் ஊடாக அங்கீகரிக்கப்பட 1999இல் ஸ்கொட்லாந்து பாராளுமன்றத்துக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

ஐக்கிய இராச்சியம் என்ற கட்டமைப்புக்குள் இருந்து விடுபட வேண்டும் என்று ஸ்கொட்லாந்து மக்கள் கொண்டிருந்த அவாவுக்கு அதிகாரப் பரவலாக்கல் நிரந்தர பரிகாரமாக அமையவில்லை என்பது உண்மையே.

பிரித்தானியாவில் அங்கம் வகிக்கின்ற 50 இலட்சம்




மக்களைக் கொண்ட ஸ்கொட்லாந்து, 2014ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம், நாட்டினை சுதந்திரமான நாடாகப் பிரகடனம் செய்வதா இல்லையா என்கின்ற கேள்வியுடன் ஒரு சர்வஜன வாக்கெடுப்பை நடாத்தியது.

பிரித்தானியாவுடன் ஸ்கொட்லாந்து இணைந்து கொண்ட முன்னூறுக்கும் மேலான ஆண்டுகள் கடந்த பின்னர் ஸ்கொட்லாந்து பிரிந்து தனியரசு அமைப்பதற்கான இந்த வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. மூன்று நூற்றாண்டுகளாக தொடர்ந்து வந்த அரசியல் இணைப்பு ஒரு முடிவுக்கு வரும் வாய்ப்பு எழுந்தது.

ஆம் என்று அம்மக்கள் 2014 கருத்துக் கணிப்பில் வாக்களித்து இருந்தால் அது பிரித்தானியாவின் ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தர உறுப்புரிமையையும் ஐரோப்பிய ஒன்றியத்தில் அதன் அந்தஸ்தையும் பாதிக்கும் அளவிற்குப் போயிருக்கும் என எதிர்வு கூறப்பட்டது.

அதேவேளை இன்றும்கூட சுதந்திர ஸ்கொட்லாந்துக்கு ஆதரவான வாக்குகள் 29 வீதத்திலிருந்து 37 வீதம் வரைதான் இருக்கலாம் என கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன. ஆனால் பிரித்தனியாவுடன் தொடர்ந்து இணைந்திருக்க ஆதரவான வாக்குகளோ 44 வீதமாக இருக்கின்றன. அப்படியிருந்தும்கூட அம்மக்களுக்கு தமது விருப்பைச் சொல்வதற்கான அடிப்படை உரிமை வழங்கப்பட்டிருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

2014 பொது வாக்கெடுப்பால் சுதந்திரத்தை நிராகரித்து 20,01,926 வாக்குள் பெறப்பட்டுள்ளன. மொத்த வாக்கு எண்ணிக்கையில் இது 55 சதவிகிதமாகும். சுத்நதிரத்துக்கு ஆதரவாக 16,17,989 வாக்குகள் பெறப்பட்டுள்ளன. சுதந்திரம் வேண்டும் என வாக்களித்தவர்களின் அளவு சுமார் 45 சதவிகிதமாகும்.

அடுத்ததாக இந்த வாக்கெடுப்பினால் பிரிவினை ஏற்பட்டால் நாணய மதிப்பு வீழ்ச்சி, ராணுவம் துண்டாடப்படுவது போன்ற விபரீதங்களுக்கு வழி வகுக்கும் என்று அன்றைய பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கேமரூன் எச்சரித்தார்.

பிரித்தானியாவின் இன்னொரு அங்கமாக இருக்கும் ஸ்கொட்லாந்து பல தீவுகளைத் தன்னகத்தே கொண்டிருக்கும் அழகான தேசமாகும். நாம் ஏன் இன்னொரு நாட்டுக்குள் வாழவேண்டும்? நாம் பழையபடி ஸ்கொட்லாந்து தேச மக்களாக இருக்கலாமே என்ற பேரவா அந்த நிலப்பரப்பை சேர்ந்த மக்களுக்கு இன்னமும் உண்டு.

# நல்லொழுக்க சமூக உருவாக்கத்தில் முன்பள்ளிக் கல்வி

ந. சச்சிதானந்தன்
(லண்டன்)

மிக மோசமான சமூகச் சூழலில் நமது சந்ததியினரை காப்பாற்றவேண்டும் எனில் சமூகத்தின் அடிப்படைத் தேவையான கல்வியில் நமது கவனம் செலுத்தப்படவேண்டும். இல்லாவிடில், ஒரு தோற்றுப்போன சமூக நிலையையே நோக்கி தள்ளப்படுவது தவிர்க்க முடியாததாகும். எமது தமிழ்ச் சமூகம் கல்வியில் ஆற்றல் மிக்கதாக உருவாக்கப்பட்டால் மாத்திரமே நிலைத்து வாழும் வகையிலான மாற்றங்கள் சாத்தியமாகும் என்பதுடன், அதன் ஆழமான அத்திவாரமாக முன் பள்ளிகளை அமைத்தலும், அவை மூலமாக சிறந்த ஆரோக்கியமான அறவழிச் சமூகத்தை நிர்மாணிப்பதும் இன்று பிரதான தேவையாகின்றது. இதனைக் கருத்தில்கொண்டு எமது தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் நிலைபேறான மாற்றம் ஒன்றை இலக்காகக் கொண்டு 'கல்விக் குழுமம்' இலங்கை உருவாக்கப்படுகின்றது.

**தொலைநோக்கு**

முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டின் மூலம் ஆளுமை மிக்க, நல்லொழுக்கமுள்ள ஒரு சமூகத்தை உருவாக்குவதற்கான அடித்தளம் அமைத்தல்.

**செயற் பணி**

முன்பள்ளிக் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடும் சகல தரப்பினரையும் ஒன்றிணைத்து கூட்டுப் பேரவைச் செயற்பாடுகள் மூலம் முன்பள்ளி நிர்வாகத்தை வினைத்திறன்மிக்கதாக மாற்றுவதற்கு ஏதுவாக தரமான திட்டங்களை உருவாக்கிச் செயற்படுத்துவதன் மூலம் கல்வி தொடர்பாக எதிர்கால சந்ததியினர் மத்தியில் ஒரு காத்திரமான மாற்றத்தை ஏற்படுத்துதல்.

**குறிக்கோள்கள்**

முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டில் ஈடுபடும் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களை ஒருங்கிணைத்தல். பாலர் பாடசாலைகளிலிருந்து ஒழுக்கத்தையும் கல்வியையும் ஒருசேர வழங்கும் விதத்தில் முன்பள்ளி பாடசாலைகளின் தரத்தை அதிகரிக்கவும் விஸ்தரிக்கவும் கருதி அதற்குரிய ஏற்பாடுகளை ஏற்கனவே இந்த துறையில் செயல்படும் அமைப்புகளுடன் இணைப்பை ஏற்படுத்தி, அனுபவங்களையும் வளங்களையும் விரயம் செய்யாமல் ஒருமுகப்படுத்தி செயற்படும் வகையில் இணைப்பு



## தமிழ் சமூகத்தில் நிலைபேறான மாற்றம் ஒன்றுக்காக 'இலங்கை கல்விக் குழுமம்'

ஏற்பாடுகளை ஒழுங்கு செய்தல்.

முன்பள்ளிகள் அமைந்துள்ள இடம் குறிப்பாக, போக்குவரத்து வசதிகளை உள்ளடக்கிய காணி பாலர்களின் பராமரிப்புக்கு ஏற்ற விதத்திலான கட்டிட வசதி என்பவற்றை ஏற்படுத்திக் கொடுத்தல். விஞ்ஞானபூர்வமான விதத்தில் கல்வி போதிக்கும் வகையில் ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் அல்லது பயிற்சி பெற்ற ஆசிரியர்களை நியமனம் செய்தல், அவர்களுக்கான சம்பளங்கள் வழங்குதல்.

ஆங்கில கல்வியை மேம்படுத்தி ஊக்குவிக்கும் வகையில் அதற்கான ஆசிரியர் பயிற்சி வாய்ப்புகளை அதிகரித்தல்.

வலயங்கள் தோறும் முன்மாதிரியான முன்பள்ளிகளை உருவாக்குதல். ஆங்கில மொழிமூல எழுத்து உரையாடல் என்பவற்றில் மாணவர்களின் கவனத்தை குவிக்கும் வகையில் ஊக்குவிப்பு முயற்சிகளை மேற்கொள்ளல்.

பாலர்களுக்கான ஊட்டச்சத்து நிறைந்த உணவு மற்றும் மருந்து வகைகளை வழங்குதல். பாலர்களுக்கான விளையாட்டு வசதிகள், கல்வி உபகரணங்கள் என்பவற்றை வழங்குதல். முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஒய்வூதியத் திட்டத்தை உருவாக்குதல்.

அர்ப்பணிப்புடன் செயலாற்றும் முன்பள்ளி ஆசிரியர்களை இனங்கண்டு, விருது வழங்கிக் கௌரவித்தல்.

சிறந்த முறையில் நிர்வகிக்கப்படும் முன்பள்ளிகளை இனங்கண்டு விருது வழங்கிக் கௌரவித்தல்.

முன்பள்ளியில் கல்வி பயிலும் சிறார்களின் பெற்றோருக்கான வழிகாட்டுதல்களை வழங்குதல். முன்பள்ளிக் கல்வி மேம்பாடு தொடர்பான அனுபவப் பகிர்வு, செய்திகளை பரிமாறுதல் மற்றும் இத்துறையில் ஆர்வமுள்ளவர்களை இணைக்கும் தொடர்பு சாதனமாக 'கல்விச்சுடர்' என்ற இலத்திரனியல் சஞ்சிகையினை வெளியிடுதல்.

கல்வி அமைச்சு, மாகாண கல்வி அமைச்சு, மாகாண சுகாதார அமைச்சு, மாவட்ட பிரதேச செயலகங்கள், மாகாண கல்வித் திணைக்களம், உள்ளூராட்சி சபைகள், தன்னார்வ நிறுவனங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள், பழைய மாணவர் சங்கங்கள் என்பன இந்த அமைப்பின் பங்குதாரர்களாக அமைவர்.

மாவட்ட மட்ட ஒருங்கிணைப்பாளர்கள், வலய மட்ட ஒருங்கிணைப்பாளர்கள், கோட்ட மட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோரைக்கொண்டதாக நிர்வாக கட்டமைப்பு அமையும்.

முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டிற்கு தேவைப்படும் வளங்கள் யாவும் ஒருங்கிணைக்கப்பட்டு, திட்டமிடப்பட்ட வகையில் பயன்படுத்துதல். முன்பள்ளிக் கல்விச் செயற்பாடுகளுக்குத் தேவையான உட்கட்டுமான வசதிகளை மேம்படுத்துதல். முன்பள்ளிக் கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்களின் இயலுமையை விருத்தி செய்தலும் ஊக்கப்படுத்தலும். இணைப்பு மொழியான ஆங்கில மொழி வளர்ச்சிக்குத் தேவையான பயிற்சிகளை வழங்குதல். பின் தங்கிய பிரதேசங்களில் கல்வித் தேவைகளுக்கு முன்னுரிமை கொடுக்கும் வகையில் கல்வி நிறுவனங்களின் கூட்டுச் சபை ஒன்றினை தாயக மற்றும் புலம்பெயர்ந்த மக்களின் உதவியுடன் தோற்றுவித்தல். சமூகத்தின் கல்வி வளர்ச்சி குறித்த கரிசனையுள்ள நிறுவனங்கள் தனிநபர்கள் என் போரை இணைத்துச் செயற்படல். சிறுவர்களின் கல்வி தொடர்பாக செயற்படும் நிறுவனங்கள் மத்தியில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துதல் என்பன இதன் செயல்பாடுகளாக அமையும்.

இவை தொடர்பான ஒரு நாள் கருத்தரங்கு, கிளிநொச்சி மத்திய கல்லூரியில் மே 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கிறது. •






ஈழநாடு



# இலங்கையர் உள்ளிட்ட 27 பேர் நைஜீரியாவில் விடுதலை!

கொழும்பு, ஏப். 30

நைஜீரியாவில் உள்ள நைஜர் டெல்டாவில் இருந்து சட்ட விரோதமாக கச்சா எண்ணெய் பெற வந்த நோர்வே நாட்டுக்குச் சொந்தமான "MT Heroic Idun" என்ற கப்பலில் பணியாற்றிய 8 இலங்கையர்கள் உட்பட 27 பேரை நைஜீரிய நீதிமன்றம் நேற்று சனிக்கிழமை விடுவித்ததாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த கப்பலில் 3 மலையாளிகள் உட்பட 16 இந்தியர்கள், 8 இலங்கையர்கள், மற்றும் போலந்து, பிலிப்பைன்ஸை சேர்ந்த 27 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்

கடந்த ஆண்டு ஒகஸ்ட் மேற்கு ஆபிரிக்க நாடான கினியாவின் கடற்படையினரால் கச்சா எண்ணெய் கொள்ளையில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்பட்டு அவர்கள் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பிரதேச சபை முன்னாள் உபதலைவர் சடலமாக மீட்பு!

கொழும்பு, ஏப். 30

கட்டான பிரதேச சபையின் முன்னாள் உப தலைவர் பீற்றர் ஹப்பு ஆராச்சி சடலமாக மீட்கப்பட்டார்.

வண்ணாத்தவில்லு பிரதேசத்தில் உள்ள அவரின் தென்னந்தோப்புக் காவல் சடலம் வீட்டில் மீட்கப்பட்டதாக வண்ணாத்தவில்லு பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று காலை வண்ணாத்தவில்லுவ பிரதேசத்தில் உள்ள தனது காணிக்கு தேங்காய் பறிப்பதற்காக சென்றிருந்தார். இந்த நிலையிலேயே அவர் சடலமாக மீட்கப்பட்டார்.

இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ஐ)

# ரத்மலானை 'குடு அஞ்சு' சர்வதேச பொலிஸால் கைது!

கொழும்பு, ஏப். 30

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடைய ரத்மலானை "குடு அஞ்சு" என்று அழைக்கப்படும் சிங்ஹாரகே சமிந்து சில்வா சர்வதேச பொலிஸாரால் பிரான்ஸில் வைத்து கைது செய்யப்பட்டார். இந்தத் தகவலை பொலிஸ் ஊடக பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

சர்வதேச பொலிஸாரால் சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்ட ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பலின் தலைவரும், பிரபல போதைப்பொருள் கடத்தல்காரருமானசமிந்து சில்வா, வெளிநாட்டில் இருந்து கொண்டு இலங்கையில் போதைப்பொருள் கடத்தல் வர்த்தகத்தை முன்னெடுத்து வந்தார்.

மனைவியுடன் ஏற்பட்ட தகராறின் அடிப்படையில் மனைவி செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் பிரான்ஸில் வைத்து அவர் கைது செய்யப்பட்டார் என்று தெரிய வருகின்றது. (ஐ)

# சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த விரைவான நடவடிக்கை!

## ஜனாதிபதியின் ஆலோசகர் உறுதி

கொழும்பு, ஏப். 30

நாட்டுக்கு வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவும் அவர்களுக்கு சுதந்திரமாக சுற்றுலாப் பயணங்களை மேற்கொள்வதற்கு தேவையான சூழலை உருவாக்குவதற்கு ஜனாதிபதி அலுவலக பிரதானி சாகல ரத்நாயக்க உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் முச்சக்கர வண்டி சாரதிகளால் அசௌகரியத்துக்கு உள்ளாகின்றனர் எனவும், சில குழுக்கள் அவர்களின் சொத்துகளை கொள்ளையிடுவதாக சுற்றுலா ஹோட்டல்களின் உரிமையாளர்களால் முறைப்பிட்டமைக்கு அமையவே சாகல ரத்நாயக்க இந்த ஆலோசனையை வழங்கியுள்ளார்.

கடந்த வாரம், சுற்றுலா ஹோட்டல் உரிமையாளர்கள் மற்றும் சிறிய ஹோட்டல் உரிமையாளர்கள் உள்ளிட்ட குழு ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அலுவலகப் பிரதானி சாகல ரத்நாயக்கவை சந்தித்திருந்தது.

இதன் போது ஹோட்டல்களின் பாதுகாப்பு தொடர்பில் நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றதோடு, நாட்டில் பாதுகாப்பு தொடர்பில் அச்சுறுத்தலான நிலைமை இல்லை என்ற போதிலும் அவதானத்துடன் செயல்பட வேண்டும் என்று சாகல ரத்நாயக்க இதன் போது தெரிவித்தார்.

மேலும் ஹோட்டல்களின் அமைவிடம் தொடர்பில் முழுமையான ஆவண கோப்பை படைத் தரப்பினர் அனைத்து சந்தர்ப்பங்களிலும் பேண வேண்டும் என்றும் சாகல ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார். இறுதியில் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான வேலைத் திட்டத்தை தயாரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. (ஐ)

# ஐ. தே. கவின் மே தின கூட்டத்தில் 'சூம்' வழியில் ஜனாதிபதி உரை!

கொழும்பு, ஏப். 30

ஐக்கிய தேசியக் கட்சியின் மே தின நிகழ்வு நாளை காலை 9 மணிக்கு கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது என அக்கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

பொருளாதாரம், பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பம் போன்றவற்றில் நாட்டை வெற்றிபெறச் செய்யும் நோக்கில் '2048 ஜெயகமு' (2048 வெற்றிகொள்வோம்) என்ற தொனிப்பொருளில் இந்த ஆண்டு மே தினத்தை நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.



கட்சியின் தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சூம் தொழில்நுட்பத்தின் ஊடாக மாநாட்டில் உரையாற்றவுள்ளதாக தெரிவித்த செயலாளர் நாயகம், பிரதித் தலைவர் ருவான் விஜயவர்த்தன தலைமையில் இந்த மாநாடு நடைபெறவுள்ளதாக தெரிவித்தார்.

கட்சியின் உப தலைவர் அகிலவிராஜ் காரியவசம், தேசிய அமைப்பாளர் சாகல ரத்நாயக்க, தவிசாளர் வஜிர அபேவர்த்தன ஆகியோர் அடங்கிய தலைமைத்துவ சபையின் தலைமையில் எதிர்வரும் மே மாதம் மாநாடு நடைபெறவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

கட்சி மே தின கூட்டத்தில் பங்கேற்பதில்லை என்ற முடிவை ஜனாதிபதி எடுத்திருந்தார். எனவே, அவரின் மே தின வாழ்த்து செய்தி மட்டுமே இடம்பெறும் என தெரியவருகின்றது. (ஐ)

# சூடானிலிருந்து 6 இலங்கையர் பாதுகாப்பாக வெளியேற்றம்!

கொழும்பு, ஏப். 30

சூடானில் இருந்து ஆறு இலங்கையர்கள் நேற்று முன்தினம் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர் என்று சவூதியிலுள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்தக் குழுவினர் வெள்ளிக்கிழமை சவூதி - ஜெட்டாவிலுள்ள கிங் பைசல் கடற்படை தளத்தை வந்தடைந்துள்ளனர். சவூதி வெளிநாட்டலுவல்கள் அமைச்சு இதற்கு ஒத்துழைப்பு வழங்கியமைக்காக இலங்கை நன்றி தெரிவித்துள்ளது.

இதேவேளை , சூடானில் சிக்கியுள்ள இலங்கையர்களை வெளியேற்ற ஒத்துழைக்குமாறு இலங்கை அரசாங்கத்தால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையில், உதவி தேவைப்படும் எந்தவோர் இலங்கைப் பிரஜையும் சூடான் துறைமுக நகரத்திலுள்ள அல் ரவுதா ஹோட்டலில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள சவூதி அரேபிய தூதரகத்தை தொடர்பு கொள்ளுமாறு சவூதி வெளிவிவகார அமைச்சு இலங்கை தூதரகத்துக்கு அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பௌசி எம். பியின்மீது ஒழுக்காற்று நடவடிக்கை

## ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

கொழும்பு, ஏப். 30

"பாராளுமன்ற உறுப்பினர் பௌசியின் தீர்மானம் தவறானது. கட்சி முடிவுக்கு எதிரானது. எனவே, அவருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும்." - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார நேற்று அறிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவி தொடர்பிலான திட்டத்தை நடைமுறைப்படுத்தும் யோசனைமீதான வாக்கெடுப்பு பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது வாக்கெடுப்பில் பங்கேற்காதிருக்கும் முடிவை ஐக்கிய மக்கள் சக்தி எடுத்திருந்தது. எனினும், வாக்கெடுப்பில் பங்கேற்ற அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பௌசி யோசனைக்கு ஆதரவாக வாக்களித்தார்.

இந்நிலையில் இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ரஞ்சித் மத்தும பண்டார, "ஐக்கிய மக்கள் சக்திக்கு விழுந்த வாக்குகளாலேயே அவர் பாராளுமன்றம் வந்துள்ளார். கட்சி முடிவுக்கு எதிராக வாக்களித்துள்ளார். இது பற்றி அவரிடம் விளக்கம் கோரப்படும். அவரின் முடிவு தவறானது. எனவே, ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்." - என்றார். (ஐ)

# இராணுவ அதிகாரியும் அமெ. தூதரும் என் மீதான தடையின் பின்னணியில்!

## வசந்த கரன்னகொட சொல்கின்றார்

கொழும்பு, ஏப். 30

தன்னையும் குடும்பத்தினரையும் அமெரிக்காவுக்குள் நுழைய தடை விதித்து அமெரிக்க இராஜாங்க திணைக்களம் விடுத்த அறிவிப்பு தமக்கு ஆச்சரியமளிக்கிறது என்றும் இந்த நடவடிக்கையின் பின்னணியில் 'வேறு ஏதோ இருக்கிறது' எனவும் கூறியுள்ளார் வட மேல் மாகாண ஆளுநரும் முன்னாள் கடற்படை தளபதியுமான வசந்த கரன்னகொட.

மேலும், "இந்த நடவடிக்கை குறித்து எனக்கு சில சந்தேகங்கள் உள்ளன. இதன் பின்னணியில் வேறு ஏதோ இருப்பதாக நம்புகின்றேன். யுத்தம் முடிந்து 14 வருடங்களின் பின்னர் திடீரென அமெரிக்கா தடை செய்ய எடுத்த தீர்மானம் எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

இந்த நடவடிக்கையின் பின்னணியில் முன்னாள் இராணுவ அதிகாரி மற்றும் அமெரிக்க தூதுவர் இருப்பதாக நான் நம்புகிறேன். என்னை தடை செய்ய சில தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் அறிக்கைகளை வெளியுறவுத்துறை பரிந்துரைப்பது வெட்கக்கேடானது.", என்றும் கூறியிருக்கிறார்.



# இலங்கையின் வரலாற்றை ஆய்வு செய்வதற்கு புதிய நிறுவனம் விரைவில் நிறுவ நடவடிக்கை

கொழும்பு, ஏப். 30

இலங்கையின் வரலாற்றை ஆய்வு செய்வதற்காக புதிய நிறுவனம் ஒன்று விரைவில் ஸ்தாபிக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.


தேசிய அருங்காட்சியகம், ஆவணக் காப்பகத் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம், கலாசார முக்கோணம், பல்கலைக்கழகங்கள் மற்றும் றோயல் ஆசிய சங்கம் என்பனவற்றை இணைத்து நிறுவி, அதற்கான சட்ட வரைவை நிறைவு செய்வதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

## ஜனாதிபதி ரணில்

மகாவலி கேந்திர நிலையத்தில் நடைபெற்ற றோயல் ஆசிய சங்கத்தின் 178 ஆவது கொண்டாட்ட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நாம் பதிவு செய்துள்ள வரலாறு இந்தியாவிற்கு இல்லை. நமது மகாவமசத்தைப் போலவே, அரசியல் விமர்சகர்களும் எழுதப்படாத வரலாற்றை ஆராய்ந்தே இந்திய வரலாற்றை விளக்குகிறார்கள். இருப்பினும், வரலாற்றுக்கு ஒரு பாரம்பரியம் உள்ளது. அந்த வரலாற்றை நாம் தொடர வேண்டும்.

இது எங்களுக்கு மிகவும் முக்கியமானது. மேலும், அந்த வர லாற்றைப் பாதுகாக்க நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும். வரலாற்றை ஆராய்வதன் மூலம் வருங்கால வரலாற்றைப் பாதுகாக்கும் றோயல் ஆசிய சங்கத்தின் முயற்சிகள் பாராட்டப்பட வேண்டிய பணியாகும். றோயல் ஆசிய சங்கத்தின் சில சஞ்சிகை களின் மூலப் பிரதிகளைப் படித்திருக்கிறேன்.



நான் முதலில் செய்ய விரும்புவது வரலாற்றுக்கான ஒரு கல்வி நிறுவனத்தைத் தொடங்குவதுதான். எனது பதவிக்காலம் முடிவதற்குள் இது குறித்து கலந்துரையாடி முடிவு எடுக்க வேண்டும். அதற்காக பல்கலைக்கழகங்கள், தொல்பொருள் திணைக்களம் மற்றும் றோயல் ஆசிய சங்கம் ஆகியவற்றுடன் கலந்துரையாட வேண்டிய இறுதி வரைவை நாங்கள் தயாரித்து வருகிறோம். எதிர்காலத்தில் இந்தத் துறையின் பணிகளுக்கு நிதி மற்றும் அரசாங்க ஆதரவை நாங்கள் வரலாற்று நிறுவனம் மூலம் வழங்குவோம் என ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# வட, கிழக்கை சிங்கள மயமாக்கவே விகாரைகள் அமைக்கும் திட்டம்!

## கருணாகரம் எம். பி. குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, ஏப். 30

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பௌத்த ஆலயங்களை நிறுவி அவற்றை சிங்கள மயப்படுத்தும் வேலைத்திட்டத்தை அரசாங்கம் முன்னெடுத்து வருகிறது என்று மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

போரதீவுப்பற்று - விவேகானந்தபுரம் பகுதியில் இடம்பெற்ற அபிவிருத்தி திட்டத்தின் தொடக்க நிகழ்வில் பங்கேற்று பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த நிகழ்வின்போது விவேகானந்தபுரம் பொதுநூலகத்திற்கான ஒரு தொகுதி நூல்களும் வழங்கப்பட்டன. அத்துடன், அப்பகுதி மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் குறித்தும் கேட்டறிந்துகொள்ளப்பட்டது.

விவேகானந்தபுரம் கிராமமான போரதீவுப்பற்று பிரதேசத்தில் பின்தங்கிய பகுதியென அடையாளப் படுத்தப்பட்டுள்ளதன் காரணமாக லண்டன் வோள்தஸ்ரோ ஸ்ரீகற்பக விநாயகர் ஆலயத்தால் இந்தக் கிராமம் தெரிவுசெய்யப்பட்டுவேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஊரெழுவில்...

கிழமை மாலை 5 மணியளவில் ஊரெழு பர்வதவர்த்தனி அம்மன் கோயில் அருகே இந்த விபத்து இடம் பெற்றது. இதில், உமாதேவி கனகநாய கம் (வயது-73) என்பவரே உயிரிழந்தார்.

சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

சைக்கிளில் பயணித்த பெண் அம்மன் கோயில் அருகேயுள்ள வீதி கடவையருகே நின்றுள்ளார். அப்போதே பின்புறமாக வேகமாக வந்த பட்டா ரக வாகனம் அவரை மோதித் தள்ளியது. இதில் அந்தப் பெண் தலையில் படுகாயமடைந்தார்.

விபத்து ஏற்பட்ட இடத்தில் அப்பகுதி மக்கள் அதிகளவில் கூடிய நிலையில், விபத்தை ஏற்படுத்திய பட்டா ரக வாகனத்தில் இருந்தவர்கள் தாமே அவரை மருத்துவமனையில் சேர்ப்பிப்பதாகக் கூறி அந்தப் பெண்ணை வாகனத்தில் ஏற்றிக்கொண்டு அங்கிருந்து தப்பியுள்ளனர்.

விபத்து நடந்து சுமார் இரண்டரை மணிநேரம் கழித்தே சம்பவ இடத்துக்கு பொலிஸார் வந்துள்ளனர்.

இதனிடையே யாழ். போதனா மருத்துவமனையில் சேர்ப்பித்த விபத்தை ஏற்படுத்திய பட்டா வாகனத்தில் இருந்தவர்கள், பின்னர் அங்கிருந்து நழுவியுள்ளனர்.

மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பெண் சிகிச்சை பலனின்றி நள்ளிரவு (நேற்று) கடந்த பின்னர் உயிரிழந்தார். மரண விசாரணைகளை தொடர்ந்து சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

இதனிடையே, உயிரிழந்தவரின் கணவர், மருத்துவமனையில் சேர்க்கப்பட முன்னர் அவர் அணிந்திருந்த சங்கிலி, காப்பு, மோதிரம் தோடு என்று 6 பவுண் நகைகள் திருடப்பட்டது என்று கோப்பாய் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, விபத்தை ஏற்படுத்திய பட்டா ரக வாகனம் நேற்று மீட்கப்பட்டதாகவும், சந்தேகநபர்களை தேடி வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)

## மகிந்தவை...

மகிந்த ராஜபக்ஷ தற்போது தீவிர அரசியல் செயல்பாடுகளை முன்னகர்த்தி வருகின்றார். இதனால், அவரின் இல்லத்துக்கு அடிக்கடி முக்கிய பிரமுகர்கள் வந்து செல்கின்றனர்.

இவ்வாறு அடிக்கடி வந்து செல்கின்றவர்களில் ஒருவராக இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங்கும் உள்ளார். விஜயராமையிலுள்ள மகிந்தவின் வீட்டுக்கு செல்லும் இவர் நீண்டநேரம் அவருடன் பேச்சில் ஈடுபட்டும் வருகிறார் என்றும் தென்னிலங்கை ஊடகங்கள் கூறியுள்ளன. (ஐ)

## அமைச்சு...

விக்ரமசிங்கவால் கடந்த ஆண்டு ஜூலை 25ஆம் திகதி முதல் விடுக்கப்பட்டது. அமைச்சு பதவிகளை ஏற்குமாறு நாம் கூறவில்லை. மாறாக வேறு பல வழிகளிலும் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்புகளை வழங்க முடியும். சர்வதேச நாணய நிதியத்தை நாட வேண்டும் என்பதை எதிர்க் கட்சி தொடர்ந்தும் வலியுறுத்தி வந்தது.

இவ்வாறான ஒப்பந்தங்கள் குறித்த பேச்சுகள் முன்னெடுக்கப்படும்போது, ஒப்பந்தம் கையெழுத்திடப்படும் வரை அதனை எம்மால் வெளிப்படுத்த முடியாது. எந்தவோர் ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்ட பின்னரே அரசாங்கம் என்ற ரீதியில் எம்மால் அதனை நாட்டுக்கு வெளிப்படுத்த முடியும். எனினும், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பாராளுமன்றத்தில் தொடர்ச்சியாக இது தொடர்பில் தெரிவித்திருக்கின்றார்.

அவ்வாறான சந்தர்ப்பங்களின் போது வரி அதிகரிப்பு தொடர்பிலும் பாராளுமன்றத்துக்கு தெரியப்படுத்தினார். அரச வருமானத்தை அதிகரிப்பதற்காக வரி அதிகரிக்கப்படுவது சாதாரண விடயமாகும். எனினும், தற்போது நாம் எதிர்கொண்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடிகள் காரணமாக அதன் வீதத்தை அதிகரிக்க வேண்டி ஏற்பட்டுள்ளது." - என்றார். (ஐ)

# கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டதில் மூளாயில் ஒருவர் படுகாயம்!

யாழ்ப்பாணம், ஏப். 30

மூளாயில் நேற்று ஒருவர் கூரிய ஆயுதத்தால் குத்தப்பட்டு படுகாயமடைந்தார். இதையடுத்து அந்தப் பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டது.

நேற்று பகல் இடம்பெற்ற இந்த சம்பவத்தையடுத்து மூளாய் - வேரம் பகுதியில் பெருமளவு பொலிஸார் குவிக்கப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

இதில், காயமடைந்த 43 வயது நபர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை பொலிஸார் தாக்குதலை நடத்தியவர்களை தேடி வருகின்றனர். (ஐ)

## சீரணி...

இந்நிலையில் ஆலய வரலாற்றில் முதன் முறையாக நேற்று ஆலய முன்றிலில் 1008 பானைகளில் விசேட பொங்கல் பொங்கி வழிபாடுகள் நடைபெற்றன.

யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பக்தர்கள் வருகை தந்து பொங்கல் பொங்கி படைத்து, பக்தர்களுக்கு வழங்கியிருந்தனர். (ஐ)

## மின்சாரம்...

உயிரிழந்தார்.

ஆலயத்தின் கதவு வழியாக மின் வடத்தை இந்த இளைஞர் வெறும் கையால் எடுத்துச் சென்றபோதே மின்சாரம் தாக்கியது. இதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தினர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக வவுனியா பொது மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஐ)

## 52 அரச நிறுவனங்களுக்கு...

அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட வசதியை நடைமுறைப்படுத்துவது தொடர்பான தீர்மானம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளதால் மாத்திரம் சட்ட அந்தஸ்து கிடைத்துவிடாது. நிபந்தனைகளின் ஒருசிலவற்றை செயல்படுத்த இராச்சியங்களுக்கு இடையிலான ஒப்பந்தங்களை சட்டமாக்குவது தெ ாடர்பில் "இராச்சியங்கள் தொடர்பான சட்டத்தின்" 157ஆவது உறுப்புரையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாணய நிதியத்தின் தீர்மானங்களை செயல்படுத்துவது தொடர்பில் ஒரு சில சட்டங்கள் இயற்றப்படும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். நீடிக்கப்பட்ட முழுமையான நிதி வசதியை பெற்றுக் கொள்ள வேண்டுமானால் சர்வதேச நாணய நிதியம் பிரதானமாக முன்வைத்துள்ள மத்திய வங்கி சுயாதீனப்படுத்தல் சட்டம், ஊழல் ஒழிப்பு சட்டம் ஆகியன இயற்றப்பட வேண்டும். நாடு என்ற ரீதியில் வங்குரோத்து அடைந்துள்ள பின்னணியில் சர்வதேச நாணய நிதியத்தை நாடியுள்ளோம் என்பதை அரசியல் தரப்பினர் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு கிடைக்கப் பெற்றவுடன் ராஜபக்ஷர்கள் புனிதர்களாக்கப்பட்டுள் ளார்கள். நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளி சர்வதேசத்திடம் கையேந்தும் நிலையை ராஜபக்ஷர்கள் தோற்றுவித்தார்கள் என்பதை மக்கள் மறக்கக்கூடாது. 2019ஆம் ஆண்டு மொத்த தேசிய உற்பத்தி 89 பில்லியன் டொலராக காணப்பட்டது. 2020 ஆம் ஆண்டு 85 பில்லியன் டொலராகவும்,2022 ஆம் ஆண்டு 75 பில்லியன் டொலராகவும் குறைவடைந்தது.

குறுகிய காலத்தில் பொருளாதார பாதிப்பில் இருந்து மீள வேண்டுமாயின் சர்வதேச நாணய நிதியத்தின் ஒருசில நிபந்தனைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். நிபந்தனைகளை செயல்படுத்தினால் நடுத்தர மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணங்கள் இரத்து செய்யப்படும் என குறிப்பிடப்படுவது அடிப்படையற்றது.

நடுத்தர மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணங்களை எட்டு மடங்காக அதிகரிக்குமாறு நாணய நிதியம் வலியுறுத்தியுள்ளது. சமுர்த்தி உள்ளிட்ட நலன்புரி திட்டங்கள் மீளாய்வு செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது.

வரி கொள்கை மறுசீரமைப்பு தொடர்பில் முன்வைக்கப்பட்ட நிபந்தனைகளை அரசாங்கம் விரைவாக செயல்படுத்தியுள்ளது. அரச நிர்வாக கட்டமைப்பு தொடர்பில் முன்வைக்கப் பட்ட மூன்று பிரதான நிபந்தனைகளை அரசாங்கம் இதுவரை செயல்படுத்தவில்லை - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# மசகு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க சீனா திட்டம்!

கொழும்பு, ஏப். 30

**இலங்கையில் எரிபொருள் விநியோக மற்றும் விற்பனை செயல்பாடுகள் வெற்றியளித்தால் மசகு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றை நிறுவ எதிர்பார்த்துள்ளதாக சீனா தெரிவித்துள்ளது. இத்திட்டம் வெற்றியளிக்கும் பட்சத்தில் இவ்வாண்டுக்குள் 120-140 மில்லியன் டொலர் முதலீட்டை மேற்கொள்ள முடியும் என்றும் சீனா குறிப்பிட்டுள்ளது.**

இலங்கைக்கான சீனத் தூதுவர் ஷீ ஷென் ஹொங் அஸ்கிரிய பீட மகா நாயக்க வரகாகொட ஞானரத்ன தேரர், மல்வத்து பீட மகாநாயக்க திப்பட்டுவாவே சித்தாரத்த சுமங்கல தேரர் ஆகியோருடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இவ்விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தேரர்களுக்கு மேலும் தெளிவு படுத்தியுள்ள சீனத் தூதுவர்,

கடந்த வாரம் சீனாவின் சினொபெக் நிறுவனத்தின் தலைவர் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார். அவரால் முன்னெடுக்கப்பட்ட பேச்சுகளின் அடிப்படையில் விரைவில், சீன எரிபொருளைக் கொண்ட 150 எரிபொருள் நிரப்பும் நிலையங்களை இலங்கையில் நிறுவ எதிர்பார்த்துள்ளோம்.

இந்த வேலைத்திட்டம் வெற்றியளித்தால், நாளாந்தம் 4 மெற்றிக் தொன் மசகு எண்ணெண் சுத்திகரிப்பை நாட்டில் முன்னெடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த செயல்பாடுகள் சிறப்பாக இடம்பெற்றால், இவ்வாண்டுக்குள் 120 - 140 மில்லியன் டொலர் முதலீடுகளை மேற்கொள்ள முடியும்.

நாம் அறிந்த வகையில் இலங்கை ஒரேயொரு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மாத்திரமே காணப்படுகிறது. அது 1960ஆம் ஆண்டு நிறுவப்பட்டதாகும். அதன் இயந்திரங்களும் மிகப் பழமை வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன.

எனவே, புதிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமொன்றை இலங்கை ஸ்தாபிக்க முடிந்தால் அது இலங்கையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் என்று நம்புகின்றோம். இதனை அமைப்பதன் ஊடாக நூற்றுக்கணக்கான வேலை வாய்ப்புக்களும் உருவாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதே வேளை, தேரர்களுடனான சந்திப்புக்களின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட சீனத் தூதுவர், இலங்கை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவ வேண்டும் என்பது சீன பெற்றோலிய நிறுவனத்தின் தீர்மானமாகும். அரசாங்கம் என்ற ரீதியில் இரு நாடுகளுக்கிடையில் இணக்கப்பாடு எட்டப்பட்டால் அது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இதன் பிரதிபலன் நுகர்வோரையே சென்றடையும் - என்றார். (ஐ)

# ஜனாதிபதி வீட்டுக்கு தீ; சிறீரங்கா சந்தேகநபர்!

## நீதிமன்றுக்கு அறிவித்தது சி. ஐ. டி.



கொழும்பு, ஏப். 30

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டுக்கு தீ வைக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜே. சிறீரங்காவும் ஒருவர் என்று குற்றப் புலனாய்வு பிரிவு பொலிஸார் நீதிமன்றத்துக்கு தெரிவித்துள்ளனர்.

இதனடிப்படையில், சிறீரங்காவை எதிர்வரும் மே 3ஆம் திகதி நீதிமன்றில் முற்படுத்தவேண்டும் என கொழும்பு கோட்டை நீதிவான் திலினி கமகே உத்தரவிட்டுள்ளார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிறீரங்கா 2011 இல் வவுனியாவில் இடம்பெற்ற விபத்து தொடர்பில் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வருடம் ஜூலை 9ஆம் திகதி ஜனாதிபதியின் இல்லத்துக்கு இனந்தெரியாத நபர்கள் தீ மூட்டியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தோட்ட தொழிலாளி சடலமாக மீட்கப்பட்டார்!

நுவரெலியா, ஏப். 30

பொகவந்தலாவை, பொக வானை தோட்டத்தின் 11ஆம் இலக்க தேயிலை மலையி லிருந்து ஆணொருவரின் சடலம் நேற்று காலை மீட்கப்பட்டுள்ளது.

தேயிலை மலைக்கு தொழிலுக்காக சென்ற, பொக வானை தோட்டத்தைச் சேர்ந்த 78 வயதுடைய செல்லன் ராமசாமி என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

சட்ட மருத்துவ அதிகாரியின் பிரேத பரிசோதனைக்காக சடலம் கிளங்கன் மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொகவந்தலாவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ஐ)

# சிங்கள மொழி பாடசாலையை திறந்து விட்டு இனநல்லிணக்கம் என்பது ஆச்சரியமளிக்கிறது

## முன்னாள் எம். பி. சிறீநேசன்

நிந்தவூர், ஏப். 30

இன நல்லிணக்கம் என்பது ஒரு சிங்கள மொழிப் பாடசாலை திறக்கப்படுவதன் மூலமாக ஏற்பட்டு விட்டது என்று கிழக்கு ஆளுநர் கூறியிருக்கின்றமை ஆச்சரியமளிக்கிறது என்று மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர் ஜி. சிறீநேசன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்கள மொழி பாடசாலை ஒன்றை திறந்து வைத்த கிழக்கு ஆளுநர் இன நல்லிணக்கத்தை இதன் மூலம் ஏற்படுத்தியுள்ளார் என்று கூறியிருந்தார். இதற்கு பதிலளிக்கும் முகமாகவே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், மட்டக்களப்பில் 1990ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்தப் பாடசாலை இயங்கியுள்ளது. தற்போது அப்பாடசாலை திறக்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. ஆனால், இன நல்லிணக்கம் என்பது ஒரு சிங்கள மொழிப் பாட சாலை திறக்கப்படுவதன் மூலமாக ஏற்பட்டு விட்டது என்று ஆளுநர் கூறுவதுதான் ஆச்சரியமாக உள்ளது.

இந்த ஆளுநர் கிழக்கு மாகாணத்துக்கு நியமிக்கப்பட்ட பின்னர் மேற்கொண்ட செயல்பாடுகள் ஒரு தலைப்பட்சமானதாக அமைந்திருந்தன. பௌத்த மயமாக்கல், காணிகள் விவகாரம் என்பன தாம் சார்ந்த சிங்கள சமூகத்துக்கு சாதகமானதாகக் காணப்பட்டன. ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மேய்ச்சல் தரைக் காணிகளில் அம்பாறை, பொலநறுவை மாவட்ட சிங்களவர்களை சேனச் செய்கை என்ற பெயரில் குடியேற்றியமை, பட்டிப்பளையின் கெவுளியாமடு பகுதியில் முந்திரிச் செய்கை என்ற போர்வையில் சிங்களர்களுக்குக் காணிகளை வழங்கியமை, வாகரையின் - காரமுனையில் சிங்களவர்களைக் குடியேற்ற முயன்றமை போன்ற செயல்பாடுகள் இவரின் ஆளுகைக் காலத்தில்தான் நடைபெற்றன.

இவற்றை விட கரடியனாறு குசலானமலை, வடமுனை நெடிய கல் மலை, திருகோணமலையில் கன்னியா, திருக்கோணேஸ்வரர் ஆலய வளாகம், புல்மோட்டை பொன்மலை, அம்பாறையில் சங்கமன் கண்டி, மாணிக்கமடு, பொன்னன்வெளி போன்ற பல இடங்களில் சிங்கள பௌத்த மயமாக்கலை மேற்கொள் ளும் பல செயல்கள் கிழக்கு மாகாண ஆளுநர் ஜகம்பத் தின் நியமனத்தின் பின்னர் கடுமையாக நடைபெற்றன - நடைபெறுகின்றன.

தமிழ், முஸ்லிம் மக்களின் பாரம்பரிய வாழ்விடங்கள், கலாசார வழிபாட்டுத் தலங்கள் என்பவற்றைக் குறி வைத்து ஆக்கிரமிக்கும் சிங்கள - பௌத்த மயமாக்கல் செயல்பாடுகள் கிழக்கு ஆளுநரின் காலத்தில் முனைப்படைந்துள்ளன. மேலும் ஏறாவூரில் பாரம்பரியமாக புன்னைக்குடா வீதி என்ற பெயரில் அழைக்கப்பட்ட வீதியை சிங்களப் பெயரால் நாமம் சூட்ட இந்த ஆளுநர் முயன்றார் என்று அறியப்படுகிறது. பின்னர் அது மக்கள் எதிர்ப்பாலும், நசீர் அகமட் அமைச்சரின் தலையீட்டாலும் முறியடிக்கப்பட்டுள்ளது. இப்படியான செயல்களில் ஈடுபட்டு இன நல்லிணக்கத்திற்குக் குந்தகம் விளைவித்த கிழக்கு ஆளுநர் ஒரு சிங்கள மொழிப் பாடசாலையை மட்டக்களப்பில் திறந்து வைத்ததன் மூலமாக இன நல்லிலக்கத்தை ஏற்படுத்தியதாகக் கூறுவதை என்னவென்று கூற முடியும்.

சிங்கள - பௌத்த அடிப்படைவாத அரசியல்வாதிகளாலோ, அதிகாரிகளாலோ ஒரு போதும் பல்லின மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது என்பதே 75 ஆண்டு கால வரலாற்றுப் படிப்பினையாகும். இந்தப் படிப்பினைக்குள் பாரபட்சமான போக்குடைய கிழக்கு ஆளுநரும் ஒருவராகியுள்ளார். இவருக்குத் தலையாட்டவென்று சில தமிழ் அடிவருடிகளும் உள்ளார்கள் என்பது கசப்பான உண்மையாகும் - என்றார். (ஐ-6)

நேஷனல் இன்ஸ்டிட்டூட் ஆப் ஜர்னலிசம்
மத்திய அரசு மனிதவளத் துறையின் கீழ் இயங்கும் தொழிற்கல்வி மற்றும் திறன் மேம்பாட்டுக் குழுமத்துடன் இணைந்து
வழங்கும்
ஊடகவியல்
ஆறுமாத டிப்ளமோ வகுப்பு
இணையவழியில் 48 வகுப்புகள்
பிரதி சனி-ஞாயிறு மாலை 5:30-7:30 மணிவரை
பாடத்திட்டம்
எழுத்துமொழிப் பயிற்சி
தலைப்பு உருவாக்கம்&சுருக்கம்
உண்மையைச் சரிபார்த்தல்
தொடர்பு வலையமாக்கம்
கேமரா முன்னிலை
செய்திக் கேந்திரத் தொடர்பு
பேட்டி & கேள்வி முறைகள்
தொகுப்பு & அறிக்கை
கட்டண விவரம்
வகுப்புகள் : 6000 ரூபாய் [மாதம் 1000]
தேர்வு & சான்றிதழ் : 1000/- + 500/-
கட்டணத்தைப் பகுதிகளாகவும் செலுத்தலாம்!
பயன்கள்
மத்திய அரசு அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்
மூத்த ஊடகவியல் வல்லுனர்கள் மூலம் பயிற்சி
நேரடி செயல்முறை வகுப்புகள்-களப்பயிற்சி
உடனடி பயிற்சிப் பணி & வேலைவாய்ப்பு
இணையவழியில் இன்றே இணையுங்கள்
+91-9962491333
044-4767 5077
learnjournalism.nj@gmail.com
தேசிய ஊடகவியலாளர் நலச்சங்கத்தின் முன்னெடுப்பு
#41/19, SOUTH USMAN ROAD, T.NAGAR, CHENNAI-600017

# புறாக்களை சுட்டுத் தின்ற மூன்று இளைஞர்கள் கைது!

கொழும்பு, ஏப். 30

வீட்டில் வளர்க்கப்பட்ட புறாக்களை திருடி, அவற்றை நெருப்பில் சுட்டு சாப்பிட்டனர் என்ற குற்றத்தில் மூவரை களுத்துறை - அளுத்கமை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதானவர்கள் தமது செயலை டிக் டொக் காணொலியாக உருவாக்கி, புறாக்களின் உரிமை யாளருக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

அளுத்கம பொலிஸாருக்கு செய்யப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம், விசாரணைகளை முன்னெடுத்திருந்த பொலிஸார் மூன்று சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர். கடந்த 26ஆம் திகதி அளுத் கம தர்கா நகரம், இஸ்தபுள்ள வீதி பகுதியில் வீடொன்றில் புறாக்கள் இருந்த கூண்டை உடைத்து இந்தச் செயலை இளைஞர்கள் மேற்கொண்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் மூவரும் இன்று களுத்துறை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட வுள்ளனர். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.04.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.